இன்பமே எந்நாளும்

இரா.மோகன்

இன்பமே எந்நாளும்

வாழ்வுடன் போராட மன வலிமை தரும்
60 கட்டுரைகளின் தொகுப்பு

முனைவர் இரா. மோகன்
தலைவர் & ஒருங்கிணைப்பாளர்
தமிழியற் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

விற்பனை உரிமை

மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை-625 001
தொலைபேசி : அலுவலகம் - 0452 - 345971 வீடு - 560517
மின்அஞ்சல் : meenakshiputhakam@hotmail.com

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 2000
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 2002

விலை : ரூ. 50.00

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	இன்பமே எந்நாளும்
ஆசிரியர் பெயர்	:	இரா. மோகன்
நூலின் தன்மை	:	கட்டுரைகள்
இரண்டாம் பதிப்பு	:	ஏப்ரல், 2002
தாளின் தன்மை	:	வெள்ளைத்தாள்
நூலின் அளவு	:	18 × 12.5 செ.மீ.
மொத்தப் பக்கம்	:	160
நூலின் விலை	:	ரூ.50.00
நூற்கட்டுமானம்	:	அட்டைக் கட்டு
அச்சு எழுத்து அளவு	:	12புள்ளி
அச்சிட்டோர்	:	ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி
வெளியீடு	:	அறிவகம், மதுரை – 19.

Selling Rights

MEENAKSHI PUTHAKA NILAYAM

Mayura Complex, 48, Dhanappa Mudali Street, MADURAI - 625 001.
Phone : Office - 0452 - 345971 Residence - 560517
E.Mail : meenakshiputhakam@hotmail.com

சில சொல்

வங்கம் தந்த தங்கம் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்றால், வங்கம் தந்த சிங்கம் விவேகானந்தர் எனலாம். அவரது வீர உரைகளில் விழிப்புணர்வும் எழுச்சியும் நம்பிக்கையும் போர்க் குணமும் விடாமுயற்சிக்கான தூண்டுதலும் எப்போதும் களிநடம் புரிந்துகொண்டிருக்கும். தனிமனிதனும் தாய்த் திருநாடும் முன்னேற அஞ்சாமையும் ஆண்மையும் ததும்பி நிற்கும் கருத்துக்களை மொழிந்த அருளாளர் அவர். "உழைப்பே வடிவெடுத்த, சிங்கத்தின் இதயத்தின் படைத்த ஆண்மகனையே திருமகள் நாடிச் செல்கிறாள்" என்பது அவரது அழுத்தம் திருத்தமான கருத்து. வீரத் துறவி விவேகானந்தரின் சிந்தனைகளை வழிமொழியும் பாங்கிலும், படிப்பவர் மனத்துள் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும் வகையிலும் அனுபவத் தொடர் ஒன்றினை எழுதவேண்டும் என்ற எண்ணம் – விருப்பம் – என் நெஞ்சில் நீண்ட காலமாகவே இருந்து வந்தது. அதற்கு ஒரு நல்ல வடிகாலாக அமைந்தது 'மதுரை மணி' நாளிதழ். தொடர்ந்து 75 நாட்கள் 'இன்பமே எந்நாளும்' என்ற பெயரில் என் சிந்தனைகளை அதில் எழுதிவந்தேன். அவற்றுள் 60 சிந்தனைகளை மட்டும் தேர்வு செய்து ஒரு நூல் வடிவில் இப்போது உங்கள் இடையே உலவ விட்டுள்ளேன். இந்நூல் உருவாவதற்கு அடித்தளம் இட்டவர் – அகரம் போல் அமைந்தவர் – என் நண்பர், 'மதுரை மணி' நாளிதழின் ஆசிரியர் சொடயஸ் காந்தி ஆவார். அவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும்.

அறுபது சிந்தனைகளைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில்

எனக்கு உற்றுழி உதவியவர்கள் முனைவர் நிர்மலா, முனைவர் தூ.சேதுபாண்டியன். முனைவர் வீ.காந்திமதி, கவிஞர் இரா. இரவி, பேராசிரியர் இ.பேச்சிமுத்து என்னும் ஐவர் ஆவர். இந்த ஐம்பெருங்குழுவினருக்கு என் நன்றியறிதலை இத்தருணத்தில் உரித்தாக்குகிறேன்.

முத்தாய்ப்பாக, இந்நூலுக்கு நல்லதோர் அணிந்துரையை நல்கியிருப்பவர் எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி ஆவார். நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் கொண்ட இந்தப் படைப்பாளியின் அன்புமலி அணிந்துரையால் என் எழுதுகோலே ஒரு சுற்றுப் பெருத்துப் போய்விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! நூலுக்கு அழகியதோர் நுழைவாயிலாக என் இனிய நண்பர், எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமியின் அணிந்துரை அமைந்திருக்கிறது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

'மதுரை மணி' நாளிதழில் இச்சிந்தனைகள் தொடராக வெளிவந்தபோதே நேரிலும் தொலைபேசியிலும் மடல் வாயிலாகவும் மனமாரப் பாராட்டியவர்கள் மிகப்பலர் ஆவர். அவர்களுள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மு.சாலிகு, முன்னை அமைச்சர் முனைவர் கா.காளிமுத்து, மதுரை ஆதீனம் ஆகியோர் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் ஆவர். அவர்களுக்கு நன்றி கூற என்றென்றும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் கூறு நல்லுலகம் இம்முயற்சியை வரவேற்றுப் போற்றும் என மனமார நம்புகிறேன்.

மதுரை – 625021 **இரா.மோகன்**

7.8.2000

அன்போடு ஓர் அணிந்துரை

பேரளத்தில் நடக்கும் கலை இலக்கிய விழாவுக்குப் போவதற்காக மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் வந்து இறங்குகிறேன். அரசு விரைவுப் பேருந்துகள் நிற்குமிடம் போனால்... அதிசயமாக முனைவர் இரா.மோகன் அவர்களும், அவரது துணைவியார் முனைவர் நிர்மலா மோகன் அவர்களும் இருந்தனர்.

இனிய ஆச்சரியம். இன்ப அதிர்வு.

பட்டிமன்றப் பேச்சாளர்கள். நாடறிந்த நல்ல சொற் பொழிவாளர்கள். கல்லூரிப் பேராசிரியர்கள்.

சந்தித்த பரவசப் பெருந்தத்தளிப்பில் பேசிக்கொண்டிருந்தோம். ஆவலும் ஆர்வமுமாக உரையாடினோம்.

அப்போது—

டாக்டர் இரா.மோகன் அவர்கள், அச்சிலிருக்கும் தமது நூலைப் பற்றிக் கூறினார்.

"இதுக்கு நீங்கதான் அணிந்துரை தரணும்" என்றார்.

நிஜமாகவே வெலவெலத்துப் போனேன்.

"முடியவே முடியாது!" என்று பதற்றத்துடன் மறுத்தேன். "முனைவர்களாகிய மிகப்பெரிய தமிழறிஞர்களிடம் அணிந்துரை கேளுங்களேன்" என்று பம்மிப் பதுங்கினேன். விட்டுவிலகி நழுவினேன். ஆனால், அவர் விடுவதாக இல்லை.

"ஒரு படைப்பிலக்கியவாதியோட அணிந்துரைதான் வேணும். அது நீங்கதான் தரணும்" என்று ஒரேயடியாகச் சாதித்தார்.

அந்த அன்புக்கட்டளையை மீறுகிற திராணி, என் மனசில் இல்லை.

'சரி' என்று ஒப்புக்கொண்டேன்.

∴ ∴ ∴

"தேவதை போல எழுதுகிறவன் கிளிப்பிள்ளையைப் போலப் பேசுவான்" என்றொரு ஆங்கிலப்பழமொழி சொல்வார்கள்.

அற்புதமாக இலக்கியம் படைக்கிற ஆற்றல் மிக்க ஒருவரை... மேடையேற்றிப் பேசச்சொன்னால்... 'தத்தக்கா, புத்தக்கா' வென்று தடுமாறித் தத்தளிப்பார். 'மொண மொண' வென்று வார்த்தைகளைப் போட்டு மென்று துப்பவும் தெரியாமல், விழுங்கவும் முடியாமல் கிடந்து அல்லாடுவார்.

கதைகள் சொல்லி, கவிதைகள் பாடி... வார்த்தைகளின் மூலமாகவே வாழ்க்கையை – உணர்ச்சியை – ஓவியப்படுத்தி சரம் சரமாக சொற்களைப் பொழிகிற ஆற்றல் மிக்க இலக்கிய உரை வீச்சாளரிடம் போய்... பேனாவைத் தந்து, காகிதம் தந்து, 'ஏதாவது எழுதித் தாருங்கள்' என்றால், சப்த நாடியே அடங்கித் திகைப்பார். "என்னையா? நானா? எழுதவா? என்னத்தை?" என்று கேள்விமேல் கேள்வியைப் போட்டுப் பதைப்பார். வேறு வழி யில்லாமல் எழுதினால்... உயிரற்ற சவ எழுத்தாக இருக்கும். ஒளியற்ற லிபிகளின் ஒழுங்கற்ற அணிவகுப்பாக இருக்கும். அபத்தமான வார்த்தைக் கோர்வையாக இருக்கும். 'வச, வசா' வென்று வரைந்து தள்ளியிருப்பார்.

நல்ல எழுத்தாளன் மோசமான பேச்சாளராகவும், நல்ல பேச்சாளன் அபத்தமான எழுத்தாளனாகவும் இருக்கும் இயல்புகளை மீறிய விதி விலக்காகச் சிலர் உண்டு. அவர்களில் ஒருவர், முனைவர் இரா.மோகன் அவர்கள்.

சிறந்த பேச்சாளராக – நாடறிந்த பட்டிமன்ற நடுவராக அறியப் பட்டிருக்கிற இவர், நல்ல எழுத்தாளராகவும் இருக்கிற இனிய முரணை 'இன்பமே எந்நாளும்' என்ற இந்த நூலில் அறிய முடிகிறது. இது எனக்குப் புதிய அனுபவம்.

ஏற்கெனவே இவர் நாற்பதுக்கும் மேலான நூல்களை எழுதியிருக்கிறார் என்று மதுரை நண்பர் ஒருவர் நேற்று ஒரு தகவலைச் சொன்னார். 'அட, அப்படியா!' என்று அசந்து போனேன்.

'இன்பமே எந்நாளும்' என்ற இந்த நூலை முழுக்க வாசித்து விட்டேன். ஒரு மாலையில் ஐந்து மணிக்கு வாசிப்பதற்காக உட்கார்ந் தேன். இரவில் முடித்துவிட்டேன். வசீகரமாக இருந்தது. வாசிப் போட்டம் இருந்தது. மெல்ல மெல்லக் கரைந்தேன். சுகமான வாசிப்பு. இனிமைக் கரைசல். வெறும் இனிமைக் கரைசல் மட்டுமல்ல...

வெட்டிவேர் வாசத்தைப்போல மூலிகைப் பயனுள்ள வாசம். தேனின் இனிமையைப் போல மருத்துவக் குணமான தித்திப்பு.

∴ ∴ ∴

இது என்ன வகை? சிறுகதையா? நாவலா? கவிதை வீச்சா? செய்தித் துணுக்கா? கட்டுரையா? சிந்தனைச் சிதறலா? கருத்துக் கொத்தா?

என்ன இலக்கிய வகை, இது?

சொல்லத் தெரியவில்லை எனக்கு. ஆயினும், சுவையாக இருக்கிறது என்பதென்னவோ உண்மை. பயனுள்ளதாக இருக்கிறதென்பதுவும் சத்தியம்.

அறுபது தலைப்புகள். ஒவ்வொன்றும் இரண்டுபக்கங்களுக்கு மிகாமல். அதற்குள் ஒரு செய்தி. அதையொட்டிய சிந்தனை யோட்டம், அதன் தொடர்புடைய ஒரு சிறிய கதை என்று ஒருவகையான பின்னல். புதுமாதிரியாகத் தொடுக்கப்பட்ட மாலை. அந்த மாலையில் ஒளியும்... வாசமும்... அழகும்.

'மு.வ.கூறும் மூன்று இன்பங்கள்' என்று துவங்குகிறது. 'இந்தியா வளர்ந்த நாடாக வேண்டும்' என்று நிறைகிறது.

'நமக்குள் நாமே' என்ற தலைப்புக்குள் அசத்தலான சிந்தனைத் தெறிப்பு. முற்றிலும் புதிய சிந்தனை. உடல் உறுப்புக்களின் இயங்கும் முறைமையின் பண்பு நலனிலிருந்து மனிதன் கற்றுக் கொள்வதற்கான உண்மைகள் பொதிந்திருப்பதை அடிக் கோடிட்டுக் காட்டுகிற புதிய நோக்கு.

அதேபோல பாமர மக்களின் பழமொழிகளின் ஆழ் அர்த் தங்களை ஆராதிக்கிற கட்டுரை. போரில் தோற்ற வீர சிவாஜிக்கு ஒரு குடிசைக் கிழவியே போதிமரமாகத் திகழ்கிற கட்டுரை. தாயின் மடியைப் போன்ற பழமொழிகள் கட்டுரையில் வருகிற விலைமதிப்பற்ற பழமொழிகள்.

இன்றைய நகர்ப்புற நெரிசல் மயமான வாழ்க்கைச் சிக்கல் களுக்கு மத்தியிலும் படிப்புக்குறைவான நகர்ப்புற ஏழை மக்களிடமும், ஆட்டோ ஓட்டுநர்களிடமும் இன்றும் பீறிட்டு வருகிற இலக்கியத் தரமான வாக்கியங்களின் அசலான அழகைச் சொல்கிற 'வெளிச்சத்துக்கு வராத வள்ளுவர்கள்' என்ற கட்டுரை.

'இப்படியும் ஓர் அரசியல் தலைவர்' கட்டுரையின் சித்திரம் சிலிர்ப்பூட்டுகிறது. தோழர் ஜீவா மட்டுமல்ல, கர்மவீரர் காமராஜரும்தான் நம்மைப் பிரமிக்க வைக்கிறார்.

குடிசைகள் நிறைந்த பகுதிக்கு மாற்றுக்கட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசி, விழாவுக்கு அழைக்க ஒரு மாநில முதல்வரே வருகிறார்.

இன்றைய சூழலில் நம்பக்கூடிய நிகழ்வா, இது? நிகழ்ந்த உண்மையல்லவா?

விரித்துச் சொல்ல இடமிருந்தும், சுருக்கிச்சொன்ன கச்சிதத்தில் அழகு மலர்கிறது.

அனுபவங்களைப் பகிர்கிற இயல்புகளோடு கட்டுரைகள் இருப்பதுவும், உபதேசத் தொனி இல்லாமலிருப்பதுவும் கூடுதல் சிறப்பு.

வாசித்த விஷயத்துடன் தோழமை கொள்ளச் செய்கிறது, இதன் பண்புகள்.

நொறுங்கி, நொய்த்தவிடாகி, சோர்ந்து, துவண்டு, புலம்பித் திரிகிற விரக்தி வசப்பட்ட இதயங்களுக்கெல்லாம் நம்பிக்கை நீர் பாய்ச்சி, தெம்பூட்டி, தைர்யம் தந்து வாழ்வோடு போராடும் மன வலிமையைத் தருகிற கட்டுரைகள் நிறைய இடம் பெற்றிருப்பது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

இந்த நூலிற்குள் தொகுக்கப்பட்டிருக்கும் மாலை இவருடையது. மலர்கள் இவருடையதா? நார்கள் இவருடையதா? அல்ல.

எங்கோ எப்போதோ படித்த விஷயங்கள். கேட்ட செய்திகள். பார்த்த அனுபவங்கள். ரசித்த பாடல்கள். பாடலின் கருத்துக்கள். யோசித்த – வாசித்த – நேசித்த கதைகள். பழமொழிகள். பொன் மொழிகள்.

இப்படி ஏதேதோ தோட்டங்களில் பூத்துக்கிடந்த பூக்களை யெல்லாம் பறித்ததுவும், நிறம் பார்த்து வரிசைப்படுத்தியதுவும், நாரைக் கிழித்து நேராக்கி அவற்றின் பூக்களைத் தொடுத்ததுவும், தொடுத்த விதத்தில் ஓர் அழகு மலரச் செய்ததுவும், இலக்கிய அழகோடு தொடுக்கப்பட்ட மாலையின் கச்சிதமும் இவருடையவை. இவரது படைப்பாக்க நேர்த்திக்கு உரிமையானவை.

இலக்கிய உணர்வுக்கும், இவரது சமுதாய நோக்குக்கும் சாட்சியம் கூறுபவை.

நான் முழுசாக வாசித்தாலும்... இங்கு தொட்டுணர்த்த முடிந்த சிறப்பம்சங்கள் கொஞ்சம். நீங்கள் தொட்டுணரத்தக்க நல்ல தன்மைகள் நிறைய உள்ளன.

உங்கள் நுழைவுக்கு வழிவிட்டு, நுழைவாசல் கதவைத் திறந்து வைத்து, வாழ்த்துகிற நெஞ்சுடன் புன்னகையோடு வரவேற்கிறேன், நூலுக்குள்.

என்றும் உங்கள்,

3.8.2000
மேலாண்மறைநாடு – 626 127
விருதுநகர் மாவட்டம்

[மேலாண்மை பொன்னுச்சாமி]

பொருளடக்கம்

பக்கம்

1. மு.வ. கூறும் மூன்று இன்பங்கள் 11
2. 'இடுக்கண் வருங்கால் நகுக!' 13
3. வித்தியாசமான முறையில் செயல்படுங்கள்! 15
4. திட்டமிட்ட வாழ்வு எது? 18
5. ஆறு மடங்கு அதிகமாக வாழ முற்படுங்கள்! 21
6. தெரிந்ததும் தெரியாததும்! 23
7. உண்மையான மகிழ்ச்சி எங்கே? 25
8. வெளிச்சத்திற்கு வராத வள்ளுவர்கள்! 27
9. பார்ப்பதும் படிப்பதும்! 30
10. இன்று நமதே! 32
11. பூவிலே சிறந்த பூ என்ன பூ? 34
12. சாதி – வாழ்நாளில் எதையாவது சாதி! 37
13. 'கலியுகப் பரதாழ்வார்கள்!' 40
14. அகத்தின் அழகு பேச்சில் தெரியும்! 43
15. உண்மையான இந்தியா எது? 45
16. நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்! 48
17. எல்லா நேரமும் நல்ல நேரம்தான்! 51
18. நமக்குள் நாமே... 54
19. 'நான் மறையைக் கற்றவனே ஞானி!' 57
20. இப்படியும் ஓர் அரசியல் தலைவர்! 59
21. தாய் தந்தையர் போதித்த நீதிகள் 62
22. வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்து உழையுங்கள்! 64
23. கண்ணதாசனின் கீதோபதேசம்! 66
24. சிரிக்க வாரீர் செகத்தீரே! 69
25. 'முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு!' 72
26. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உரிய ஏழு வழிமுறைகள் 74
27. உழைப்பால் உயர்ந்தவர் என்று பெயர் எடுங்கள்! 77
28. 'வீட்டுக்கு நடுவே சொர்க்கம் உண்டு!' 79
29. செல்வத்தைச் சேமித்து வைக்கப் பொருத்தமான இடம் எது? 82

30. 'அதிசயமே அதிசயிக்கும் அதிசயம்!' 85
31. 'சின்னச் சின்ன வார்த்தையில்தானே ஜீவன் இன்னும் இருக்கு?' 88
32. அவரவர் பண்பறிந்து செயல்படுங்கள்! 91
33. 'இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்!' 93
34. வாழ்க்கை உங்கள் வசப்படும்! 96
35. 'நீ உன்னை அறி!' 99
36. சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போடுங்கள்! 101
37. முத்தியும் சித்தியும் எப்போது வாய்க்கும்? 103
38. பிரச்சினைகளை எதிர்கொண்டு சமாளியுங்கள்! 105
39. கடவுளின் கருணை யாருக்கு? 107
40. இன்பங்களில் எல்லாம் தலைசிறந்த இன்பம் 109
41. 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே!' 112
42. 'வழியா இல்லை பூமியில்?' 115
43. சிக்கெனப் பிடியுங்கள் சீன இலக்கியத்தை! 117
44. 'பெண்மைதான் தெய்விகமாம் காட்சியடா!' 120
45. 'மேடையில் முழங்கு அறிஞர் அண்ணா போல்!' 122
46. தாயின் மடியைப் போன்ற பழமொழிகள் 124
47. பொறுமையுடன் நடந்து பாருங்கள்! 127
48. சிக்கனம் வேறு, கருமித்தனம் வேறு! 129
49. அதிர்ஷ்டம் என்பது என்ன? 131
50. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!' 134
51. எதிர்த்துச் சுடச்சுடப் பதிலளிக்கும் கலையில் வல்லவர் 136
52. உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் உருவகக் கதைகள் 138
53. 'நம்மிடம் உழைப்பு வளம் இல்லை!' 141
54. தருமனைப் போன்று நல்லதையே காணுங்கள்! 143
55. 'தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்?' 145
56. வாழ்க்கையின் அற்புதமான தரிசனங்கள்! 147
57. 'கஞ்சி வரதப்பா எங்கே வரதப்பா?' 150
58. அதிசய மனிதரின் அறைகூவல் 152
59. ஒப்பீட்டு ஆராய்ச்சி வேண்டாம்! 154
60. இந்தியா வளர்ந்த நாடாக வேண்டும்! 156

1
மு.வ. கூறும் மூன்று இன்பங்கள்

முனைவர் மு.வரதராசனாரின் வைர வரிகள் இவை.

1. உடல் நோயற்றிருப்பது முதல் இன்பம்.
2. மனம் கவலையற்றிருப்பது இரண்டாம் இன்பம்.
3. உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றாம் இன்பம்.

ஒவ்வொன்றாகப் பார்ப்போமா? முதலாவது இன்பம், உடல் நோயற்று இருப்பது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழியின் உண்மையான பொருள் - முழுமையான பொருள் - நமக்கு வாழ்க்கையில் எப்போது விளங்கும் என்று நினைக்கிறீர்கள்? உடம்புக்கு ஏதாவது நோய் வரும்போதுதான்! அதுவும் நம் உடம்புக்கு என்று வந்தால்தான்! அதனால் தான் 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்று இன்னொரு பழமொழியையும் நம் முன்னோர் கூறி இருக்கிறார்கள். அடுத்தவர்கள் நோயால் வருந்தினார்கள் என்றால் நாம் அவர்களுக்கு ஆறுதல் கூறுவோம்; முடிந்தால் நமக்குத் தெரிந்த மருத்துவ ஆலோசனையும் கூறுவோம்.

பல் வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஒருவர் கி.வா.ஜ.வைச் சந்தித்தார். முகக் குறிப்பால் அவரது நோயை உணர்ந்த கி.வா.ஜ. 'என்ன செய்கிறது?' என்று கேட்டார். ''பல் வலி'' என்று கன்னத்தைக் கைத்தாங்கலாகப் பிடித்தவாறே சொன்னார் நண்பர். அந்த நிலையிலும் கி.வா.ஜ. சிரித்துக்கொண்டே சிலேடையாக இப்படிப் பேசினார்: "ஒரு வலி வந்தாலே தாங்கமுடியாது. உமக்கு வந்திருப்பதோ பல் வலி. நோவு அதிகமாகத்தான் இருக்கும்". தன் பல் வலியையும் மறந்து கி.வா.ஜ.வின் சிலேடை நயத்தைச் சுவைத்து மகிழ்ந்தார் நண்பர்.

இரண்டாவது இன்பம், மனம் கவலையற்று இருப்பது. ஒருசிலர் தாம் மட்டும் கவலையால் துன்பப்படுவது போலவும், மற்றவர்கள் எந்தக் கவலையும் இல்லாமல் மகிழ்ச்சியாக இருப்பது போலவும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். இது தவறான மனப்போக்கு ஆகும். உண்மையில் யாருக்குத்தான் கவலை இல்லை? ஏழைக்குப் பணம் இல்லையே என்ற கவலை; பணக்காரனுக்குப் பணம் இருக்கிறதே, அதைப் பத்திரமாகப்

பாதுகாத்து வைக்க வேண்டுமே, ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்க வேண்டுமே என்ற கவலை. நம் போன்ற நடுத்தர வர்க்கத்தினருக்கோ வருமான வரிக் கவலை! எனவே நம்மிடம் இல்லாத பொருள்களை நினைத்துக் கவலைகளை வளர்த்துக்கொள்ள வேண்டாம்; நம்மிடம் இருக்கும் சிறந்த பொருள்களை நினைத்து, நமக்கு அவற்றைத் தந்ததற்காக இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம். நம் மனத்தில் இருந்து கவலை சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்றுச் சென்றுவிடும். மகிழ்ச்சி தன்னாலே நம்மிடம் வந்து சேர்ந்துகொள்ளும்.

ரோமானியப் பேரரசர் மார்க்கஸ் அரேலியஸின் மணிமொழி இதோ:

"உன்னிடம் இல்லாத ஒரு பொருளின் மேல் ஆசை கொள்ளாதே. உன்னிடம் இருக்கும் சிறந்த பொருள்களை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சி அடைவாய். அவை இல்லாதிருந்தால் அவற்றை எவ்வளவு அவாவுடன் தேடியிருப்பாய் என்பதை யோசித்துப் பார். இவ்வாறு சிந்தித்து மனத்தை திருப்தி செய்துகொள்."

மூன்றாவது இன்பம், உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது. மற்றவர்களுக்கு மிகப் பெரிய உதவிகளைச் செய்தால்தான் மகிழ்ச்சி ஏற்படும் என்பது இல்லை. அடுத்தவர்களுக்குச் சிறுசிறு உதவிகளை - அந்த உதவிகள் தேவைப்படும் நேரங்களில் - செய்து பாருங்கள். அப்போது கிடைக்கும் இன்பமே தனியானதாக இருக்கும். எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் வங்கியில் பணம் போட அல்லது எடுக்க உதவுதல், வழி தெரியாமல் கேட்பவர்களுக்குச் சொல்லி உதவுதல், எழுத்தறிவு இல்லாதவர்களுக்குக் கடிதம் எழுதுவதில் உதவுதல், உடல் ஊனமுற்றோர்க்கும் முதியோர்க்கும் உரிய நேரத்தில் உதவுதல், தலைச்சுமையை இறக்கி வைக்கவோ, ஏற்றி வைக்கவோ உதவுதல் - இப்படி உதவும் மனம் இருந்தால் அடுத்தவருக்கு உதவும் வழிகள் எத்தனை எத்தனையோ உண்டு இந்த உலகில்!

௨
'இடுக்கண் வருங்கால் நகுக!'

கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியபோது எனககு ஏற்பட்ட ஒரு சுவையான அனுபவம் இது. மாணவர்களுக்கு 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற திருக்குறளை நடத்தினேன்; வாழ்க்கையில் நமக்கு இடுக்கண் வரும் போது - துன்பம் வரும்போது - சிரிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விளக்கினேன். மறுநாள் அதே நேரம் அதே வகுப்பிற்குள் நுழையும் போது ஒரு மாணவர் என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தார். "என்ன தம்பி சிரிக்கிறீர்கள்?" என்று அவரைக் கேட்டேன். "நீங்கள்தானே ஐயா நேற்று சொன்னீர்கள், வாழ்க்கையில் நமக்கு இடுக்கண் வரும்போது சிரிக்க வேண்டும் என்று. நீங்க வர்றீங்க; சிரிக்கிறேன்" என்றார் அவர். என் நிலைமை எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா?

கவியரசர் கண்ணதாசன் கூட 'ராஜபார்ட் ரங்கதுரை' என்ற திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் இப்படிக் கேட்பார்:

"துன்பம் வரும் வேளையிலே சிரிங்க என்று
சொல்லி வச்சார் வள்ளுவரு - சரிங்க
பாம்பு வந்து கடிக்கையில் - பாழும் உடல் துடிக்கையில்
யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு?"

கவியரசரின் கேள்வி சரியானதுதான். அப்படியானால் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பதன் உண்மையான பொருள் என்ன? ஒரு நொடி சிந்தித்துப் பார்ப்போமா?

வாழ்வில் இடுக்கண் வரும்போது 'ஹஹ்ஹா' என்று வாய்விட்டு நம்மைச் சிரிக்கச் சொல்லவில்லை வள்ளுவர்; 'வாய் விட்டுச் சிரித்தால் துன்பம் ஓடிப்போகும்' என்ற பொருளிலும் அவர் அவ்வாறு பேசவில்லை. வாழ்வில் துன்பம் வருவது இயல்பு என்று கருதி, அதை அமைதியாக எதிர்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார் அவர். இன்பம் வரும்போது ஒரேயடியாகத் துள்ளிக் குதிக்கவும் வேண்டாம் என்றும், துன்பம் வரும் போது துவண்டு போய் மூலையில் முடங்கிப்போகவும் வேண்டாம் என்றும், இன்பம், துன்பம் என்ற இரண்டையும் சமமாகக் கருதும் மனப் பக்குவத்தை மனிதன் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார் அவர்.

ஒரு முறை எழுத்தாளர் கல்கி, தம் மகள் ஆனந்தியோடு ரயிலில் ஏற முயன்றார். ரயில் புறப்பட்ட வேகத்தில் அவரது ஒரு செருப்பு காலில் இருந்து கழன்று கீழே விழுந்துவிட்டது. ரயில் பெட்டியில் ஏறியதும் கல்கி என்ன செய்தார் தெரியுமா? காலில் மாட்டி இருந்த மற்றொரு செருப்பையும் அவர் உடனே ஜன்னலுக்கு வெளியே விட்டெறிந்தார். "என்ன அப்பா? ஒரு செருப்பு தானே விழுந்தது? மற்றொரு செருப்பையும் தூக்கி எறிந்துவிட்டீர்களே?" என்று ஆனந்தி பதட்டத்தோடு கேட்டபோது, கல்கி சிரித்துக் கொண்டே "அம்மா! ஒரு செருப்பை மட்டும் வைத்துக்கொண்டு என்ன பயன்? இந்தச் செருப்பையும் விட்டெறிந்தால் அந்த ஜோடி யாருக்காவது பயன்படும் அல்லவா?" என்றார். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் வாய்மொழியை, வாயளவில் மட்டுமின்றி, வாழ்க்கையிலும் கடைப்பிடிப் பவராக விளங்கினார் கல்கி என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் அருமையான உதாரணம்!

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியும் இங்கே நினைவுகூரத்தக்கது. வறுமை, கவிஞரின் வாழ்க்கையுடன் ஒருநாளும் ஓயாமல் ஓடி விளையாடி கொண்டிருந்த காலம் அது. ஒரு நாள் காலை நேரம். வாய்ப்புத் தேடி கோடம்பாக்கம் செல்லலாம் என்று திட்டம் போடுகிறார் கவிஞர். குளித்து, தலைசீவித் தயாராகிறார். வெளுத்து வந்த வேட்டியை எடுத்து உடுத்துவதற்காக விரிக்கிறார். அய்யய்யோ! என்ன இது, வேட்டி நடுவே கிழிந்திருக்கிறதே! மறுவேட்டி இல்லாத நிலைமை; உள்ள ஒரு வேட்டியும் கிழிந்து போய் இருக்கிற அவலம். நாமாக இருந்தால் நம் தலைவிதியை எண்ணிக் கவலைப்பட்டிருப்போம்; கண்ணீர்விட்டிருப்போம்; கதறி இருப்போம்; கடவுளையே திட்டித் தீர்த்திருப்போம். ஆனால், கவிஞர் என்ன செய்தார் தெரியுமா? அந்த நேரத்திலும் கிழிந்த வேட்டியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ஒரு பாட்டுப் பாடினார். அந்தப் பாடல் இதோ:

"ஓரம் கிழிஞ்சாலும் ஒட்டுப்போட்டுக் கட்டிடலாம் - இது
நடுவே கிழிஞ்சதடி நாகரத்தினமே - அதுவும்
நாலுமுழ வேட்டியடி கனகரத்தினமே!"

இதுதான் உண்மையில் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது!

3
வித்தியாசமான முறையில் செயல்படுங்கள்!

அண்மையில் பத்திரிகைகளில் ஒரு செய்தியைப் படித்திருப்பீர்கள். திரு. மூப்பனார், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு ஒரு நூலைப் பரிசாகத் தந்தார். நூலின் பெயர் 'You Can Win' என்பது. உலக அளவில் இலட்சக்கணக்கில் விற்பனை ஆகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நூல் அது. ஷிவ் கேரா (Shiv Khera) என்ற அறிஞர் எழுதிய அந்த நூல் உணர்த்தும் அடிப்படையான செய்தி என்ன தெரியுமா?

"வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் வித்தியாசமான காரியங்களைச் செய்பவர்கள் அல்லர்; வித்தியாசமான முறையில் காரியங்களைச் செய்பவர்கள் ஆவர்."

ஆசிரியரின் சொற்களிலேயே கூற வேண்டும் என்றால், "Winners don't do different things, They do things differently."

எவ்வளவு அரிய கருத்தை நச்சென்று படிப்பவர் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதியும் வண்ணம் எளிதாகச் சொல்லிவிட்டார் இந்த ஆசிரியர்!

முன்னுக்கு வந்தவர்களின் - சாதனை படைத்தவர்களின் - புகழேணியின் உச்சிக்குச் சென்றவர்களின் - வாழ்க்கைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து பாருங்கள். இந்த உண்மை உங்களுக்கு நன்றாக விளங்கும். ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை' என்னும் தாரக மந்திரத்தை ஆன்மீக உலகிற்கு வழங்கிய பெருமகனார் இராமலிங்க அடிகள். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' அருளாளர் அவர், அவரது வாழ்வில் ஒன்பது வயதில் ஏற்பட்ட ஓர் அனுபவம் இது. ஆசிரியர் வகுப்பில் மாணவர்களுக்கு 'உலக நீதி'யை நடத்திக் கொண்டிருக்கிறார்.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்"

ஆசிரியர் சொல்லச் சொல்லியும் சொல்லாமல் இருக்கின்றார் மாணவர்

இராமலிங்கம். "ஏன் சொல்லவில்லை?" என்று அவரிடம் கோபமாகக் கேட்கிறார் ஆசிரியர். "இறைவனிடத்தில் 'வேண்டாம், வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டிருப்பானேன்? 'ஏதாவது வேண்டும், வேண்டும்' என்று இறைவனிடத்தில் எதை வேண்டலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்" என்கிறார் இராமலிங்கம். ஒருகணம் திகைத்த ஆசிரியர், "நீ வேண்டுமானால் வேண்டும், வேண்டும் எனப் பாடு!" என்று உறுதியான குரலில் மாணவருக்குக் கட்டளை இடுகிறார். அப்போது சிறிதும் தயங்காமல் உடனே பாடுகிறார் இராமலிங்கம்:

"ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்
தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு
கலவாமை வேண்டும்"

பிற்காலத்தில் வள்ளலார் ஆகி ஆயிரக்கணக்கான அருட்பாக்களைப் பாடுவதற்கு இராமலிங்கத்திடம் இளமையில் இருந்தே காணப்பட்ட இந்த வித்தியாசமான சிந்தனைதான் அடிப்படையான காரணம் ஆகும்.

ரமண முனிவரின் ஆசிரமத்தில் ஒரு முறை நடந்த நிகழ்ச்சியும் இவ்வகையில் மனங்கொளத்தக்கதாகும். ஆசிரமத்தில் பக்தர்கள் அழகான தோட்டம் ஒன்றைப் போட்டு பாதுகாத்து வந்தார்கள். மிகவும் அருமையான செடிகளையும், அரிய மூலிகைகளையும் கொண்டு வந்து நட்டு வளர்த்து வந்தார்கள். ஒருநாள் ஆசிரமத்துக் கோசாலையில் இருந்த சில பசு மாடுகள் தோட்டத்திற்குள் நுழைந்து சில செடிகளைத் தின்றுவிட்டன. இதைக் கண்ட பக்தர்களுக்கு வருத்தம் உண்டாயிற்று. அம் மாடுகளிடம் கோபமும் ஏற்பட்டது. 'மாடுகள் செடிகளை அழித்து விட்டன' என்பதையே திருப்பித் திருப்பிச் சொல்லியவாறு மாடுகளின் மீதே குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் அவர்களுடைய சிந்தனையை வேறு திசையில் திருப்பினார் ரமண முனிவர்.

"தோட்டத்திற்குள் பசு மாடு வரக்கூடாது என்பது நமக்குத்தான் தெரியும். பசு மாட்டுக்குத் தெரியாது. தெரியும்படி செய்யவும் முடியாது. இந்த நிலையில் தோட்டத்துக்கு நன்றாக வேலி போட்டுக் காப்பாற்றி இருந்தால் மாடுகள் நுழைந்திருக்குமா? நாம் எதைச் செய்யவில்லையோ அதை நினைக்காமல், பசு மாடு தெரியாமல் இயல்பாகச் செய்வதை

நினைத்துக் கோபப்படலாமா? செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருந்தது நம் குற்றம் அல்லவா?" என்று சிரித்துக்கொண்டே பக்தர்களிடம் வித்தியாசமான ஒரு வினாவை முன்வைத்தார் ரமண முனிவர். ஒருவாறு பக்தர்கள் அமைதி ஆயினர்; புதிய நோக்கில் சிந்திக்கவும் தொடங்கினர்.

எந்தத் துறையிலும் இதுபோல் வித்தியாசமாகச் சிந்திப்போரும் செயல் படுவோருமே சிங்க நடை போட்டுச் சிகரத்தில் ஏறியுள்ளனர்; வாழ்வில் சாதனை படைத்துள்ளனர். நீங்களும் இவ்வழியில் முதலடி எடுத்து வைக்கலாமே?

4

திட்டமிட்ட வாழ்வு எது?

நீண்ட நாட்களுக்குப் பிறகு நண்பரை வழியில் சந்தித்து நலம் விசாரித்தேன். அவர் வழக்கம் போல் முகாரி ராகத்தில் 'இல்லைப் பாட்டு' பாடினார். "அதை ஏன் கேக்கிறீங்க? முன்னெல்லாம் வீட்டு பட்ஜெட் போட்டால் துண்டுதான் விழும். இப்போது வேட்டியே விழுகிறது!... அதுவும் ஜனவரி மாதம் பிறந்து விட்டால் போதும்; வருமான வரிப் பிடித்தம் வேறு! இப்போதெல்லாம் வரிசையாக மாதங்களின் பெயர்களைச் சொல்லச் சொன்னால், ஜனவரி, பிப்ரவரி, வருமானவரி என்றுதான் வாயில் வருகிறது."

இத்தனைக்கும் நண்பர் ஒரு கல்லூரிப் பேராசிரியர். அவரது துணைவியாரும் ஒரு கல்லூரிப் பேராசிரியை. ஆஸ்தி, ஆசை இரண்டிற்கும் சேர்த்து அவர்களுக்கு ஒரே ஒரு பெண் குழந்தைதான். இப்படி இருந்தும், முதல் தேதி வந்துவிட்டால் அவர் பாடு 'தாளம் படுமோ தறி படுமோ' என்று பாரதியார் பாடியது போல்தான் இருக்கும். 'மாதக் கடைசி' என்றால் பரிதாபத்தின் எல்லைக்கே சென்றுவிடுவார் நண்பர். மாதந்தோறும் சம்பளப் பட்டியலில் (Pay Bill) அவர் வாங்குகின்ற தொகையோ ரூபாய் இருபத்தையாயிரத்திற்கு மேல்; ஆனால், அவர் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் தொகையோ (Take-home pay) ரூபாய் இரண்டாயிரத்திற்கும் கீழே. என்ன செய்வார் பாவம்? தேவை இருக்கிறதோ இல்லையோ எங்கெல்லாம் கடன் கொடுக்கிறார்களோ அங்கெல்லாம் கடன் வாங்குவார்; கட்ட முடிகிறதோ இல்லையோ கேட்டவர்களிடம் எல்லாம் சீட்டுக்கள் போடுவார். ஆரம்பத்திலேயே சீட்டுத்தொகையை எடுத்துவிடுவார். உணவு, உடை, ஒப்பனைப் பொருள் போன்றவற்றில் மனம் விரும்பியபடியெல்லாம் செலவு செய்வார். இன்றைய சூழலில் நடுத்தரக் குடும்பங்களில் நண்பரைப் போல் மிகப் பல பேர் இருக்கிறார்கள். எது ஆடம்பரம், எது கருமித்தனம், எது சிக்கனம் என்று தெரிந்து கொள்ளாமல் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்; எந்தவிதமான திட்டமும் ஒழுங்கும் இல்லாமல் தங்கள் வாழ்க்கையைக் கடனிலும் கவலையிலும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், ஆடம்பரம், சிக்கனம், கருமித்தனம் ஆகியவற்றைத் தமக்கே உரிய பாணியில் அழகாக இப்படி விளக்கிக் கூறுவார்:

1. தேவைக்கு மேல் செலவு செய்வது ஆடம்பரம்.

2. தேவைக்கு செலவு செய்யாதது கருமித்தனம்.

3. தேவையின் அளவு செலவு செய்வது சிக்கனம்.

ஆடம்பரம், கருமித்தனம், சிக்கனம் ஆகிய மூன்றுக்கும் இடையே உள்ள இந்த வேறுபாடுகளை நன்கு புரிந்துகொண்டு செயல்பட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் நிலவும்.

பாடுபட்டுத் தேடிய பணத்தைச் சிக்கனமாய், பக்குவமாய்ச் செலவு செய்வது எப்படி என்கிறீர்களா? குடும்ப வரவு செலவுத் திட்டத்தைக் கணக்காக, கச்சிதமாகப் போடுவது எப்படி என்கிறீர்களா? இதோ, ஒரு சின்னஞ்சிறு கதை:

வயலில் ஒரு கிழவர் உழுது கொண்டிருந்தார். மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டும் இருந்தார். கிழவரின் மகிழ்ச்சியைப் பார்த்து அந்த வழியே வந்த மன்னனுக்கு வியப்பு ஏற்பட்டது.

கிழவரைப் பார்த்து, "நாள் முழுவதும் உழுதால் உனக்கு எவ்வளவு கூலி கிடைக்கும்?" என்று கேட்டான் மன்னன்.

"எட்டணா தருகின்றார் முதலாளி" என்றார் கிழவர்.

"இவ்வளவு குறைந்த கூலியா? இதை வைத்துக்கொண்டு நீ எப்படிக் காலந்தள்ளுகிறாய்? இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறாய்?" - வியப்பின் விளிம்பில் நின்று வினவினான் மன்னன்.

"எட்டணாவில் இரண்டணா குடும்பத்திற்குச் செலவழிக்கிறேன். இரண்டணா பழைய கடனுக்குத் தருகிறேன்; இரண்டணா தருமம் செய்கிறேன்; இரண்டணா வட்டிக்குத் தருகிறேன்" என்று விளக்கிக் கூறினார் கிழவர்.

"எப்படியப்பா இதில் மிச்சம் பிடித்துத் தருமத்திற்கும் வட்டிக்கும் தருகிறாய்?" என்று கேட்டான் மன்னன்.

கிழவர் பொறுமையாக விளக்கினார்: "எனக்கும் என் மனைவிக்கும் இரண்டணா செலவழிகிறது; இது என் குடும்பச் செலவு! எனக்கு மிகவும்

வயதான தாயும் தந்தையும் இருக்கிறார்கள். இளமையில் உணவும், உடையும் கொடுத்து என்னைக் காப்பாற்றிய அவர்களுக்காக இரண்டணா செலவாகிறது. அது பழைய கடன். என் தங்கை ஆதரவு இன்றி என் வீட்டில் வாழ்கிறாள்; அவளுக்கு இரண்டணா செலவாகிறது. அது தருமம். எனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அவர்கள் பொருட்டு இரண்டணா செலவழிகிறது. அது வட்டிக்குத் தருவது, பிற்காலத்தில் அவர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள்!"

அரசன் இந்தப் பொருள் பொதிந்த சொற்களைக் கேட்டு விம்மிதம் அடைந்தான்.

இது வெறும் கதையல்ல; வாழ்க்கைப் பாடம், அனுபவக் கல்வி. இதன்படி நாமும் நடக்க முற்பட்டோம் என்றால், நம் எல்லோருடைய குடும்பங்களிலும் மகிழ்ச்சி பொங்கும்; இல்லை, நிலையாகத் தங்கும்!

5

ஆறு மடங்கு அதிகமாக வாழ முற்படுங்கள்!

வழக்கம் போல் காலையில் கண்விழித்ததும் வரவேற்பு அறைக்குச் சென்றேன். காலண்டரின் தாளைக் கிழிப்பதற்காகக் கையெடுத்தேன். அப்போது ஒரு குரல் ஒலித்தது.

"ஐயா, கொஞ்சம் நில்லுங்கள்; நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்!"

யார் பேசுகிறார்கள்? முன்னும், பின்னும், சுற்றும் முற்றும் பார்த்தேன்; யாரும் தெரியவில்லை. உற்றுப் பார்த்தேன்; உன்னிப்பாகக் கேட்டேன்; வேறு யாரும் இல்லை. நான் கிழிக்க இருந்த காலண்டரின் தாள்தான் என்னிடம் பேசியது.

"என்னைக் கிழிப்பதற்கு முன் ஒரு வார்த்தை: உங்கள் வசம் ஒரு நாள் - 24 மணி நேரம் - ஒப்படைக்கப்பெற்றதே, இந்த ஒரு நாளில் - 24 மணி நேரத்தில் - என்ன என்ன காரியம் செய்தீர்கள்? யார் யாருக்கு நல்லது செய்தீர்கள்?"

தினம் தினம் காலையில் காலண்டரின் தாளைச் சரக்கென்று கிழித்து, கசக்கி, மூலையில் தூக்கி எறிகிறோமே, என்றேனும் ஒரு நாள், பேசுகின்ற ஆற்றலைப் பெற்று, காலண்டர் தாள் நம்மிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டால் நாம் என்ன பதில் சொல்லுவோம்? எண்ணிப்பாருங்கள்.

பட்டுக்கோட்டையாரின் திரைப்பாடல் ஒன்றில் வரும் நறுக்கென்ற வரிகள் உங்களுக்கு நினைவிருக்குமே?

"சித்தர்களும் யோகிகளும்
சிந்தனையில் ஞானிகளும்
புத்தரோடு ஏசுவும்
உத்தமராம் காந்தியும்

எத்தனையோ உண்மைகளை
எழுதி எழுதி வச்சாங்க;
எல்லாந்தான் படிச்சீங்க,
என்ன பண்ணிக் கிழிச்சீங்க?"

ஆம், ஒரு நாளில் - நம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற இருபத்து நான்கு மணி நேரத்தில் - நாம் என்ன செய்தோம்? கொஞ்சம் கடுமையான நடையில் கேட்க வேண்டும் என்றால் "என்ன பண்ணிக் கிழித்தோம்?" இனிமேல் காலண்டரில் தாளைக் கிழிப்பதற்கு முன் ஒருகணம் நாமே இப்படிக் கேட்டுக் கொண்டால் சிறப்பாக இருக்கும் அல்லவா?

சிந்தனையாளர் எமர்ஸனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

எமர்ஸனைப் பார்த்து ஒருவர் கேட்டார்;

"உங்கள் வயது என்ன?"

எமர்ஸன் சொன்னார்: "360 ஆண்டுகள்!"

இதை நம்ப முடியுமா? எனவே, அந்த மனிதர் மீண்டும் கேட்டார்.

"மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்லியதை நான் சரியாகக் கேட்கவில்லை. திரும்பவும் உங்கள் வயதைச் சொல்லுங்கள்."

எமர்ஸன் சத்தமாகக் கூறினார்:

"360 ஆண்டுகள்!"

அந்த மனிதர் சொன்னார்:

"என்னால் இதை நம்ப முடியவில்லையே? இது முடியாத காரியம். நீங்கள் 60 வயதுக்கு மேல் இருக்கமாட்டீர்கள்!"

எமர்ஸன் அமைதியாக - ஆனால் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்:

"நீங்கள் சொல்வது சரிதான். என்னுடைய உண்மையான வயது அறுபதுதான். ஆனால், நான் உங்களை விட ஆறு மடங்கு அதிகமாக வாழ்ந்திருக்கிறேன். 360 ஆண்டுகளில் எப்படி வாழமுடியுமோ அப்படி இந்த 60 ஆண்டுகளைப் பயன்படுத்தி வாழ்ந்திருக்கிறேன்!"

எமர்ஸனின் பேச்சைக் கேட்ட அந்த மனிதர் அமைதியானார்; ஆழ்ந்து சிந்திக்கலானார்.

சிந்தனை வயப்பட்டது அவர் மட்டும்தானா? உங்களிடமும் ஒரு சிந்தனைப் பொறி (Flash) தோன்றிருக்குமே?

6

தெரிந்ததும் தெரியாததும்!

உலகம் பலவிதம்; உலகில் வாழுகின்ற மனிதர்களும் பலவிதம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் அடிக்கடி உதிர்க்கின்ற பொன்மொழி இது:

"அங்க தான் நீங்க தப்புப் பண்றீங்க!"ஏதோ நாம்தான் அடிக்கடி தப்பு செய்வது போலவும், அவர் எப்போதும் சரியாகவே செயல்படுபவர் போலவும் பேசுவார்.

இன்னொரு நண்பர் தம் பேச்சின் இடையே, "நான் சொல்லப்போறது உங்களில் பலருக்குத் தெரியாது" என அடிக்கடி குறிப்பிடுவார். அவருக்கு எல்லாம் தெரியும்; அனைத்தும் அத்துப்படி. சரி, அதற்காக அடுத்தவருக்கு ஒன்றுமே தெரியாதா என்ன?

சில நாட்களுக்கு முன்பு ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தேன். வழக்கம் போல் "எனக்கு விவரம் தெரிஞ்ச நாளில் இருந்து..." என்று ஆரம்பித்தார் அவர். அவரை இடைமறித்து நான் கேட்டேன்: "நண்பரே, உங்களுக்கு எந்த நாளில் விவரம் தெரிந்தது? என்ன விவரம் தெரிந்தது? கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லுங்களேன்?" அவர் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தவாறே சொன்னார்:

"அந்த விவரம்தான் சார் எனக்குத் தெரியலை!"

'எனக்குத் தெரியாது' என்று சொல்ல நாம் நம் நாக்கிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அதேபோல் புதிய புதிய செய்திகளையும் சிந்தனை களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் வாழ்வின் கடைசி மூச்சு வரை நமக்கு இருக்க வேண்டும். 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' என்று வள்ளுவர் பெருமான் கேட்கவில்லையா?

'கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு' என்பதை மெய்ப்பிக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சி இதோ:

கூரத்தாழ்வாரின் மூத்த மகன் பெயர் பராசர பட்டர். இளம் பருவத்திலேயே பேரறிவு படைத்தவராக விளங்கியவர் அவர். 'எல்லாம் தெரிந்தவன்' என்று அந்தக் காலத்தில் தன்னைத்தானே பறைசாற்றிக் கொண்ட சர்வக்ஞ பட்டன் என்ற பண்டிதர் ஒருமுறை திருவரங்கத்திற்கு

வந்தார். ஐந்து வயதுக் குழந்தையான பராசர பட்டர் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்தார். பண்டிதர் வருவதைக் கண்டதும் அவர் முன்னே போய் நின்றார்.

"எல்லாம் தெரிந்த சர்வக்ஞர் நீர்தானே?" என்று கேட்டார். பண்டிதர் அதிர்ந்து நின்றபோது, தெருப் புழுதியில் இருந்து ஒரு கைப்பிடி மண்ணை எடுத்துக் கொண்டு, "இந்த கைக்குள் எவ்வளவு மண் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார். பண்டிதரோ விழி கலங்கி நின்றார்.

"இது ஒரு கைப்பிடி மண் என்று சொல்ல முடியாத நீர் தாமோ எல்லாம் தெரிந்த சர்வக்ஞர்!" என்று கேட்டார் பராசர பட்டர்.

பண்டிதரின் ஆணவம் அன்றோடு அழிந்தது! ஐந்து வயதுக் குழந்தையை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டார். 'கூரத்தாழ்வாரின் மகன்' என்று தெரிந்ததும், 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்!' என்னும் கருத்துப்பட 'பறப்பதன் குஞ்சு தவழுமோ?' என்று பாராட்டி மகிழ்ந்தார்.

பிறிதொரு சுவையான நிகழ்ச்சியையும் இங்கே எண்ணிப் பார்க்கலாம். ஊருக்குப் புதிதாக வந்த ஒரு பாதிரியார் தபால் ஆபீசுக்குப் போகும் வழியைப் பற்றி ஒரு பையனிடம் கேட்டார். அவன் வழியைக் காட்டிவிட்டு, "ஐயா, தாங்கள் ஊருக்குப் புதிது போல் இருக்கிறதே, தாங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான். அவர் "நானா? மோட்சத்திற்குப் போகும் வழியை மக்களுக்கு உபதேசம் செய்கிறேன்" என்று ஆணவத்தோடும் பெருமிதத்தோடும் பதில் சொன்னார். "தபால் ஆபீசுக்குப் போக வழி தெரியாதவர் மோட்சத்திற்குப் போக வழி சொல்லிக் கொடுக்கிறாராம்!" என்று சொல்லிச் சிரித்தான் அந்தப் பொடியன். பாதிரியாரோ அசந்துபோனார்.

நமக்குத் தெரியாததைத் தெரியாது என்று சொல்வதிலே தப்பு எதுவும் இல்லை: அதே போல் தெரியாததைத் தெரிந்துகொள்ள முயல்வதிலும் ஒரு தப்பும் இல்லை. ஆனால் நமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைப்பதும், அடுத்தவருக்கு எதுவுமே தெரியாது என்று நினைப்பதும் காந்தியடிகளின் சொற்களில் சொல்ல வேண்டும் என்றால் 'இமாலயத் தவறுகள்' ஆகும்.

7
உண்மையான மகிழ்ச்சி எங்கே?

ஏகநாத சுவாமிகளிடம் ஒருவன் வந்து வணங்கி நின்றான். அவன் அவரிடம், "சுவாமி, தங்கள் வாழ்க்கை மட்டும் சிறிதும் சிக்கலற்றதாய், பாவமற்றதாய் இருக்கிறதே? இதன் ரகசியம் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு ஏகநாதர், "இப்போதைக்கு என் விஷயம் இருக்கட்டும். உன்னைப் பற்றிய ஓர் உண்மையை உன்னிடம் நான் சொல்ல வேண்டியிருக்கிறதே?" என்றார்.

'அது என்ன உண்மை' என்று சுவாமிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அவன் ஆர்வம் காட்டினான்.

"இன்றில் இருந்து ஏழாம் நாள் நீ மரணம் அடைவாய் என்று இருக்கிறதே?" என்றார் ஏகநாதர்.

ஏகநாதர் வாயில் இருந்து வந்ததை யார்தான் பொய் என்று எண்ணுவார்கள். ஏழு நாட்களில் மரணம்! இன்னும் 168 மணி நேரம் தான் எஞ்சியிருக்கிறது! கடவுளே, இதென்ன ஆபத்து?

அந்த மனிதன் அவசரம் அவசரமாய்த் தன் வீட்டிற்கு ஓடினான். அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. பேசாமல் படுக்கையில் காலை நீட்டிப் படுத்துவிட்டான்.

ஆறு நாட்கள் கழிந்தன. ஏழாம் நாள் ஏகநாதர் அவனிடம் வந்து, "இந்த ஆறு நாட்களில் நீ எவ்வளவு பாவம் செய்தாய்?" என்று கேட்டார்.

மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதன், "சுவாமி, பாவம் செய்வதற்கு எனக்கு நேரம் ஏது? மரணம்தான் சதா சர்வகாலமும் என் கண்முன் நின்று கொண்டிருக்கிறதே?" என்றான்.

ஏகநாதர் சிரித்துக்கொண்டே, "என் வாழ்க்கை எப்போதும் பாவமற்றதாய் - சிக்கலற்றதாய் - இருப்பதற்குக் காரணம் என்ன என்பது இப்பொழுது உனக்குப் புரிந்துவிட்டதல்லவா?" என்று கேட்டார்.

பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை; இடைப்பட்ட வாழ்க்கை மட்டுமே நமக்குச் சொந்தமானது. வாழ்க்கையில் மரணம் எந்த நேரத்திலும் வரலாம்; எந்த வடிவிலும் வரலாம். அதற்காக மரண

பயத்துடனேயே நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டும் என்று கூறவில்லை. பின் எப்படித்தான் வாழ்வது என்று கேட்கிறீர்களா? நல்ல கேள்வி, விடை இதுதான்.

'வாழ்வில் மரணம் எந்த நேரத்திலும் வரலாம்' என்ற எண்ணத்தில் - எதிர்பார்ப்பில் - உயிரோடு இருக்கும் நாளைப் பயனுள்ள விதத்தில் வாழ முற்பட்டால் போதும். 'ஆண்டவன் அறிய நெஞ்சில் ஒரு துளி வஞ்சம் இல்லாமல்' - யாருக்கும் எந்தவிதமான இடையூறும் செய்யாமல் - இயன்ற அளவு அடுத்தவருக்கு உதவி செய்து - வாழ்ந்தாலே போதும். உண்மையான மகிழ்ச்சியும் மனநிறைவும் அப்படிப்பட்ட வாழ்க்கையில் தான் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும்.

அண்மையில் தொலைக்காட்சியில் ரஷ்யக் குறும்படம் ஒன்று காட்டினார்கள். ஒரு கழுதைக்குட்டி, 'மகிழ்ச்சி என்பது என்ன, அது எங்கே இருக்கிறது?' என்று தேடி அலைவதாக அந்தப் படம் அமைந்திருந்தது.

வயிறு நிறைய உண்பது மகிழ்ச்சியா? நல்ல இசை கேட்பது மகிழ்ச்சியா? நன்றாக உறங்குவது மகிழ்ச்சியா?

'Is Happiness Here?' என்று கேட்டுக்கொண்டே ஒவ்வொரு இடமாகப் போகிறது கழுதைக் குட்டி.

கடைசியில் காட்டில் வழிதவறி அழுதுகொண்டிருக்கும் ஓர் ஆட்டுக்குட்டியை அதன் தாயிடம் கொண்டு போய்ச் சேர்க்கிறது கழுதைக் குட்டி.

அப்பாடா! என்ன மகிழ்ச்சி! புரிகிறது:

பிறருக்கு உதவுவதுதான் உண்மையான மகிழ்ச்சி!

நாமும் இதுபோன்ற மகிழ்ச்சியை அடைய அடிக்கடி முயல்வோமே?

8

வெளிச்சத்திற்கு வராத வள்ளுவர்கள்!

வள்ளுவர் சொன்னால் தான் வேத வாக்கு!

கம்பர் பாடினால் தான் கவிதை!

இளங்கோ எழுதினால்தான் இலக்கியம்!

- என்று பல பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில்-

வள்ளுவர் வாய்மொழிக்கு நிகரான வேத வாக்குகள்-

கம்ப சித்திரத்திற்கு இணையான கவிதை வீச்சுகள்-

இளங்கோவின் கைவண்ணத்திற்குச் சமமான சொல்வண்ணங்கள்-

எத்தனை எத்தனையோ நித்தம் நித்தம் நாம் கேட்கும் அன்றாடப் பேச்சு வழக்கில் - நடைமுறைத் தமிழில் - ஆங்காங்கே களிநடம்புரியக் காணலாம்.

● நீங்கள் மதுரை மாநகரின் தெருக்களில் ஓடும் ஆட்டோக்களின் முதுகுகளைக் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் நீங்களும் என் முடிவுக்கே வருவீர்கள். பதச்சோறாக ஓர் ஆட்டோ வாசகம் இதோ:

"கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் - அவன்

ஆட்டோ ஓட்டி வேதனையில் வாட வேண்டும்!

பெட்ரோல் விலை ரூபாய்...!"

ஆட்டோ முதுகில் எவ்வளவு அழகான சிந்தனை வீச்சு பாருங்கள்!

சாலையில் செல்லும் போது விபத்து நேராமல் இருக்க வேண்டும் என்றால், நாம் பின்பற்ற வேண்டிய விதி என்ன தெரியுமா? இதோ இன்னொரு சகோதரர் தம் ஆட்டோவின் முதுகில் எழுதி வைத்திருக்கும் பொன்மொழி:

"சாலையைப் பார்த்தா சமத்து; சேலையைப் பார்த்தா விபத்து!"

இதுபோல் மதுரை மாநகரின் ஆட்டோக்களின் முதுகுகளில் காணப்படும் அனுபவ உண்மைகள் இன்னும் எத்தனை எத்தனையோ

உண்டு. அவற்றுள் ஒரு சில இதோ;

"கருவறை முதல் கல்லறை வரை சில்லறை தேவை!"

"பணம் இல்லையென்றால் பந்தம் இல்லை;

சொத்து இல்லையென்றால் சொந்தம் இல்லை!"

"தாய்க்குப் பின் தாரம் சரி; அதற்காக

தாரம் வந்த பின் தாய் பாரமா?"

● ஒரு சில நேரங்களில் தெரு வாசகங்கள் கூட அருமையான 'திருவாசக'ங்களாக அமைந்து நம் நெஞ்சை அள்ளுவது உண்டு. ஒட்டன்சத்திரத்தில் ஒரு எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி. அலுவலகத்தில் எழுதிப் போடப்பட்டிருக்கும் புதுமைக் குறள் இது:

"பொறுமை உடையோர் STD பேசுவர்; அஃதிலார்க்கு

Local-ம் கிடைப்பது அரிது!"

வான்புகழ் வள்ளுவரே இதனைப் பார்க்க நேர்ந்தால் அசந்துபோய் விடமாட்டாரா என்ன?

● ஒரு பட்டிமன்ற நிகழ்ச்சிக்காகக் குழுவினருடன் மணப்பாறை சென்றேன். அங்கே பேருந்து நிலையத்தில் ஏழைச்சிறுவன் ஒருவன் முறுக்கு விற்றுக் கொண்டிருந்தான். எப்படித் தெரியுமா?

"மணப்பாறை முறுக்கு! இங்கே இருக்கு! வாங்கி நொறுக்கு!" சபாஷ்! இயக்குநர் டி.ராஜேந்தருக்குச் சரியான போட்டி இவன்தான்!

● மதுரை மாநகரில் ஒரு திரை அரங்கின் எதிரே உள்ள சிறிய எண்ணெய்ப் பலகாரக் கடையில் காணப்படும் ஒரு வாசகம் இதோ:

"இராமன் தேடிய சீடை இங்கு கிடைக்கும்!"

இராமன் தேடிய சீதைதானே நமக்குத் தெரியும்? இதோ, 'இராமன் தேடிய சீடை!' நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!

● ஒரு நாள் காலையில் உலவச் செல்லும் போது ஒரு தட்டியில் ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சார்ந்த நண்பர்கள் எழுதிப் போட்டிருந்த சில வரிகளைப் படித்துப் பார்த்தேன். அங்கேயே சில மணித்துளிகள் சிலையாக நின்றுவிட்டேன். அவ்வரிகள் வருமாறு:

"சகோதரி

நீ அரைத்து வைத்த

இட்லி மாவு கூட

மறுநாள் பொங்குகிறதே!

நீ எப்போது

பொங்கப் போகிறாய்?"

● 'Tube-Light' மெத்தப் படித்தவர்கள் இதற்கு இணையாகக் கையாண்டிருக்கும் கலைச்சொல்லாக்கம்: 'குழல் விளக்கு!' ஆனால், படிப்பு வாசனையே இல்லாத ஒரு கிராமவாசி போகிற போக்கில் இதற்குப் பயன்படுத்திய கலைச்சொல் 'வாழைத்தண்டு விளக்கு!' என்ன அற்புதமான கற்பனை வளம்! படைப்புத் திறம்!

இன்னமும் வெளிச்சத்திற்கு வராத எத்தனையோ வள்ளுவர்களை - இளங்கோக்களை - கம்பர்களை - பாரதிகளை - தெரு ஓரங்களில் தினம் தினம் சந்திக்கலாம் என்பதை இப்போது ஒப்புக்கொள்கிறீர்களா?

9
பார்ப்பதும் படிப்பதும்!

ஒரு முறை ரசிகமணி டி.கே.சி. அவர்களின் நெருங்கிய நண்பர் ஒருவரின் செல்வக்குமாரி மேற்படிப்பு படிப்பதற்காக அமெரிக்காவுக்குப் புறப்பட்டாள்; புறப்படுவதற்கு முன்னால் டி.கே.சி. அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு போவதற்காக வந்தாள்.

அவள் வணங்கி விட்டு எழுந்து நின்ற போது டி.கே.சி. இப்படிச் சொல்லி அவளை வாழ்த்தினார்:

"அமெரிக்கா போவது பற்றி ரொம்ப சந்தோஷம். அங்கே உள்ள வற்றை எல்லாம் பார்த்துவிட்டு வா, படித்துக்கொண்டு வந்துவிடாதே!"

ரசிகமணி அவர்களுக்கே உரிய முத்திரைச் சிரிப்போடு கூடிய இந்த வாழ்த்தை, நண்பர்களின் புதல்வி உட்பட அனைவரும் ரசித்து மகிழ்ந்தார்கள்.

ரசிகமணியின் இந்தக் கருத்திற்கு இன்னொரு பக்கமும் உண்டு; அதைத்தான் இன்று உங்கள் சிந்தனைக்கு முன்வைக்கிறேன். வெளிநாட்டாரிடம் இருந்து எதைக் கற்றுக்கொள்ள வேண்டுமோ அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்; எதைக் கற்றுக்கொள்ள வேண்டாமோ அதைக் கற்றுக்கொள்ளக்கூடாது; கண்டுகொள்ளவும் கூடாது. அவர்களிடம் பார்க்க வேண்டுவனவும் உண்டு; படிக்க வேண்டுவனவும் உண்டு. உதாரணமாக, பழக்கவழக்கங்கள் சிலவற்றில் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடுகளைக் காண்போம்.

ஒருவரது வீட்டில் அல்லது வீட்டில் உள்ள அவரது தனியறையில் நுழைய வேண்டும் என்றால், வீட்டுக் கதவையோ அறைக்கதவையோ மெல்லத் தட்டி, அவரது இசைவினைப் பெற்ற பின்பு நுழைவதே வெளிநாட்டினர் வழக்கம். நம்மவர் வழக்கத்தை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். கதவைத் தட்டுவதற்கோ, அனுமதி பெறுவதற்கோ நமக்கு எங்கே நேரம்? பொறுமை? திறந்த வீட்டிற்குள் மடமடவென்று நுழைவோம்; படுக்கை அறை வரைக்கும் விறுவிறுவென்று செல்வோம்; சமையலறையையும் விட்டுவைக்க மாட்டோம். கேட்டால் அவ்வளவு நெருக்கமான நட்பு என்போம்.

இதேபோல், அடுத்தவருக்கு வரும் கடிதத்தை - மனைவியே ஆனாலும் சரி, மகன் அல்லது மகள் ஆனாலும் சரி - பிரித்துப் பார்க்கக் கூடாது, படிக்கக்கூடாது என்பது வெளிநாட்டினர் பின்பற்றி வரும் நல்ல வழக்கங்களுள் ஒன்று. அவர்கள் அடுத்தவரின் அந்தரங்கத்திற்கு அவ்வளவு மதிப்புக் கொடுப்பார்கள்; புனிதமாகக் கருதிப் போற்றுவார்கள். இங்கே நம்மவர் நிலையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அடுத்தவருக்கு வரும் கடிதத்தைப் பிரித்துப் படித்தல் என்ற கட்டத்தைத் தாண்டி இன்னும் ஒரு படி மேலே சென்று அந்தக் கடிதத்தைச் சத்தம் போடாமல் எடுத்து மறைத்து வைத்துவிடுவோரும் உண்டு; சில நேரங்களில் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவோரும் உண்டு. 'மொட்டைக் கடுதாசி' எழுதி அடுத்தவரின் அந்தரங்க வாழ்வைக் கொச்சைப்படுத்துவோரும் நம்மிடையே ஒருசிலர் உண்டு!

உணவு உண்ணும் வழக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மேற்கு நாட்டினர் உண்ணும்போது பதட்டமோ பரபரப்போ இல்லாமல் அரைமணி நேரமாவது செலவிட்டு அமைதியாக உண்ணுவார்கள்; ஒவ்வோர் உணவுப் பொருளாகச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடுவார்கள்; பேசிக்கொண்டே ரசித்து, ருசித்து, மெல்லச் சாப்பிடுவார்கள். நாமோ உணவு நேரத்தில்தான் மிகவும் பரபரப்பாக இருப்போம். 'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்' என்ற விதத்தில் வேகமாகச் செயல்படுவோம்; 'நொறுங்கத் தின்றால் நூறு வயது' என்ற பழமொழி நம் வாயில் அவ்வப்போது நடமாடும். ஆனால் வாழ்க்கையிலோ ஒருபோதும் அதைப் பின்பற்றவே மாட்டோம். கேட்டால் 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என்று தத்துவம் வேறு பேசுவோம்.

பண்பாட்டைப் பொறுத்தவரையில் - ஆன்மிகத்தைப் பொறுத்த வரையில் - என்றும் நாம்தான் 'கற்றுக் கொடுக்கும் இனம்!' இதைக் கவியரசர் பாரதியார் போல் நாற்பதாயிரம் கோவிலில் மார்தட்டிச் சொல்லலாம்; இதிலே இரண்டாவது கருத்து இருக்கவே முடியாது. ஆனால் சின்னச் சின்னப் பழக்கவழக்கங்களுள் நல்லனவற்றை மேற்குநாட்டினரிடமிருந்து நாம் தாராளமாகக் கற்றுக் கொள்ளலாம். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு - கற்றுக்கொள்வதிலும்!

10
இன்று நமதே!

புத்தர் பெருமான் மரத்தடி நிழலில் அமர்ந்திருந்தார்.

சுற்றிலும் சீடர்கள், அவருடைய அறிவுரையை எதிர்நோக்கி ஆவலுடன் காத்திருந்தார்கள்.

புத்தர் தம் சீடர்களை நோக்கி, "மனித வாழ்க்கை எவ்வளவு காலம்?" என்று கேட்டார்.

'எதற்கு அவர் இப்படி ஒரு சாதாரணமான கேள்வியைக் கேட்டார்?' என்பது விளங்காமல் சீடர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

புத்தர் பெருமான் சீடர்களின் பதிலுக்காகக் காத்திருந்தார்.

"எழுபது ஆண்டுகள்" என்றார் ஒரு சீடர்.

"தவறு" என்றார் புத்தர்.

"அறுபது ஆண்டுகள்" என்றார் இன்னொரு சீடர்.

"தவறு, தவறு" என்றார் புத்தர்.

"ஐம்பது ஆண்டுகள்" என்றார் இன்னொருவர்.

"அதுவும் தவறு" என்றார் புத்தர்.

'இது என்ன எல்லாவற்றையும் தவறு என்கிறாரே? மனித வாழ்க்கை ஐம்பது ஆண்டுகள் கூட இல்லையா?' என்று திகைத்தார்கள் சீடர்கள்.

சில வினாடிகள் அமைதியாக இருந்தார் புத்தர்.

பிறகு அவர் தமது மௌனத்தைக் கலைத்தவாறே முத்தாய்ப்பாக, "மனித வாழ்க்கை என்பது மூச்சிருக்கும் வரை" என்றார்.

"வாழ்க்கை என்பது வெறும் மூச்சு விடும் நேரம்தானா?" என்று விளங்காமல் கேட்டார் ஒரு சீடர்.

"அப்படியல்ல. வாழ்வு ஒரு கணமன்று; ஆனால் ஒவ்வொரு கணமாக வாழவேண்டும்; ஒவ்வொரு கணப்பொழுதும் முழுமையாக வாழ வேண்டும்; முழு ஈடுபாட்டோடு வாழ வேண்டும்" என்று விளக்கினார் புத்தர்.

மனிதருள் சிலர் நேற்றில் வாழ்கிறார்கள்; நேற்றைய நினைவுகளில் மூழ்கி இறந்த காலத்தில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கை என்பது எப்போதும் 'மலரும் நினைவுகள்'தான்!

இன்னும் சிலர் அறியப்படாத எதிர்காலத்தில் - எதிர்காலக் கனவில், எதிர்கால ஏக்கத்தில் மூழ்கி - ஒரு தெளிவும் இல்லாமல் வாழ்கிறார்கள். எனவே அவர்கள் நிகழ்காலத்தை இழந்துவிடுகிறார்கள். 'தெளிவும் அறியாது முடிவும் தெரியாது மயங்குது எதிர்காலம்' என்பது போல் அவர்கள் ஒருவித மயக்கத்தில் வாழ்கிறார்கள்.

நம் முன்னால் துடித்துக் கொண்டிருப்பது - நம் கைவசம் உள்ளது - நம் ஆளுகைக்கு உட்பட்டது - நம் அதிகாரத்தில் உள்ளது - யதார்த்தமானது - நிகழ்காலம் தான்; நிகழ்காலம் மட்டும்தான்; இறந்த காலமோ, எதிர்காலமோ அல்ல.

நடந்தவை பற்றியோ நடக்கப் போவதைப் பற்றியோ கவலைப்பட்டுக் கொண்டு காலத்தைக் கழிப்பதில் பொருள் இல்லை. நிகழ்காலத்தைப் புரிந்து கொண்டு நடக்க முயல்வதே உண்மையில் வாழும் வழி ஆகும். இன்னமும் எளிமைப்படுத்திச் சொல்ல வேண்டுமா? இதோ, கவிஞர் வைரமுத்துவின் வைர வரிகள்:

"நேற்று வரப்போவதில்லை;

நாளை நம் கையில் இல்லை;

இன்று நமதென்று கொண்டால்

இல்லை மனதோடு தொல்லை!"

இனி, ஒரு விதி செய்வோம்; 'நாளை நமதே' என்பதை மாற்றி 'இன்று நமதே' என்று சொல்லி, ஒவ்வொரு நொடியையும் நம் வசப்படுத்திக் கொள்வோம். இனி இளைய தலைமுறையினரைப் பார்த்து "உங்களுக்கு நல்ல "எதிர்காலம் உண்டு" என்று வாழ்த்துவதை விடுத்து, "நிகழ்காலத்தைப் புரிந்துகொண்டு உயரப் பாருங்கள்; பாடுபடுங்கள்!" என்று அவர்களுக்கு உணர்த்துவோம். சரிதானே?

11
பூவிலே சிறந்த பூ என்ன பூ?

● ஒருநாள் அக்பர் தன் அரசவையில் கூடி இருந்தவர்களிடம் ஒரு கேள்வி கேட்டார்:

"பூக்களிலே சிறந்த பூ என்ன பூ?"

யாராலும் பதில் கூறமுடியவில்லை.

கடைசியாக பீர்பால் பதில் சொல்ல அழைக்கப்பட்டார்.

பீர்பால் சொன்னார்: "உலகம் முழுவதற்கும் மானம் காக்கும் ஆடையை எந்தப் பூ தருகிறதோ அந்தப் பருத்திப் பூவே பூக்களிலே சிறந்த பூ!"

அக்பர் பெருமகிழ்வோடு இந்தப் பதிலை ஏற்றுக்கொண்டார்.

● முனைவர் மு.வரதராசனாரின் குழந்தைப் பாடல் ஒன்று வருமாறு:

"ரோஜாப்பூ வாடிவிடும்
செண்பகப்பூ வாடிவிடும்
மல்லிகைப்பூ வாடிவிடும்
முல்லைப்பூ வாடிவிடும்
வாடாத பூ எதுவோ?
வளருகின்ற இடம் எதுவோ?
வாடாத பூ அறிந்தேன்,
வளருகின்ற இடம் அறிந்தேன்;
வாடாத பூ படிப்பூ (படிப்பு);
வளரும் இடம் பள்ளிக்கூடம்!"

● கவிஞர் கண்ணதாசன் 'குலவிளக்கு' என்ற திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் இடம்பெறும் கேள்வியும் பதிலும் இவை:

"கேள்வி : பூப்பூவா பூத்திருக்கு பூமியிலே ஆயிரம்பூ
பூவிலே சிறந்த பூ என்ன பூ?
பதில் : ரோஜாப்பூ!... தாமரைப்பூ...!
பதில் : ஊஹூம்! அன்பு!"

● கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஒருமுறை பெண்கள் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போது அவர்களைப் பார்த்துப் பின்வரும் கேள்வியைக் கேட்டார்:

"சகோதரிகளே, தாய்மார்களே! நீங்கள் எல்லோருமே பூ வச்சிருக்கீங்க. சிலர் ரோஜாப்பூ வச்சிருக்கீங்க. சிலர் மல்லிகைப்பூ வச்சிருக்கீங்க. இன்னும் சிலர் முல்லைப்பூ, கனகாம்பரப்பூ போன்று பல வகையான பூக்களை வச்சிக்கிட்டிருக்கீங்க. அதனாலேயே பெண்களுக்குப் பூவையர்னு பேரு. இந்த பூக்கள் எல்லாம் இன்னக்கி வச்சா நாளைக்குத் தூக்கி எறிய வேண்டிய பூக்கள். இதெல்லாம் மலரும் பூக்கள். மலர்ந்து மறுநாளே வாடும் பூக்கள். வாடாமல் வளரும் பூவே சிறந்த பூ. அந்தச் சிறந்த பூ என்ன பூன்னு சொல்லுங்க பார்க்கலாம்."

பலரும் விழித்தனர். ஒரு பெண்ணுக்குத் திடீர் என்று நினைவு வந்தது. கேட்பவர் நகைச்சுவை அரசர். ஆகையால் தைரியமாகச் "சிரிப்பூ" என்றார்.

கலைவாணர் கொஞ்சம் சிரித்தார். தான் சரியான விடை கூறிவிட்டதாகக் கருதி அந்தப் பெண்ணும் கூடச் சிரித்தார். கூட்டத்தில் இருந்தவர்களும் சிரித்தார்கள்.

"பார்த்தீர்களா, இதுவும் ஓரளவுக்கு வளரும் பூதான். ஆனா தொடர்ந்து வளராது. இதோ இப்பப் பேச ஆரம்பிச்சதும் நின்னிருச்சு. நிற்காம, தடைப்படாம, வளர்ந்துகிட்டே இருக்கிற பூ சேமிப்பூ தான். ஓரளவு நீங்க சேமிப்புச் செய்துவிட்டு அப்படியே விட்டுட்டாக்கூட வட்டி யின் மூலம் அது வளர்ந்துக்கிட்டே இருக்கும். நீங்க தூங்கினாலும் அது தூங்காது. ஆகையால் சேமிப்பூ தான் சிறந்த பூ. பெண்களாகிய நீங்கள் சேமிக்கத் தொடங்கணும்கிறதை வற்புறுத்தத்தான் இந்தக் கூட்டம். ஆகவே சேமிப்பே சிறந்த பூ" என்று முத்தாய்ப்பாகக் கூறி முடித்தார் கலைவாணர்.

கொஞ்சம் கிண்டலும் துணிச்சலும் உள்ள ஒரு பெண்மணி கலைவாணருடனேயே மோதிப்பார்க்க நினைத்தார். "சேமிப்பு சிறந்த பூதான். சேமியாப்பூ கூட இருக்கா?" என்று கலைவாணரைப் பார்த்துக் கேட்டார். எல்லோரும் சிரித்தனர்.

கலைவாணரும் சிரித்துக்கொண்டே, "பாயாசம் சம்பந்தப்பட்ட

அப்பளத்துக்குப் பூ வந்தாச்சு. சேமியா, அப்பளம் பூத்தது மாதிரி இன்னும் பூக்கலை. அப்பளப்பூவைக் கண்டுபிடிச்ச பூவையர்தான் சேமியாப் பூவையும் கண்டுபிடிக்கணும்" என்றார்.

கூட்டம் பூராவும் ஒரே சிரிப்பூ..

● ஒரு கல்லூரியின் இலக்கிய மன்றத்திற்குப் பேசச் சென்றிருந்த போது எனக்கு நேர்ந்த அனுபவம் இது. பேச்சின் இடையே கூடி இருந்த மாணவர்களைப் பார்த்துக் கேட்டேன்:

"பூவிலே சிறந்த பூ எது?"

கூட்டத்தில் இருந்த ஒரு மாணவன் குறும்பாகச் சொன்ன பதில் "குஷ்பூ"

"பூவிலே சிறந்த பூ படிப்பூ அல்லது உழைப்பு என்று யாராவது சொல்லி இருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன்" என்று மாணவர் கூட்டத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே சொன்னேன்.

மீண்டும் அதே குரல்: "அது உங்களுக்கு... இது எங்களுக்கு!" நடிகை குஷ்பூ உச்சத்தில் இருந்த நேரம் அது! கூட்டமே கலகலத்தது கொஞ்ச நேரத்திற்கு.

ஷேக்ஸ்பியரின் பாணியில் 'ஓ, குறும்பே! உன் பெயர்தான் இளமையோ?' என்று சொல்லத் தோன்றியது எனக்கு.

● அண்மையில் ஒரு பள்ளிக்கூடத்தின் இலக்கிய மன்றத் தொடக்க விழாவில் கலந்துகொண்டேன். உரையின் இடையே "பூவிலே சிறந்த பூ எது?" என்று நான் கேட்டபோது கீழே அமர்ந்திருந்த ஒரு 'வாண்டு' சொன்ன பதில்:

"செருப்பு!"

ஒருகணம் அசந்து போனேன் நான்!

எண்ணிப்பாருங்கள்: கேள்வி ஒன்றுதான். ஆனால் அந்தக் கேள்விக்குக் கிடைத்திருக்கும் பதில்களோ பலவிதம்; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். அந்தப் பதில்களில் வெளிப்பட்டிருக்கும் அறிவாற்றலும் அனுபவ முத்திரையும் நகைச்சுவை உணர்வும்தான் எத்தனை எத்தனை விதங்கள் பாருங்கள்! இதுபோல் தான் நம் வாழ்க்கையும். வாழ்க்கையும் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்!

12

சாதி - வாழ்நாளில் எதையாவது சாதி!

சாதியின் பெயரால் - மதத்தின் பெயரால் - இன்று நாடெங்கும் நடந்திருக்கும் சண்டை சச்சரவுகள் எத்தனை! மூண்டிருக்கும் கலவரங்கள் எத்தனை எத்தனை? சிந்திய இரத்தங்கள் - சந்தித்த இழப்புக்கள் - எத்தனை எத்தனை எத்தனையோ?

சில நேரங்களில் நான் நினைப்பது உண்டு. வேறுபாடுகளுக்குக் காரணமான சாதி, மதம் என்ற இரண்டு சொற்களையும் நம் வாழ்க்கை அகராதியில் இருந்தே நீக்கிவிடுவோம். இந்திய நாட்டு இளைஞர்களின் நெஞ்சங்களிலே 'சாதி' என்பது இனி 'நீ உன் வாழ்நாளில் எதையாவது சாதி' (Achieve) என்ற பொருளில் குடியிருக்கட்டும்! இதேபோல் 'மதம்' என்ற சொல்லை இன்றைய இளைய தலைமுறை 'கொள்கை' (Principle) என்ற பொருளில் கையாளட்டும். சண்டைகளுக்கும் கலவரங்களுக்கும் காரணமான சாதிக்கும் மதத்திற்கும் சாவு மணி அடிப்போம்; முற்றுப்புள்ளி வைப்போம்.

சாதிக் கொடுமைக்கு எதிராகத் தமிழ் இலக்கிய உலகில் எத்தனை பேர், எப்படி எல்லாம் குரல் கொடுத்திருக்கிறார்கள், எண்ணிப்பாருங்கள். "சாதி இரண்டொழிய வேறில்லை" என்றார் ஔவைப் பெருமாட்டி. நாமோ "சாதி ஒழிய வேறில்லை" என்று சாற்றிக் கொண்டிருக்கிறோம். "சாதி ஆவது ஏதடா?" என்று கேட்டார் சித்தர் சிவவாக்கியர். நாமோ அவர் பேச்சைக் காதிலேயே போட்டுக் கொள்வதில்லை. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாப்பாவுக்குப் பாடினார் பாரதியார். மனம் திறந்து சொல்லுங்கள், அவர் இன்றைய சூழலில் இந்த அறிவுரையைப் பெரியவர்களுக்குச் சொன்னால் அவர்கள் கேட்டிருப்பார்களா? "நீ போப்பா உன் வேலையைப் பார்த்துக்கொண்டு" என்று கூறியிருப்பார்கள். ஒருகால் "சாதிகள் இருக்குதடி பாப்பா - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் லாபம்" என்று 'பாட்டுக்கொரு புலவர்' பாரதியிடமே எதிர்ப்பாட்டு பாடியிருப் பார்கள். "இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே" என்று ஆழ்ந்த வேதனையோடு பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். நாமோ அவர் பாடல் வரிகளையும் பாடிக்கொண்டு மறைவாக நமக்குள்ளே சாதி உணர்வை வளர்த்துக் கொண்டிருக்கிறோம்:

சாதிச் சங்கங்களை - மாநாடுகளை - கோலாகலமாக நடத்திக் கொண்டிருக்கிறோம். 'ஜாதி ஒழிந்தது' என்ற தலைப்பில் அமைந்த ஒரு புதுக்கவிதை. இப்போக்கினை அங்கதச் சுவையோடு சாடுகின்றது. அக்கவிதை இதோ:

'கருப்பண்ண மூப்பனார்
ரங்கசாமி ரெட்டியார்
முத்துலிங்க முதலியார்
தவஞான கிராமணியார்
பழனிசாமி படையாச்சி
அழகப்பச் செட்டியார்
அனைவரும் பங்குகொள்ளும்
ஜாதி ஒழிப்பு மாநாடு
நாட்டார் நகரில்
நாயக்கர் தெருவில்
நாளை நடைபெறும்
அனைவரும் வருக!"

வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால் இதுதான் நாம் இன்று சாதியை ஒழி(ளி)த்துக் கொண்டிருக்கும் இலட்சணம்!

இவ்வளவு பேர் எடுத்துச் சொல்லியும் கேட்காத நாம், இனிமேலா கேட்கப்போகிறோம்? பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் சொற்களிலே சொல்வது என்றால்-

"ஒன்றுமே நடக்கவில்லை தோழா - ரொம்ப நாளா!"

குருநானக்கின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி இங்கே நினைவு கூரத்தக்கது: ஹரித்துவாருக்கு ஒருமுறை குருநானக் சென்றிருந்தபோது அங்கிருந்த பண்டிதர்கள் எல்லாம் அவரைச் சூழ்ந்து கொண்டனர். "நீர் எந்த ஊரில் இருந்து வருகிறீர்? உமது சாதி என்ன?" என்று அவரிடம் கேட்டார்கள். குருநானக் அவர்களிடம் இப்படிச் சொன்னார்:

"காற்றுக்கும் நீருக்கும் எந்த ஜாதியோ அதுவே எனது ஜாதி. இரவும் பகலும் எந்த ஊரில் இருந்து வருகின்றனவோ அந்த ஊரில் இருந்துதான் நானும் வருகிறேன்."

அந்தப் பண்டிதர்களுக்கு இந்தப் பதில் புரிந்ததோ புரியவில்லையோ தெரியாது. ஆனால் குருநானக்கின் பதில் அருமையானது; ஆழமானது.

நாம் காற்றைப் போல - நீரைப் போல - இரவும் பகலும் போல - எந்தவிதமான கட்டுப்பாடும் வேறுபாடும் இல்லாமல் எல்லோருக்கும் பொதுவாக இருப்போம்; ஒரு நியதிக்கு - இயற்கை ஒழுங்குக்கு - உட்பட்டுச் சுதந்திரமாக வாழ்வோம். முத்தாய்ப்பாக, பாரதியாரின் பாடல் வரிகளையே இப்படி மாற்றிச் சொல்லலாம் போல் தோன்றுகிறது:

'விட்டு விடுதலையாகி நிற்பாய் - இந்த
சிட்டுக்குருவியைப் போலே - ஏ, மனிதனே!
சாதியை விட்டு, மதத்தை விட்டு
விடுதலையாகி நிற்பாய் - ஒரு
சிட்டுக் குருவியைப் போலே!'

18

கலியுகப் பரதாழ்வார்கள்!

தொலைக்காட்சியில் வரும் 'சென்ற வார உலகம்' போல என் வாழ்க்கைப் பயணத்தில் சென்ற வாரத்தில் ஒருநாள். காலைப்பொழுது; பல்கலைக் கழகத்தில் உடன் பணியாற்றும் நண்பர் ஒருவரின் இல்லத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன். முகூர்த்த நேரம் முடிந்தது. மணமக்களுக்கு என் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். பந்தியில் அமர்ந்து விருந்து சாப்பிட்டேன். பிறகு நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பி வந்து பார்த்தால்... நான் விட்டுச் சென்ற இடத்தில் என்னுடைய செருப்பைக் காணோம். சுற்று முற்றும் தேடிப்பார்த்தேன். எங்கும் இல்லை. புதுச்செருப்பு. என் முகக் குறிப்பைக் கண்டு கொண்ட இன்னொரு நண்பர், "என்ன ஆச்சு?" என்று கேட்டார். அவரிடம் நடந்ததைச் சொன்னேன். மற்றவர்களும் உன்னிப் பாகக் கேட்டார்கள். அதற்குப் பிறகு நடந்ததுதான் முக்கியமானது. ஒரு பத்து மணித் துளிகளுக்கு அங்கே எனக்கு இலவசமாக அளிக்கப்பட்ட ஆறுதல்கள் - சொல்லப்பட்ட யோசனைகள் - உதிர்க்கப்பட்ட தத்து வங்கள் - எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்கள் - அடேயப்பா, புத்தன், ஏசு, காந்தி, வள்ளுவன் எல்லோரும் பிச்சை வாங்க வேண்டும், போங்கள்.

ஒருவர் நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம்: "இன்றைய சூழலில் நாம் தான் கவனமாக இருக்க வேண்டும். திருமண வீட்டிற்குப் போய் புதுச்செருப்பைப் போட்டுக்கொண்டு வரலாமா? சாதாரணமான செருப்பைப் போட்டு வந்திருக்கலாம் அல்லவா?... த்ஸூ... இப்படி ஆகிவிட்டதே!".

இன்னொருவர் ஆறுதலும் ஆலோசனையுமாகச் சொன்ன கருத்து: "காரிலேயே விட்டுவிட்டு வந்திருந்தால் இப்படி ஆகியிருக்காது அல்லவா? சரி, போட்டுக் கொண்டு வந்ததுதான் வந்தீர்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாக இரண்டு செருப்புக்களையும் பிரித்தாவது போட்டிருக்கக்கூடாதா? யாரும் அவ்வளவு சுலபமாகப் போட்டுக்கொண்டு போயிருக்க முடியாது அல்லவா?"

மற்றொருவர் புலனாய்வுத்துறை வல்லுநரின் பாணியில் சொன்னது இது: "இப்பொழுது தானே வந்தீர்கள்? அதற்குள்ளாகவா? நன்றாகத்

தேடிப் பாருங்கள்! ஆட்களின் முகங்களைப் பார்த்துக் கொண்டிருக் காமல், கால்களையே கொஞ்சம் கவனித்துப் பாருங்கள், கண்டு பிடித்துவிடலாம்."

திருமணத்திற்கு என்னுடன் காரில் வந்த ஆசிரிய நண்பர் 'கவலைப்படாதே சகோதரா' என்ற பாணியில் இப்படிச் சொன்னார்: "பக்கத்தில் விட்டுச்சென்ற என் செருப்பு இருக்கிறதே? உங்கள் செருப்பை மட்டும் தேடி வந்தா எடுத்துக்கொண்டு போயிருப்பார்கள். ஒருவேளை தெரியாமல் மறந்து போட்டுப் போயிருந்தால்...? கொஞ்சம் பொறுங்கள்!..."

எல்லோருடைய பேச்சுக்களையும் கேட்டபோது எனக்கு முல்லாவின் கதை ஒன்று நினைவுக்கு வந்தது. அக்கதை இதோ:

ஒருநாள் ஒரு விருந்துக்குப் போய்விட்டு மாலை நேரத்தில் வீடு திரும்பிய முல்லாவும் அவர் மனைவியும் வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, வீட்டில் உள்ள பல பொருள்கள் களவாடப்பட்டதைக் கண்டு பதறினார்கள்.

மிகுந்த சினமடைந்த முல்லாவின் மனைவி, "கிளம்பும் சமயம், நன்றாகப் பூட்டியிருக்கிறோமா என்று பார்க்காமல் வந்துவிட்டீர்களே?" என்று முல்லாவைக் குற்றம் சாட்டினாள்.

அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் செய்தி அறிந்து முல்லாவின் வீட்டில் கடிவிட்டனர்.

ஒருவர் முல்லாவைப் பார்த்து, "ஒரு தடவைக்கு இரண்டு தடவை பூட்டை இழுத்துப் பார்த்திருக்க வேண்டும்" என்று சொன்னார்.

மற்றொருவர் முல்லாவிடம், "வேறு நல்ல உறுதியான பூட்டைப் பூட்டியிருக்கக்கூடாதா?" என்று வினவினார்.

"காலையில் போய் மாலை நேரத்தில் வீடு திரும்பினால் இடையில் திருடர்கள் வீட்டில் புகுந்துவிடுவார்களே! இதை முன்பே எதிர்நோக்கித் தகுந்த காவல் வைத்திருக்கலாம் அல்லவா?" என்று வேறொருவர் முல்லாவைக் கேட்டார்.

இவ்வாறு எல்லோரும் தம்மையே குற்றம் சாட்டுவதைக் கண்ட முல்லா, "நீங்கள் எல்லோரும் என்னையே குறைகூறி, என் செயலிலேயே தப்புக் காண்கிறீர்கள்? பூட்டை உடைத்துப் பல பொருள்களைக் களவாடிச்

சென்ற திருடனை யாரும் குறை கூறவில்லையே" என்று அங்கு நின்றவர்களிடம் கேட்டார்.

ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள், முல்லாவின் கேள்வி நியாயமானது தானே? என் அனுபவத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். ஒருவர் விடாமல் எல்லோரும் என் மீது தானே குறை கூறினார்கள்? குற்றம் சாட்டினார்கள்? எனக்குத் தானே ஆறுதலும் யோசனையும் சொன்னார்கள்? யாராவது ஒருவர் கூடத் திருமண வீட்டில் இருந்து என் புதுச்செருப்பை எடுத்துச் சென்ற 'இந்த நூற்றாண்டின் பரதாழ்வா'ரைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே?

'கலியுகப் பரதாழ்வார்'களே! உங்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:

தன் தலைவனுக்காகக் கடைசி வரை கடுமையாகப் பாடுபடும் உண்மையான தொண்டர்களைக் கேவலப்படுத்தாதீர்கள். ஆம், உங்களின் இழிவான செயலால் செருப்புகளே வெட்கித் தலைகுனிந்து கொள்கின்றனவே? அது உங்களுக்குத் தெரியவில்லையா?

14
அகத்தின் அழகு பேச்சில் தெரியும்!

அகத்தின் அழகு முகத்தில் மட்டும் அல்ல, பேச்சிலும் தெரியும். எனவே, யாரிடம், எப்படிப் பேசுவது என்று தெரிந்து கொண்டு நடந்தால் போதும். உண்மையில் பண்பாடு என்பது அப்படி நடப்பதில்தான் வெளிப்படும். இவ்வளவு ஏன்? 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்றுதான் சங்கச் சான்றோரும் பண்பாட்டிற்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்கள்.

சில பேர் எப்போது பார்த்தாலும் கேலியும் கிண்டலுமாகவே பேசுவார்கள்; குத்தலும் குதர்க்கமுமாகவுமே பேசுவார்கள்; நக்கலும் நையாண்டித்தனமுமாகவே பேசுவார்கள். நிலைமை எப்போதும் ஒரே மாதிரியாக இருந்துவிடாது அல்லவா? யாராவது ஒருவர் முன்வந்து சரிக்குச் சரியாகப் பதிலடி கொடுக்கும்போது தான் இவர்கள் தங்கள் வாயைப் பொத்திக் கொள்வார்கள். ஒருமுறை 'இரும்பு மனிதர்' சர்தார் வல்லபாய் படேலிடம் ஒரு வெள்ளைக்காரன் நையாண்டித்தனமாக "உம்முடைய கல்சர் (பண்பாடு) என்ன?" என்று கேட்டான். அதற்குப் படேல், "என்னுடைய கல்சர் - அக்ரிகல்சர் (விவசாயம்)" என்றார் அழுத்தம் திருத்தமான குரலில். அதற்கு மேல் அந்த வெள்ளைக்காரன் படேலிடம் எந்தவிதமான கேள்வியும் கேட்கவில்லை.

இன்னும் சில பேர் இருக்கிறார்கள். இவர்கள் எப்போதும் ஆணவத்தின் உச்சத்திலே இருந்து கொண்டுதான் பேசுவார்கள். எதிரில் இருப்பவர்களை எதுவும் தெரியாத அப்பாவிகளாக - ஒன்றுக்கும் பற்றாத அற்பப் புழுக்களாகக் கருதிக்கொண்டுதான் பேசுவார்கள். இவர்களும் ஒருநாள் யாரிடமாவது வசமாக மாட்டிக்கொள்வார்கள். வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டிக்கொள்வார்கள்; ஓர் உண்மை நிகழ்ச்சி:

அது சுதந்திரப் போராட்டக் காலம். பாபு இராஜேந்திர பிரசாத் ஒருமுறை பாட்னாவில் இருந்து தமது சொந்த ஊருக்கு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எதிர்ப்புறம் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் ஓயாமல் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான். அவன் வெளியிட்ட சிகரெட் புகை ராஜன் பாபுவின் முகத்தை நோக்கியே வந்து அவருக்குப் பெருத்த சங்கடத்தைத் தந்தது. ராஜன் பாபு அந்த

இளைஞனை நோக்கி, "தம்பி, நீ புகைக்கும் சிகரெட் உனக்குச் சொந்தமானது தானே?" என்று கேட்டார்.

"பின்னே, நான் புகைக்கும் சிகரெட் என்னுடையதாக அல்லாமல் உங்களுடையதாகவா இருக்க முடியும்?:" என்று அந்த இளைஞன் ராஜன் பாபுவைப் பார்த்துக் கர்வமாகத் திருப்பிக் கேட்டான்.

உடனே ராஜன் பாபு, "சிகரெட் உனக்குச் சொந்தமாக இருக்கும்போது, அதன் புகையும் உனக்குத்தானே சொந்தமாக வேண்டும்? அதை மட்டும் ஏன் என் மீது ஊதித்தள்ளுகிறாய்?" என்று இனிய குரலில் அந்த இளைஞனிடம் வினவினார்.

அதன்பிறகு பாபு இராஜேந்திர பிரசாத் ரயிலை விட்டு இறங்கும் வரை அந்த இளைஞன் புகை பிடிக்கவே இல்லை.

வாழ்க்கையில் எங்கும் - எப்போதும் - யாருடனும் நல்லுறவோடும் நட்போடும் இருக்க வேண்டுமானால் நீங்கள் உங்கள் பேச்சிலே பின்பற்ற வேண்டிய நெறிமுறை இதுதான்:

ஆறு முக்கியமான சொற்கள்:"ஒப்புக்கொள்கிறேன், இது என்னுடைய தவறுதான், நானே பொறுப்பு."

ஐந்து முக்கியமான சொற்கள் : "தங்களுடைய பணி சிறப்பானது, மனமார்ந்த பாராட்டுதல்கள்."

நான்கு முக்கியமான சொற்கள் : "இதில் தங்களுடைய கருத்து என்ன?"

மூன்று முக்கியமான சொற்கள் : "தாங்கள் மனது வைத்தால்...?"

இரண்டு முக்கியமான சொற்கள் : "மிக்க நன்றி."

ஒரு முக்கியமான சொல் : "நாம்."

தேவையில்லாத சொல் "நான்."

'ஒரு பேச்சுக்கு' அல்ல, உண்மையாகவே உங்களிடம் கேட்கிறேன்: 'அகத்தின் அழகு பேச்சில் தெரியும்' என்னும் புதுமொழியில் இப்போது உங்களுக்கு முழு உடன்பாடுதானே?

15

உண்மையான இந்தியா எது?

● **கா**லையில் வழக்கம் போல் உலவச் சென்ற போது கண்ட ஒரு காட்சி என் மனத்தை மிகவும் நெகிழச் செய்தது. கேள்விக் குறி போல் முதுகு வளைந்த ஒரு மூதாட்டி, வயது எண்பதுக்கு மேல் இருக்கும். நரை திரை மூப்பு பிணி நான்கும் அணிவகுத்து வந்து அவர் உடம்பின் மேல் படை எடுத்திருந்தன. அவரது மகன் - அவருக்கு ஏறத்தாழ ஐம்பத்தைந்து வயது இருக்கும் - மூதாட்டிக்குப் பொறுமையாகப் பணிவிடை செய்து கொண்டிருந்தார்; சீப்பால் தலைவாரி, சடை பின்னிக் கொண்டிருந்தார்; பிறகு முகத்தையும் உடம்பையும் சுத்தம் செய்து கொண்டிருந்தார். குழந்தையாக இருந்தபோது தாயின் நிலையில் இருந்து அந்த மூதாட்டி அவருக்குச் செய்து மகிழ்ந்த பணிவிடைகளை எல்லாம் இப்போது அவர் ஒரு மகன் என்ற நிலையில் இருந்து கடமை உணர்வோடு தள்ளாத வயதில் இருக்கும் தன் தாய்க்கு - மூதாட்டிக்கு - செய்து கொண்டிருந்தார்.

மனிதன் எவ்வளவுதான் வளரட்டும்; வயது ஆகட்டும்; பட்டமும் பொறுப்பும், செல்வமும் செல்வாக்கும் சேரட்டும்; மனைவி, மக்கள், பேரன், பேத்தி என்று பற்பல குடும்ப உறவுகள் பெருகட்டும். அவனது மனத்தில் இருந்து தாயன்பு என்பது சிறிதும் அகன்று விடாது; தாயின் மீது கொண்ட பற்றும் பாசமும் கொஞ்சமும் குறைந்துவிடாது; தாயின் மடி தந்த சுகம் - இதம் - எல்லாம் ஒரேயடியாக நீங்கிவிடாது. வயது முதிர்ந்தாலும், மனிதன் மனம்,

"பாராட்ட - மடியில் வச்சுத் தாலாட்ட -

எனக்கொரு தாய்மடி கிடைக்குமா?"

என்றுதான் எந்த நாளும் ஏங்கும்.

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை 'என் கதை' என்ற தம் சுயசரிதையில் தாயைப் பற்றி எழுதியுள்ள வரிகள் பொன்னெழுத்துக் களால் பொறிக்கத்தக்கவை ஆகும். அவ் வரிகள் இதோ:

"அன்னைக்குப் பதில் பின்னையொருவர் கிடைப்பாரா? எத்தனையோ நண்பர்கள் கிடைக்கலாம். எத்தனையோ கலியாணங்களைச் செய்து கொள்ளலாம். எத்தனையோ பேருடன் உறவாடலாம். ஆனால், அன்னை

ஒருத்தி தான். அவள் அன்பும் அலாதிதான். அந்த அரும்பெரும் பொருளையும் எவ்வளவோ பேர் அறியாமல் அவமதிக்கிறார்கள்."

● மாலையில் வழக்கம் போல் நானும் துணைவியும் உலவச் சென்றோம். அப்போது நான் கண்ட பிறிதொரு காட்சி என் உள்ளத்தைப் பாகாய் உருக்கியது. பக்கவாத நோயால் தாக்கப்பட்ட ஒரு பெரியவர். வயது அறுபதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கலாம். அவரது துணைவியார் அவர் கையைப் பற்றி மெதுவாக அழைத்துக் கொண்டு வந்தார். அவரது நடைக்கு ஈடுகொடுத்து, ஒரு தாய்ப் பறவை தன் சின்னஞ்சிறு குஞ்சினைப் பாதுகாப்பது போல் அன்பும் ஆதரவும் காட்டிக் கூட்டிக்கொண்டு வந்தார்.

என் உள்ளத்தில் இந்தக் காட்சி மின்னலைப் போல் பாய்ந்து எனக்கு ஓர் உண்மையை உணர்த்தியது. இளமையில் ஒரு மனிதனுக்குத் தாயின் மடி தரும் அன்பையும் அரவணைப்பையும், ஆறுதலையும் ஆதரவையும் முதுமையில் தாரத்தின் தோள் அவனுக்குத் தருகின்றது. உண்மையில் ஒரு மனிதனுக்குத் திருமணமான புதிதில் தனது இளம்மனைவியின் தோளில் சாயும்போது கிடைக்கும் இன்பத்தை விடப் பல மடங்கு கூடுதலான இன்பம், முதுமையில் வயதான அவளது தோளில் சாயும்போது அவனுக்குக் கிடைக்கும்.

"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"

என்று வள்ளுவரும், தான் விரும்பும் பெண்ணின் மெல்லிய தோள் மீது தலை சாய்த்துத் துயிலும் போது ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் தனிப்பெருஞ்சுகத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.

ஒரு மனிதனுக்கு முப்பது வயதில் தனது மனைவியின் இளமை ததும்பும் உடல் அழகு தெரியும். நாற்பது வயதில் அவளது தூய அன்பு உள்ளம் புரியும். ஐம்பது வயதில் அவனுக்கு அவளது அருமை புலனாகும். அறுபது வயதில் அவள் இல்லாமல் தான் இல்லை என்ற முடிவுக்கு அவன் வருவான். எழுபது வயதில் அவள் தாயாக, அவன் அவளது சேய் ஆவான். எழுபது வயதுக்கு மேலேயும் இருவரும் வாழ்கிறார்கள் என்றால், மனைவி தெய்வம் ஆவாள்; கணவன் அவளது பக்தனாக ஆவான்.

"ஆலம் விழுதுகள் போல் - உறவு
ஆயிரம் வந்தும் என்ன?
வேரென நீ இருந்தாய் - அதில் நான்
வீழ்ந்து விடாதிருந்தேன்!
பேருக்குப் பிள்ளை உண்டு - பேசும்
பேச்சுக்குச் சொந்தம் உண்டு - என்
தேவையை யாரறிவார் - உனைப்போல்
தெய்வம் ஒன்றே அறியும்"

என்னும் கண்ணதாசனின் அனுபவ மொழிகள் இங்கே மனங்கொள்ளத் தக்கவை ஆகும்.

'உண்மையான இந்தியா எது?' என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் என்னிடம் கேட்டால் அவருக்கு நான் அழுத்தம் திருத்தமாக இந்தப் பதிலைக் கூறுவேன்; அவருக்கு மட்டுமல்ல, அனைத்து உலகிற்கும் இந்தியா விடுக்கும் நற்செய்தியாக இதனை முரசறைவேன்:

"உண்மையான இந்தியா என்பது கட்டுக்கோப்பான குடும்பங்களில் வாழ்கிறது. கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு மிகுந்த குடும்ப உறவுகளினாலேயே என்றென்றும் அது உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும்!"

16

நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்!

நம் வாழ்வில் தீய பழக்கங்கள் தொடக்க நிலையில் ஒரு பணியாளனைப் போல் மெதுவாக அடியெடுத்து வைக்கும். ஆனால், நாளாவட்டத்தில் அவை வழக்கங்களாக நிலைபெற்று விடும். முடிவில் அவை எஜமான் ஆகிவிடும்; நாம் அடிமைகளாக மாறிவிடுவோம். இதனை யாராலும் தடுக்கவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது. கிழக்கிந்திய வியாபாரக் கம்பெனி வடிவில் முதலில் உள்ளே நுழைந்து, பிறகு படிப்படியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமாக மாறி, நம்மை அடிமை கொண்ட ஆங்கிலேயர்களைப் போலத்தான் தீய பழக்கங்களும் செயல்படும். நாம் தான் பொறுப்போடும் விழிப்போடும் இருந்து, ஆங்கில ஏகாதிபத்தியத்தை நாட்டை விட்டே விரட்டி அடித்தது போல், தீய பழக்கங்களை நம் வாழ்வை விட்டே ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும். இது அவ்வளவு எளிதில் முடியக்கூடிய ஒரு காரியம் அல்ல. அதற்காக நாம் மனம் வைத்து முயன்றால், முடியவே முடியாத காரியமும் அல்ல. சற்று விரிவாகச் சிந்தித்துப் பார்ப்போமா?

சில பேர் குடிப்பழக்கத்தில் மூழ்கித் தங்கள் குடியைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இவர்களிலே இரண்டு சாதிகள் உண்டு. ஒரு சாதியார், வசதியானவர்கள். இவர்கள் அயல்நாட்டு மது வகைகளைத்தான் அருந்து வார்கள். குடிப்பழக்கத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் 'விதேசிகள்'; இன்னொரு சாதியார், 'நாட்டுப் பற்று' மிகுந்தவர்கள். அதிலும் உள்ளூர்ப் பற்று இவர்களுக்குத் தூக்கலாக இருக்கும். 'நாட்டுச் சரக்'கைத் தான் இவர்கள் எப்போதும் நாடுவார்கள். கேட்டால் அதில்தான் 'கிக்' அதிகம் கிடைக்கும் என்று காரணமும் கூறுவார்கள். ஒருமுறை கள்ளச்சாராயம் குடித்து உடல்நலம் சீர்கெட்டு மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டார் ஒருவர். அவரிடம் "ஏன் இப்படிக் குடித்துக் குடித்து உடம்பைப் பாழாக்கிக் கொள்கிறீர்கள்?" என்று கேட்டபோது, "கவலையை மறக்கக் குடிக்கிறேன்" என்றார் அவர். "அப்படி என்ன கவலை உங்களுக்கு" என்று மீண்டும் கேட்டபோது, அவர் அப்பாவித்தனமாகச் சொன்ன பதில் இது: "அதான் குடித்ததும் மறந்து போச்சே". மது உள்ளே

சென்றால் மதி வெளியேறிவிடும்" என்று ஒருமுறை மூதறிஞர் ராஜாஜி சொன்னது எவ்வளவு சத்தியமான வாக்கு பார்த்தீர்களா?

இன்னும் சில பேரைப் புகைப்பழக்கம் சிக்கெனப் பிடித்துக் கொண்டிருக்கும். இவர்கள் சிகரெட், பீடி, சுருட்டு என்று எதையாவது விடாமல் ஊதிப் புகையை வெளியே தள்ளிக்கொண்டே இருப்பார்கள். 'Chain Smoker' என்று தங்களைச் சொல்லிக் கொள்வதிலே இவர்களுக்குத் தனிப் பெருமை வேறு. புகைப் பழக்கத்தால் தம் உடல்நலம் கெடுவதோடு மட்டுமின்றி, சுற்றுப்புறச் சூழலுக்கும் கேடு விளைவது இவர்களுக்குத் தெரியாமல் இல்லை என்றாலும், தூங்குவது போல் பாசாங்கு செய்யும் இவர்களை யார்தான் எழுப்ப முடியும்? பல ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகை ஒன்றிலே வெளிவந்த கேள்வி-பதில் இது:

"புகை 'குடிப்பது' என்பது சரியா? 'பிடிப்பது' என்பது சரியா?

"புகை'விடுவது' தான் சரி!"

'பாழாய்ப்போன புகைப்பழக்கத்தை விட்டுத் தொலைப்பதுதான் சரி' என்பதை எவ்வளவு நச்சென்று சொல்லிவிட்டது இந்த சின்னஞ்சிறு பதில் பாருங்கள்.

வேறு சிலர் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, சீவல், புகையிலை சகிதமாகவே எப்போதும் காட்சி அளிப்பார்கள். இவர்களின் வாய் அடிக்கடி அரவை இயந்திரம் போல் செயல்பட்டுக்கொண்டே இருக்கும். இவர்களிலே ஒருசாரார் இப்போது 'காலம் மாறும்போது நாமும் கூடவே மாற வேண்டாமா'? என்று கேட்டு, புகையிலைப் பழக்கத்தில் இருந்து 'பான் பராக்' சாப்பிடும் பழக்கத்திற்கு மாறி இருக்கிறார்கள். இவர்கள் வீட்டுக்குப் புற்று நோய் ஒருநாள் முக்கிய விருந்தாளியாக வரும். இவர்கள்தான் தினம் தினம் அதைப் பலமுறை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்துக்கொண்டிருக்கிறார்களே?

இதுபோல் பொடி போடுவது, அடிக்கடி காப்பி குடிப்பது, அளவுக்கு மீறிப் புலால் உண்பது போன்ற தீய பழக்கங்களிலே சிக்கிக்கொண்டு அவற்றில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கின்ற மனிதர்கள் பல பேர் இன்று உண்டு. அவர்களுக்காக ஒரு வார்த்தை;

தயவு செய்து தீய பழக்கங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக, படிப் படியாக விட்டு விடலாம் என்று நினைக்காதீர்கள். ஒரேடியாக,

உடனடியாக விட்டொழியுங்கள். அதுதான் நடைமுறைக்கு ஒத்துவரும்; நிலைத்த பயனையும் தரும். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி:

நண்பர் ஒரு காலத்தில் 'செயின் ஸ்மோக்க'ராக இருந்தவர். ஒருநாள் அவரது மகன் அவரிடம், "அப்பா, சிகரெட் குடிக்கக்கூடாது என்று பள்ளிக்கூடத்தில் என்னுடைய ஆசிரியர் சொன்னார், நீங்கள் குடிக்கிறீர்களே?" என்று கேட்டானாம். அசந்துபோன நண்பர் தம் புகைப் பழக்கத்தைக் கொஞ்சம் குறைத்தாராம்; மகனுக்குத் தெரியாமல் அவ்வப் போது குடித்து வந்தாராம். ஒருநாள் அதையும் பார்த்துவிட்ட அவரது மகன், "இனிமேல் சிகரெட் குடிக்க மாட்டேன் என்று என்னிடம் சொல்லி விட்டு, எனக்குத் தெரியாமல் குடிக்கிறீர்களே அப்பா?" என்று உருக்கமாகக் கேட்டானாம். அதிர்ந்து போன நண்பர் அந்தக் கணமே புகைப்பழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாராம். இதுபோல் இன்னொரு நண்பர் கடைக்குச் சென்று சிகரெட் வாங்கி வருமாறு தம் மகனை அனுப்பினாராம். மகனோ அவருக்குத் தெரியாமல் அவருடைய பையில் இருந்து இரண்டு சிகரெட்டுகளை எடுப்பதை ஒருமுறை மறைந்து நின்று பார்த்தாராம். அதில் இருந்து சிகரெட் குடிக்கும் பழக்கத்தை அடியோடு கைகழுவிவிட்டாராம் அந்த நண்பர்.

ஒரு மாறுதலுக்கு இப்படி நினைத்துப் பாருங்கள். நாம் ஏன் தீய பழக்கங்களை நம்மிடம் இருந்து விரட்டியடித்து, அவற்றிற்குப் பதிலாகச் சில நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்திக்கொண்டு வாழ முற்படக் கூடாது? ஒன்றே செய்வோம் - ஒன்றும் நன்றே செய்வோம் என்றபடி இன்னே-இப்போதே-இக்கணமே- ஏன் நல்ல சில பழக்கங்களை மேற் கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ முயலக் கூடாது? முயற்சி திருவினை ஆக்கும்! எனவே முயலுங்கள், முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

17
எல்லா நேரமும் நல்ல நேரம்தான்!

சமுதாயத்தில் நான்கு வகையான மனிதர்கள் உண்டு. ஒருசாரார், 'வானமே எல்லை' என எண்ணாமல். தமக்கு 'நேரமே இல்லை' என்று சொல்லிப் பெரிதாக அலட்டிக்கொள்வார்கள். கிட்ட நெருங்கிப் பார்த்தால், 'நேரம் இல்லை!' என்று சொல்வதற்குத்தான் இவர்களுக்கு நிறைய 'நேரம் இருக்கும்!' இன்னொரு சாரார், 'நேரம் போகவில்லை' என்று கூறிச் சும்மாவே இருப்பார்கள் அல்லது தூங்கிக் கழிப்பார்கள்; விழித்திருக்கும் போது வீண் வம்பிலும் அரட்டையிலும் ஈடுபட்டுத் தங்கள் நேரத்தைக் கொல்லுவதில் வல்லவர்கள் இவர்கள். பிறிதொரு சாராருக்கோ நேரம் போதாது. இவர்கள் எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டி ருப்பார்கள்; பம்பரம் போல் சுழன்று கொண்டே இருப்பார்கள்; நல்ல வழிகளில் திட்டமிட்டு நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளத் தெரிந்த வர்கள் இவர்கள். இவர்களது பார்வையில் காலம் பொன் போன்றது மட்டுமன்று; பொன்னினும் மேலானது. சிறியவர் - பெரியவர், ஆடவர் - மகளிர், ஏழை-பணக்காரார், கிராமவாசி- நகரவாசி, தொழிலாளி - முதலாளி என யாராக இருந்தாலும் அனைவருக்கும் ஒருநாள் என்றால் 24 மணி நேரம்தான்! இந்த 24 மணி நேரத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள் கிறார்கள் என்பதைப் பொறுத்தே ஒருவரது வாழ்வில் மாற்றமும் ஏற்றமும் அமையும்.

இந்த மூன்று சாராரிடம் இருந்து வேறுபட்டு, 'எனக்கு இப்பொழுது நேரம் சரியில்லை!' என்று சொல்லித் திரிவோரும் இன்றைய சமுதாயத்தில் உள்ளனர். இவர்கள் தங்கள் கைகளை நம்பாமல், தங்கள் கைகளில் உள்ள ரேகைகளை நம்புபவர்கள்; தங்கள் மனத்திடத்தை நம்பாமல், சோதிடத்தை நம்புபவர்கள்; தங்கள் சுயமதியை நம்பாமல், தலைவிதியை நம்புபவர்கள்.

அமைதியாக எண்ணிப் பார்த்தால் - ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் - ஓர் அடிப்படையான உண்மை விளங்கும். நாம் வேலை செய்வதற்கு என்று நேரத்தை ஒதுக்கி இருக்கிறோம்; எட்டு மணி நேரம் வேலை செய்கிறோம். நாம் தூங்குவதற்கு என்று நேரத்தை வகுத்திருக்கிறோம்; எட்டு மணி நேரம் தூங்குகிறோம். ஆனால் வாழ்வதற்கு என்று ஒரு

நாளில் எத்தனை மணி நேரம் திட்டமிட்டிருக்கிறோம்? இந்தக் கேள்வியைத்தான் இன்றைய புதுக் கவிஞர் ஒருவர் இப்படிக் கேட்டார்.

"எட்டு மணி நேரம்
வேலை செய்ய வேண்டும்
எட்டு மணி நேரம்
தூங்க வேண்டும்
எத்தனை மணி நேரம்
வாழ வேண்டும்"?

ஒரு முறை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் தம் உரையின் ஊடே குறிப்பிட்ட ஓர் இன்றியமையாத நிகழ்ச்சி வருமாறு:

“கடிகாரத்தில் மூன்று முட்கள் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஒன்று மணியைக் காட்டுகின்ற முள், இரண்டு மணித்துளியைக் (நிமிடத்தை) காட்டுகின்ற முள், மூன்று வினாடியைக் காட்டுகின்ற முள். இதில் மணியைக் காட்டுகின்ற முள் இந்தியர்களுக்காக ஓடுவதாக எண்ணிக் கொள்வேன். நிமிடத்தைக் காட்டுகின்ற முள் ஆங்கிலேயர்களுக்காக ஓடுவதாக நினைத்துக்கொள்வேன். ஆனால் அந்த மூன்றாவது முள் யாருக்காக ஓடுகிறது என்பது எனக்கு ரொம்ப நாளாகப் புலப்படாமல் இருந்து வந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஜப்பானியக் கப்பல் ஒன்று சென்னைத் துறைமுகத்திற்கு வந்தது. அந்தக் கப்பலின் கேப்டனைச் சந்திக்க வேண்டும் என்று நேரம் கேட்டிருந்தேன். வாய்ப்பும் கிட்டியது. கேப்டனைச் சந்தித்து ‘ஹலோ’ என்று சொல்லி, கையைக் குலுக்கி, என்னுடைய பெயர், ஊர், விவரம் முதலியவற்றைச் சொல்லி முடிப்பதற்கும் அவர்கள் கொடுத்திருந்த நேரம் முடிவதற்கும் சரியாக இருந்தது. நான் அவசர அவசரமாக அந்த அறையிலிருந்து வெளியே வந்து விட்டேன்! அவர்கள் எனக்குக் கொடுத்திருந்த நேரம் எவ்வளவு தெரியுமா? இருபது வினாடிகள் (இருபது நிமிடங்கள் அல்ல, இருபது வினாடிகள்), அப்பொழுதுதான் எனக்குப் புரிந்தது, அந்த மூன்றாவது முள் ஜப்பானியர்களுக்காக ஓடுகின்றது என்பது...”

நேரத்தைப் பற்றி ஜப்பானியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த ஒரு நிகழ்ச்சியில் இருந்தே நாம் ஊகித்துக்கொள்ளலாம்!

இனி நாம் ஒரு விதி செய்வோம்; அதை எந்த நாளும் காப்போம்! நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவோம்; திட்டமிட்டுப் பணியாற்று வோம். 'எனக்கு இப்போது நேரம் சரி இல்லை' என்ற பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைப்போம். 'எல்லா நேரமும் நல்ல நேரம்தான் - அதன் அருமையை உணர்ந்து பயன்படுத்த வேண்டிய முறையில் பயன்படுத் தினால்' என்ற முடிவுக்கு வருவோம்!

18
நமக்குள் நாமே...!

'நமக்கு நாமே' என்பது தமிழக அரசு அண்மையில் அறிவித்திருக்கும் அருமையான திட்டம். 'நமக்குள் நாமே' என்பது இன்று நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்போகும் அற்புதமான திட்டம்! என்ன விடுகதை போல இருக்கிறதே என்று பார்க்கிறீர்களா? வேறு ஒன்றும் இல்லை. ஒரு மாறுதலுக்காக இப்படிச் சிந்தித்துப் பார்ப்போமா?

நம் உடம்பில் இருந்து - உடல் உறுப்புக்களிடம் இருந்து - நாம் கற்றுக் கொள்ளவேண்டிய அடிப்படையான உண்மைகள்-வாழ்க்கைப் பாடங்கள் - எத்தனையோ உண்டு! முதலில் மூளை. எழுத்தாளர் சுஜாதாவின் சொற்களிலே சொல்ல வேண்டும் என்றால் 'தலைமைச் செயலகம்'. கணினிக்கு இணையான, ஏன் கண்ணபெருமானுக்குச் சமமான அற்புதமான உறுப்பல்லவா அது? 'ராஜாஜி மூளை'யைப் பற்றிச் சிறப்பாகப் பேசப்படுவதை நீங்கள் கேட்டதில்லையா? எனவே மூளையிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது ஆளுமைப் பண்பை.

"இதய வீணை தூங்கும்போது பாட முடியுமா? இரண்டு கண்கள் இரண்டு காட்சி காணமுடியுமா?" 'இருவர் உள்ளம்' திரைப்படத்தில் இடம் பெற்ற பாடல் வரிகள் இவை. இரண்டு கண்கள், ஆனால் அவை பார்ப்பதோ ஒரு பொருளை - காட்சியை. ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் இதைவிடச் சிறந்த ஓர் உதாரணம் வேண்டுமா? மனிதனின் உடல் உறுப்புக்களில் எல்லாம் சிறந்தது கண்கள் என்பார்கள். ஏனெனில் பிற உறுப்புக்களுக்கு ஒரு சிறு துன்பம் ஏற்பட்டாலும் உடனே துடிப்பது, கலங்குவது கண்கள்தான். இப்படிக் கண்களைப் போல் ஒவ்வொரு மனிதனும் இரக்க உணர்வோடு செயல்பட்டால் போதும்! சமுதாயத்தில் எந்தப் பிரச்சினையும் தலைதூக்காது, இது சத்தியம்.

நீண்ட நேரம் பார்த்தால், கண் வலிக்கும். பேசினால், வாய் வலிக்கும். எழுதினால், கை வலிக்கும். நடந்தால், கால் வலிக்கும். ஆனால் எவ்வளவு நேரம் கேட்டுக்கொண்டே இருந்தாலும் காதுக்கு மட்டும் வலிக்கவே செய்யாது. இதுதான் காதுக்கு உள்ள தனிச்சிறப்பு, எனவே எப்போதும் நல்லனவற்றையே காதில் போட்டுக்கொண்டிருப்போம். ஒரு காதில்

வாங்கி இன்னொரு காதின் வழியாக விட்டுவிடாமல் கேட்ட நல்லனவற்றைப் பேணிப் பாதுகாத்து வருவோம்.

பற்களை எடுத்துக் கொள்ளுங்கள், அவற்றிற்கு இருக்கும் போர்க் குணம் ஒரு மனிதனுக்கு இருந்தால் போதும், வாழ்க்கையில் அவன் எப்படியும் முன்னுக்கு வந்துவிடலாம். ஒரு பல் கடைசி வரை போராடும். தனக்கு ஒதுக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்யும். வேறு வழியே இல்லாமல் போகும்போதுதான் விழும். ‘ஆடி அடங்கும்’ இல்லை ‘விழும்’ வாழ்க்கைதான்! என்றாலும் இறுதிவரை என்ன தன்னம்பிக்கை பற்களிடம் பாருங்கள்!

முப்பத்திரண்டு பற்களுக்கு இடையே - அதுவும் வெட்டும் பல், கோரைப் பல், கடைவாய்ப் பல் என்றாற்போல் விதவிதமான பற்களுக்கு இடையே - இயங்கும் நாக்கைப் போன்ற கவனம் ஒரு மனுதனுக்குத் தனது வாழ்வில் வேண்டும். ‘கரணம் தப்பினால் மரணம்’ என்பதுபோல் சிறிது தவறினால்கூட, கடிபட வேண்டிய நெருக்கடி நிலை நாக்கிற்கு! என்றாலும் நாக்கு அதை எவ்வளவு சாதுரியமாகச் சமாளிக்கிறது பாருங்கள்!

ஒருமுறை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் குறிப்பிட்டதுபோல் ‘நான்’ என்று சொல்லும் போது உதடுகள் ஒட்டவே ஒட்டாது. ‘நாம்’ என்று சொல்லும்போதுதான் உதடுகள் ஒட்டும். நாமும் நம் உதடுகளைப் போல் எல்லாவிதமான பேதங்களையும் மறந்து ஒட்டி உறவாடி வாழக் கற்றுக்கொள்வோமா?

கைவிரல்கள் பத்து, கால் விரல்கள் பத்து என மனிதனுக்கு மொத்தம் இருபது விரல்கள். "கையும் காலும்தான் உதவி - கொண்ட கடமைதான் நமக்குப் பதவி" என்பது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வாக்கு. வெறும் விரல்கள் என்பது மூடத்தனம்; பத்து விரல்கள் என்பது என்றும் நமக்கு மூலதனம். கவிக்கோ அப்துல் ரகுமான் பாடியிருப்பது போல் ‘நகமகுடம்’ பெற்ற கடுமையான உழைப்பாளிகள் அல்லவா நம் கை, கால் விரல்கள்?

உடல் உறுப்புக்களிலேயே தன்னலம் இல்லாமல் எந்த நேரமும் தனது தலைவனுக்காக ஒரு தொண்டனைப் போல் பணியாற்றிக் கொண்டிருப்பது இதயம். அந்த இதயம் இருபத்து நான்கு மணி நேரமும் துடிப்பது தனக்காக அல்ல; மனித இயக்கத்திற்காக, கையளவே உள்ள

இதயத்திடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் கடலளவுக்கும் மேலான இந்தப் பொது நல உணர்வே ஆகும்.

சித்தர்கள், யோகிகள், ஞானிகள், உத்தமர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரிடம் இருந்து நாம் இதுவரை கற்றுக்கொண்டதெல்லாம் போதும்! இனிமேல், 'நமக்குள் நாமே' உள்முகமாகப் பார்த்து வாழ்வியல் உண்மைகளைக் கற்றுக்கொள்வோம்! வாழ்வாங்கு வாழ்ந்து 'மாமனித'னாக உயர்ந்து காட்டுவோம்!

19

'நான் மறையக் கற்றவனே ஞானி'

கனகதாசர் புகழ் பெற்ற ஒரு கன்னடக் கவிஞர்; அனுபவ ஞானி. அவர் இறையுணர்விலே தம்மை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டு வாழ்ந்தவர்; இறைவன் புகழ்பாடுவதையே தம் வாழ்நாள் பணியாகக் கொண்டிருந்தவர். அவரது குருநாதர் வியாசராயர் என்பவர். அவர் ஒருமுறை எல்லோரும் கூடியிருக்கிற வேளையில் கனகதாசரைப் பார்த்து, "கனகா, இங்கிருப்பவர்களில் யார் யார் வைகுந்தம் போவார்கள் என்று உன் கடவுளிடம் கேட்டுச் சொல்" என்றார். கனகதாசர் அடுத்த நாள் பதில் தருவதாகக் கூறினார்.

மறுநாள் வியாசராயர் ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி, "இவர் வைகுந்தம் போவாரா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். 'இல்லை' என்றே சொல்லிக்கொண்டு வந்தார் கனகதாசர்.

"நான் போவேனா?" என்றார் குருநாதர். 'இல்லை' என்று பதில் வந்தது கனகதாசரிடம் இருந்து. குருநாதருக்கே திகைப்பு. "நீ போவாயா?" என்று வினவினார். "நான் போனால் போவேன்" என்றார் கனகதாசர்.

இது ஆணவத்தின் உச்சம் என்று கூடியிருந்த அனைவரும் நினைத் தார்கள். கனகதாசர் அமைதியாக அவர்களிடம் இப்படி விளக்கினார்:

''நான் மட்டும் வைகுந்தம் போவேன்' என்ற பொருளில் நான் இப்படிச் சொல்லவில்லை. நான் என்பது போனால் - ஆணவம் அழிந்தால் - எல்லொருமே வைகுந்தம் போகலாம்.''

கனகதாசரின் கருத்தையே பிறிதொரு கவிஞர் வேறு சொற்களில் பின்வருமாறு அழகாகச் சொல்லுவார்:

"நான்மறையைக் கற்றவனா ஞானி - தன்னுள்

நான் மறையக் கற்றவனே ஞானி!"

நம் உள்ளத்தில் இருந்து அறவே துடைத்துத் தூக்கி எறிய வேண்டியது இந்த 'நான்' என்னும் உணர்வைத்தான்; 'எனது' என்னும் எண்ணத்தைத் தான். உள்ளத்தில் தூய்மையான அன்பு இருந்தால் மட்டும் போதும், யாரும் வைகுந்தம் போகலாம், கைலாயம் காணலாம், சொர்க்கம்

செல்லலாம். ஆன்மிகத் துறையில் இதை ஒரு கதை வடிவில் எளிமையாக விளக்குவார்கள்.

ஒரு முனிவர் தம் சீடர்களைப் பார்த்து "வைகுந்தம் எங்கே இருக்கிறது? கைலாயம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டாராம். உடனே சீடர்கள் கணக்குப்போட்டுப் பார்க்கத் தொடங்கினார்களாம். முடிவில், "வைகுண்டம் சூரிய மண்டலத்திற்கு அப்பால், நட்சத்திர மண்டலத்திற்கு அப்பால் இருக்கிறது. கைலாயமோ எதிர்த்திசையில் அதே தூரத்தில் இருக்கிறது" என்று சொன்னார்களாம்.

சீடர்களின் இந்தப் பதிலைக் கேட்டு முனிவர் சிரித்தாராம்.

"நீங்கள் சொல்லுவது தவறு. வைகுண்டம் கூப்பிடு தூரத்தில் உள்ளது. கைலாயமோ கைக்கெட்டிய தூரத்தில் உள்ளது" என்று சொன்னாராம் முனிவர்.

"எப்படி?" என்று சீடர்கள் கேட்டார்களாம்.

"கஜேந்திரன் என்ற யானை, முதலை தன் காலைப் பற்றிக்கொண்டதும் 'ஆதிமூலமே' என்று விஷ்ணுவை நினைத்துக் கூப்பிட்டது. உடனே விஷ்ணு ஓடிவந்து காப்பாற்றினார். அதனால் வைகுண்டம் கூப்பிடு தூரத்தில் உள்ளது என்று தெரிகிறது. அதே போல், பாசக் கயிறு கொண்டு பற்றி இழுத்தும் யமனால் மார்க்கண்டேயனை ஒன்றும் செய்ய முடிய வில்லை. கைக்கெட்டிய தூரத்தில் இருந்த சிவலிங்கத்தைக் கட்டித்தழுவிக் கொண்டான் மார்க்கண்டேயன். கைலாயத்தில் இருந்த சிவபெருமான் ஓடிவந்து அவனுக்கு அருள் புரிந்தார். எனவே கைலாயம் கைக்கெட்டிய தூரத்தில் உள்ளது என்று தெரிகிறது" என்று விளக்கினார் முனிவர்.

நம் மனங்களில் இருந்து 'நான்' என்னும் ஆணவத்திற்கு விடை கொடுப்போம்; 'நாம்' என்னும் கூட்டுணர்வோடு வாழ முற்படுவோம். வைகுந்தத்தை - கைலாயத்தை - சொர்க்கத்தை இந்த மண்ணுலகத் திலேயே கண்டு களிப்போம்!

௨௦

இப்படியும் ஓர் அரசியல் தலைவர்!

அந்த அரசியல் கட்சித் தலைவர் தம் ஆடைகள் அடங்கிய சிறு துணிப்பையுடன் - கூடவே ஒரு சிறு துணி மூட்டையுடன் - சென்னையை நோக்கிச் செல்லும் ரயிலில் அமர்ந்திருக்கிறார். ரயில் சென்னை வந்து சேருகிறது. இறங்கி நடக்கத் தொடங்குகிறார்.

சாலை ஓரமாக நடந்து செல்லும்போது, எதிர்ப்படுகிற ஒருவர் வியப்புடன் பார்த்து வணக்கம் சொல்கிறார்.

"என்னங்க ஐயா, இந்த நேரத்தில....?"

"வெளியூரில் ஒரு கட்சிக் கூட்டம் போயிட்டு இப்பத்தான் வர்றேன்..."

"கட்சி ஆபீஸ் ரொம்பத் தொலைவாச்சே? ஏன் நடந்து போறீங்க?"

சங்கடத்துடன் நெளிந்தவாறே, "இல்ல... பஸ்சுக்குக் கையில காசு இல்ல... அதான்!" என்கிறார்.

"இது என்னது மூட்டை முடிச்சு?"

"இது தொண்டர்கள் கட்சிக்காகக் கொடுத்த நிதி! ரூபாய் நோட்டுக்களோடு சில்லறைக் காசுகளும் நிறைய இருந்துச்சு. அதான் மூட்டையாகக் கட்டி வச்சிருக்கேன்!"

"அட, கையில காசு இருந்துமா நடந்து போறீங்க?"

"ஐயோ, இது கட்சிக்காகத் தொண்டர்கள் கொடுத்த நிதி! இதை என் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்தறதாவது" என்று கூறியவாறே நடக்கிறார் அந்தத் தலைவர்.

இது சினிமாவில் வரும் கற்பனைக் காட்சியல்ல; தமிழ்நாட்டில் அறுபதுகளில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி. அந்தத் தலைவர் வேறு யாரும் அல்ல. தம் வாழ்நாளில் பாதியை ரயிலிலும் மீதியை ஜெயிலிலும் கழித்த பொதுவுடைமைக் கட்சியின் தமிழகத் தலைவர் ப.ஜீவானந்தம் தான்! 'ஜீவா' என்றால் எல்லோருக்கும் எளிதில் விளங்கும். அவர்தான் அந்த அதிசயத் தலைவர்!

இன்று அரசியலில் இலட்சியமும் கொள்கையும் கேட்பார் இல்லாமல் - கவனிப்பார் இல்லாமல் - எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி நின்று

கொண்டிருக்கின்றன; இலட்சமும் கோடியும் தண்ணீர் பட்ட பாடு பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசியல் தலைவர்களோ கையில் 'சூட்கேசு'டன் 'எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை' என்று அறைகூவி, எல்லாக் கட்சியினரையும் தம் கட்சியில் சேர வருமாறு 'விலைபேசி' அழைத்த வண்ணம் இருக்கிறார்கள்.

கிரிக்கெட் விளையாட்டிலோ இன்று நாட்டுக்காக ஆடாமல், 'நோட்டுக்காக' ஆடும் போக்கு தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. வெற்றியும் தோல்வியும், ஆட்டமும் ஓட்டமும் முன்கூட்டியே ஒரு சிலரால் முடிவு செய்யப்பட்டு விடுகின்றன. இப்படிப்பட்ட காலகட்டத்தில் வாழ்ந்து வரும் இன்றைய தலைமுறையினருக்கு ஜீவாவைப் போன்ற ஓர் அரசியல் கட்சித் தலைவர் நம்மிடையே வாழ்ந்தார், அவர் இப்படி எல்லாம் நேர்மையாக நடந்து கொண்டார் என்று நம்புவதே அரிதினும் அரிதாகத்தான் இருக்கும். இன்றைய சூழ்நிலையில் யாரும் நம்புவதற்கரிய - ஆனால் ஜீவாவின் வாழ்வில் நடந்த - பிறிதோர் உண்மை நிகழ்ச்சி வருமாறு:

அப்போது தமிழக முதல்வராக விளங்கியவர் கர்மவீரர் காமராசர். அவர் தாம்பரம் பகுதியில் ஒரு பள்ளிக்கூட விழாவில் கலந்து கொள்வதற்காகச் செல்கிறார். குடிசைகள் நிறைந்த ஒரு பகுதியில் முதல்வரின் கார் நுழைகிறது. அங்கே ஒரு குடிசையில்தான் ஜீவா வாழ்ந்து வந்தார். காமராசரைப் பார்த்ததும் வெற்றுடம்பும் வெறுமனே இடுப்பில் கட்டிய துண்டுமாக எழுந்து நின்று வரவேற்றார் ஜீவா.

"இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்தக் குடிசையிலே வாழப்போறீங்க?" எனக் கேட்கிறார் காமராசர்.

"மக்கள் எல்லாம் மாடி வீட்டுக்கு மாறும்போது நானும் அவர்களோடு சேர்ந்து மாறிவிடுவேன்" எனப் பதில் அளிக்கிறார் ஜீவா.

"என்ன ஜீவா, நீங்க இருக்கிற பகுதியிலே பள்ளிக்கூடம் திறக்கப் போறோம். நீங்க வராமலா?" என்று கேட்கிறார் முதல்வர்.

"கட்டாயம் வருகிறேன். நீங்கள் முன்னால் செல்லுங்கள். இதோ, வந்துவிடுகிறேன்" என்று சொல்கிறார் ஜீவா.அதை மறுத்து உடன் வந்தால்தான் ஆயிற்று என்று கட்டாயப்படுத்துகிறார் முதல்வர்.

"இல்லை, என் சட்டையும் வேட்டியும் கொடியில் காய்கின்றன. காய்ந்ததும் போட்டுக்கொண்டு வருகிறேன். அதற்குள் காலதாமதமாகி விடும். நீங்கள் முன்னால் செல்லுங்கள்" என்ற ஜீவாவின் பதிலைக் கேட்டு காமராசரும் உடன் வந்தவர்களும் அதிர்ந்து போகிறார்கள்.

ஆம், இப்படி ஓர் அரசியல் கட்சித் தலைவர் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நம்மிடையே வாழ்ந்தது உண்மைதான்.

இன்றைய அரசியலைத் தூய்மைப்படுத்த, நேர்மையோடும் வாய்மையோடும் வாழ்வது எப்படி என்று நம் அரசியல் தலைவர்களுக்குக் கற்பிக்க 'ஜீவா- மீண்டும் நீ வா!' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

௨1

தாய் தந்தையர் போதித்த நீதிகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாடகத்திற்குப் புத்தொளி பாய்ச்சியவர் -தமிழ் நாடக மறுமலர்ச்சியில் தம்மை முழுமையும் ஈடுபடுத்திக் கொண்டவர்-பம்மல் சம்பந்த முதலியார். அவர் தமிழ் நாடகத் துறையை மேலை நாடகப் போக்கில் வடிவமைத்தவர்; 90 நாடகங்களுக்கு மேல் எழுதியவர்; நாடக ஆசிரியராக மட்டுமின்றி, நாடக நடிகராகவும் விளங்கியவர்; 'சுகுண விலாச சபை' என்ற நாடகக் குழுவை 1891ஆம் ஆண்டில் நிறுவி, தமிழ் நாடக இயக்கத்திற்குப் பெருமையைத் தேடித் தந்தவர். தமிழ் கூறு நல்லுலகால் 'நாடகத் தந்தை' என்றும், 'நாடகப் பேராசிரியர்' என்றும் புகழப்பெற்றவர். 'என் சுய சரிதை' என்ற பெயரில் சம்பந்தனார், தம் வாழ்க்கை வரலாற்றைப் பொய்யோ புனைந்துரையோ இன்றி இயல்பான நடையில் எழுதியுள்ளார்.

ஒரு நல்ல சுயசரிதை எப்படி எழுதப்பட வேண்டும்? எப்படி எழுதினால் மற்றவர்களுக்கு - முக்கியமாக இளைஞர்களுக்குப் பயன்படும்? தம் சுயசரிதையிலே இவ்வினாக்களுக்கு உரிய விடைகளைக் கூறுகிறார் சம்பந்தனார்.

"தன் சுயசரிதையை எழுதும் ஒருவன் தான் பிறந்தது வளர்ந்தது படித்தது, பெரியவனானது கலியாணம் செய்து கொண்டது, உத்தியோகம் செய்து பொருள் சேர்த்தது இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி மாத்திரம் எழுதிக்கொண்டு போவானானால், அச்சரித்திரம் யாருக்கு என்ன பயனைத் தரும்? மேற்சொன்ன அவனது ஆயுள் பற்றி எழுதும் விஷயங்களோடு ஒவ்வொரு நிலையிலும் தான் இன்னின்ன நல்ல வழக்கங்களைக் கடைப்பிடித்து நடந்ததினால் தனக்கு உண்டான நன்மைகளைப் பற்றியும், தான் அப்போதைக்கப்போது ஏதாவது கெட்ட பழக்கங்களையுடையவனாயிருந்ததால் அவைகளின் பயனாகத் தான் அனுபவித்த கஷ்டங்களையும், நிஷ்டூரங்களையும் ஒன்றும் ஒளியாது எழுதிக்கொண்டு வருவானானால், அவன் சரித்திரமானது மற்றவர் களுக்கு - முக்கியமாக இளைஞர்களுக்கு உபயோகப்படும் என்பது திண்ணம். அப்படிச் செய்யும் ஒவ்வொருவனும் தனக்கென்று மாத்திரம் வாழாமல் பிறர்களுக்கும் வாழ்ந்தவனாகிறான்." இக்கருத்திற்கு ஏற்பத் தம்

சுயசரிதையில் தமது நன்னடக்கையால் அனுபவித்த நன்மைகளையும், கெட்ட நடத்தையால் அனுபவித்த கஷ்டங்களையும் ஆங்காங்கு ஒளிவுமறைவு இல்லாமல் கூறிச்சென்றுள்ளார் சம்பந்தனார்.

சுயசரிதையின் முடிவில் 'என் தாய் தந்தையர்கள் போதித்த நீதிகள்' என்ற தலைப்பில் சம்பந்தனார் எழுதியுள்ளவை வருமாறு:

1. "'கண்ணே பயப்படாதே' - இந்த இரண்டு பதங்கள்தான் என் தாயார் எனக்குக் கூறிய கடைசி வார்த்தைகள். அவைகளுக்கு நான் செய்யும் வியாக்கியானம் என்னவென்றால், 'என்ன இடுக்கண் நேர்ந்த போதிலும் தைரியத்தைக் கைவிடாதே; தெய்வத்தை நம்பியிரு' என்பதாம்.
2. எல்லோரையும் சந்தோஷிப்பித்து நீயும் சந்தோஷமாயிரு.
3. உண்மையே எப்பொழுதும் பேசு, அப்படிப் பேசுவதனால் யாருக்காவது மனவருத்தம் உண்டாகும் என்று தோன்றினால் மௌனமாயிருந்து விடு.
4. கடுகடுத்துப் பேசாதே. இனிமையாய்ப் பேசு.
5. உனக்கு யாராவது கெடுதி செய்தால் அதைப் பொறுத்துக்கொள். அவர்களுக்கு நீ நன்மை செய்யும்படி முயல்.
6. கோபத்திற்கு இடம் கொடாதே. கோபம் வந்தால் முற்றிலும் அடக்கிவிடு.
7. எந்நேரமும் நகைமுகத்துடன் இரு.
8. செல்வம் வந்தால் செருக்கடையாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சியடையாதே.
9. மனதினால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. வாக்கினால் தீமை பேசாதே. செய்கையால் தீங்கு இழைக்காதே.
10. பேராசைப்படாதே. கிடைத்தது போதும் என்று சந்தோஷத்துடன் இரு.
11. வரும்படிக்கு மேல் செலவு செய்யாதே. உன்னால் இயன்ற அளவு தர்மம் செய். ஆடம்பரத்திற்காக ஒன்றும் செய்யாதே.
12. இன்றைக்கு செய்ய வேண்டிய ஒரு வேலையை இன்றைக்கே செய்து முடி.
13. புண்ணியம் செய், பாவம் செய்யாதே.
14. உன் காலம் வந்தபோது பயமின்றி உன்னைப் படைத்தவர்கள் பாதம் போய்ச் சேர்".

மண்ணில் நல்ல வண்ணம் வாழ விரும்புவோர்-குறிப்பாக, இளைய தலைமுறையினர் - தங்கள் மனத்தில் கல்வெட்டாய்ப் பொறித்து வைத்துக் கொண்டு வாழ்வில் எப்போதும் பின்பற்ற வேண்டிய பொன்மொழிகள் இவை!

௨௨

வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்து உழையுங்கள்!

தமிழ் முதுகலை வகுப்பில் சேர்ந்த ஒரு மாணவரைப் பார்த்துக் கேட்டேன்; "நீங்கள் ஏன் தமிழ் முதுகலை வகுப்பில் சேர்ந்தீர்கள்?"

அவர் சொன்ன விடை: "வீட்டில் சும்மா இருக்கறதுக்குப் பதிலா இங்கே வந்து எம்.ஏ. சேர்ந்திருக்கிறேன் ஐயா!"

இந்த விடையைக் கேட்டு மொத்த வகுப்பே 'கொல்'லென்று சிரித்தது.

அண்மையில் இன்னொரு மாணவரை வழியில் சந்தித்தேன்; அவர் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை வகுப்புப் பயின்று முடித்தவர். அவரிடம் கேட்டேன்: "என்ன ஐயா செய்கிறீர்கள்?"

அவர் சொன்ன விடை: "படிச்சு முடிச்சுட்டு வீட்டில சும்மா இருக்கேன் ஐயா!"

இந்த விடையைக் கேட்டு நான் அசந்து போனேன்!

ஒரு மாணவர் வீட்டில் சும்மா இருப்பதால் படிக்க வந்ததாகச் சொன்னார்; இன்னொரு மாணவர் படித்து முடித்துவிட்டு வீட்டில் சும்மா இருப்பதாகச் சொன்னார்;

இன்றைய இளைய தலைமுறையினரின் எண்ணப் போக்கு என்னைச் சிந்திக்க வைத்தது. நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயர்களை மட்டும் நாட்டை விட்டு விரட்டி அடித்தது போதாது; நம்முடன் எப்போதும் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் இந்தச் 'சும்மா' என்ற சொல்லையும் ஓட ஓட விரட்டி அடித்தாக வேண்டும். அப்போதுதான் நாம் உருப்படுவோம்; உருப்படியாகச் செயலாற்ற முற்படுவோம்.

டால்ஸ்டாயிடம் ஓர் இளைஞன் வந்து, "ஐயா, என்னிடம் ஒரு காசு கூட இல்லை" என்று சொல்லி யாசகம் கேட்டான்.

"உண்மையாகவா?" என்று அவனிடம் கேட்டார் டால்ஸ்டாய்.

"ஆமாம்" என்றான் இளைஞன்.

டால்ஸ்டாய் அவனைப் பார்தது, "உன் கண்களை 20,000 ரூபாய்க்குத் தருவாயா?" என்று கேட்டார்.

"மாட்டேன்" என்றான் அவன்.

"சரி, உன் கைகளையாவது 10,000 ரூபாய்க்குத் தாயேன்!" என்றார் டால்ஸ்டாய். அதற்கும் அவன் இசையவில்லை.

"என் நண்பர் ஒருவர், மனிதனின் உடலைக் கொண்டு மருந்துப் பொருள்களைத் தயாரிக்கிறார். உனது உடலுக்கு அவர் நிச்சயமாக ஒரு லட்சம் ரூபாய் தருவார். உனக்கு இல்லாவிட்டாலும் உன் குடும்பத்திற் காவது இந்தப் பணம் கிடைக்கும்" என்று விடாமல் கேட்டார் டால்ஸ்டாய்.

அதற்கு அவன் மறுத்தான்.

"உன்னிடம் பல லட்சம் பெறுமானம் உள்ள உடல் இருக்கிறது. அதைத் தர மனம் இல்லாமல் மறுத்துவிட்டு, என்னிடம் பணம் இல்லை என்கிறாயே? கண்கள், கைகள், கால்கள் இவை என்றும் குறையாத பொக்கிஷங்கள். இவற்றைக் கொண்டு உழைத்து வா. தங்கம், வெள்ளி மட்டும் இல்லை. சூரியனும் சந்திரனும் கூட உன்னுடையதாகிவிடும்" என்று நெஞ்சில் பதியும் வண்ணம் அறிவுரை கூறி அவனை அனுப்பி வைத்தார் டால்ஸ்டாய்.

இளைய தலைமுறையே! நீ இளைத்த தலைமுறையாக இருக்கக் கூடாது; நாளும் உழைக்கும் தலைமுறையாக உருவாக வேண்டும். இதோ உனக்காகவே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு திரைப்படப் பாடலில் இப்படிப் பாடியிருக்கிறார். முதலில் காது கொடுத்துக்கேள்; பிறகு மனம் வைத்து அதன்படி வாழ முற்படு:

"இந்த மாநிலத்தைப் பாராய் மகனே - உந்தன்

வாழ்க்கைதனை உணர்வாய் மகனே!

இளமனதில் வலிமைதனை ஏற்றடா - முக

வாட்டமதை உழைப்பால் மாற்றடா!"

23
கண்ணதாசனின் கீதோபதேசம்!

"ஆம்! ஒரு சினிமாப் பாட்டு என் திசையை மாற்றியது; என் எதிர்காலத்தை நிர்ணயித்தது. நான் தொடர்ந்து போராடுவதற்கான தெம்பையும் தெளிவையும் என்னுள் தோற்றுவித்து. சோர்ந்து போன என் சுவாசப் பையில் பிராண வாயுவை நிரப்பி, எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து என்னைப் புதுமனிதன் ஆக்கியது!"

-திரையுலகில் மூன்று தலைமுறை கண்ட கவிஞர் வாலி 'நானும் எனது நூற்றாண்டும்' என்ற தலைப்பில் எழுதிய அனுபவத் தொடரில் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் இது. இங்ஙனம் கவிஞர் வாலி வானளாவப் பாராட்டி மகிழும்-மனம் மிகவும் நெகிழும் - சினிமாப் பாட்டு எது என்று கேட்கிறீர்களா?

கவிஞர் கண்ணதாசன் எழுதி, பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடி, 'சுமைதாங்கி' படத்தில் இடம் பெற்று, திரைப்பாடல் வரலாற்றிலேயே தனி முத்திரை பதித்த 'மயக்கமா? கலக்கமா? மனதிலே குழப்பமா?' என்ற புகழ் பெற்ற பாடல்தான் அது!

எந்தத் துறையிலும் முட்டி மோதி முயன்று பார்த்து, முன்னுக்கு வர முடியாமல் மனம் சோர்ந்து விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டி ருக்கும் எவரும் அந்தப் பாடலை ஒரு மந்திரம் போல் மனப்பாடம் செய்யலாம்; வாழ்வில் பின்பற்றி அமைதியும் நிம்மதியும் பெறலாம். அவ்வளவு அருமையான-ஆழமான-அனுபவப் பொருள் பொதிந்த - அதே நேரத்தில் மிக எளிமையான பாடல் அது.

முழுப்பாடலும் இதோ:

"பல்லவி

மயக்கமா? கலக்கமா?

மனதிலே குழப்பமா?

வாழ்க்கையில் நடுக்கமா?

முதல் சரணம்

வாழ்க்கையென்றால் ஆயிரமிருக்கும்;

வாசல்தோறும் வேதனையிருக்கும்;
வந்த துன்பம் எதுவென்றாலும்,
வாடி நின்றால் ஓடுவதில்லை;
எதையும் தாங்கும் இதயமிருந்தால்-
இறுதி வரைக்கும் அமைதியிருக்கும்!

இரண்டாவது சரணம்

ஏழை மனதை மாளிகை யாக்கு;
இரவும் பகலும் காவியம் பாடு;
நாளைப் பொழுதை இறைவனுக் களித்து.
நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடு;
உனக்கும் கீழே உள்ளவர் கோடி-
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு."

கண்ணதாசன் எழுதிய இந்த அற்புதமான பாடலைப் பொருள் உணர்ந்து, வரி வரியாக உங்கள் மனத்திற்குள் சொல்லிப் பாருங்கள். வாழ்க்கையின் உண்மை படிப்படியாக உங்களுக்குப் புலனாகும்.

வாழ்க்கை என்றால் மயக்கமும் கலக்கமும், மனதிலே குழப்பமும், நடுக்கமும் இருக்கத்தான் செய்யும்; இவை மட்டுமல்ல, இவை போல் இன்னும் ஆயிரம் இருக்கும். நீங்கள் அடியெடுத்து வைக்கும் வாசல் தோறும் உங்களை வரவேற்க வேதனை தயாராகக் காத்திருக்கும். அப்படியானால், இவற்றிற்கு ஒரு முடிவே இல்லையா? முற்றுப்புள்ளி வைக்கவே முடியாதா? வந்த துன்பம் எதுவென்றாலும், வாடி நின்றால் மட்டும் ஓடி விடாது; எதையும் தாங்கும் இதயம் இருந்தால் இறுதி வரைக்கும் மனத்தில் அமைதி இருக்கும். இதுதான் வாழ்க்கையில் துன்பங்களை - வேதனைகளை- வெற்றி கொள்வதற்கான வழி ஆகும்.

சரி, வறுமையில் வாடி, வதங்கி நிற்கும் ஏழை மனத்தை, எதையும் தாங்கும் இதயமாக மாற்றுவது எப்படி என்று கேட்கிறீர்களா? ஏழை மனத்தை மாளிகை ஆக்குங்கள்; இரவும் பகலும் காவியம் பாடுங்கள்; நாளைய பொழுதை இறைவனுக்கு அளியுங்கள்; நடக்கும் வாழ்வில் அமைதியைத் தேடுங்கள். எங்கிருந்து, எப்படி ஐயா அமைதி கிடைக்கும்

என்கிறீர்களா? நண்பரே, நீங்கள் காலுக்குச் செருப்பு இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்; ஆனால் உலகத்தில் பல பேர் கால்களே இல்லாமல் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்; கவலையே இல்லாமல் - தங்களுக்குக் கால்கள் இல்லை என்று எண்ணமும் இல்லாமல் - நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, உங்களுக்கு கால்களைப் படைத்த இறைவனுக்கு நன்றி சொல்லி, நம்பிக்கையோடு உங்களின் ஒவ்வொரு காலடியையும் எடுத்து வையுங்கள்!

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"

கவிஞர் கண்ணதாசனின் இந்தக் கீதோபதேசத்தைப் பின்பற்றி வாழ்ந்து பாருங்கள்! அமைதியும் நிம்மதியும் உங்கள் வாழ்வில் என்றென்றும் கொலுவீற்றிருக்கும்!

24
சிரிக்க வாரீர் செகத்தீரே!

இன்று உலகம் எங்கிலும் நகைச்சுவைக்கு நல்ல மதிப்பு; வரவேற்பு; மிகுந்த மரியாதை; செல்வாக்கு. 'நகைச்சுவை மன்றம்', 'மகிழ்ச்சி மன்றம், 'சிரி சிரி மன்றம்', 'Humour Club' என்று நகைச்சுவைக்காக மன்றங்கள் நடத்துகிறார்கள். பேச்சுலகிலும் நகைச்சுவை உணர்வுடன் பேசுகின்ற வர்கள் 'நகைச்சுவைத் தென்றல்', 'நகைச்சுவை நாவலர்', 'நகைச்சுவை நாயகர்' என்றாற்போல் சிறப்புப் பெயர்களால் சுட்டப்பெறுகிறார்கள். பத்திரிகைகள் பலவும் 'நகைச்சுவைச் சிறப்பித'ழை அவ்வப்போது வெளியிட்டு நகைச்சுவைக்குப் பெருமை சேர்க்கின்றன; தொலைக்காட்சிகளும், வானொலிகளும் போட்டிபோட்டுக்கொண்டு நகைச்சுவை அரங்கம், நகைச்சுவை நேரம் என்றாற்போல் நகைச்சுவைக்காகத் தனி நிகழ்ச்சி களையே நடத்துகின்றன. திரைப்படங்களும் கூட இன்று நகைச்சுவை இல்லாமல் வெற்றிபெற முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. இந்த நேரத்தில் நாம் எது நல்ல நகைச்சுவை என்றும், தரமான நகைச்சுவை எப்படி இருக்கும் என்றும் சிந்தித்துப் பார்ப்பது நன்மை பயக்கும்.

'போனால் போகிறது, நகைச்சு வை' என்றாற்போல் அவையோருக்குச் சொல்லப்படுவது நல்ல நகைச்சுவை அன்று. நல்ல நகைச்சுவை என்பது இயல்பாக வெளிப்படும். 'Spontaneous outflow of powerful feelings' என்று வேர்ட்ஸ்வொர்த் கவிதைக்குச் சொன்னது அப்படியே நகைச்சுவைக்கும் பொருந்தும். முல்லாவின் கதைகள் இதற்கு நல்ல உதாரணம். ஓர் எடுத்துக்காட்டு:

ஒரு சமயம் வெளியூரில் இருந்து முல்லாவைப் பார்ப்பதற்காக வந்த ஒரு நண்பர் முல்லாவைப் பார்த்து, "உங்கள் வயது என்ன முல்லா?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா "நாற்பது வயது" என்று பதில் கூறினார்.

அதைக் கேட்ட வெளியூர்க்காரர் மிகுந்த ஆச்சரியம் அடைந்து, "என்ன முல்லா, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் உங்களைக் கடைத் தெருவில் சந்தித்தபோது, உங்கள் வயது நாற்பது என்று கூறினீர்கள். இப்பொழுதும் அதையே சொல்கிறீர்களே?" என்று கேட்டார்.

அதைக் கேட்ட முல்லா, "பார்த்தீர்களா? என்னுடைய சிறப்பே அதுதான். நான் சொன்ன சொல் தவறாதவன். இன்றைக்கு ஒரு பேச்சு, நாளைக்கு ஒரு பேச்சு என்பது என்னிடம் இல்லை. எப்பொழுதும் ஒரே பேச்சுத்தான்" என்று பெருமையோடு சொல்லிக்கொண்டார்.

நல்ல நகைச்சுவை என்பது இப்படி இயல்பாக வெளிப்படுவதுதான்; திட்டமிட்டு, பேசி வைத்து, ஒத்திகை பார்த்து வருவது அல்ல.

அடுத்து, எது தரமான நகைச்சுவை என்று பார்ப்போம். வெறும் சிரிப்பை மட்டும் வரவழைப்பது தரமான நகைச்சுவை அன்று; சிரிப்புடன் சிந்தனையையும் சேர்த்து வரவழைப்பதுதான் தரமான நகைச்சுவை. சில பேர் நம்மைச் சிரிக்க வைப்பார்கள். ஆனால் அவர்கள் பேசிவிட்டுச் சென்றதும் என்ன பேசினார்கள், நாம் எதற்காகச் சிரித்தோம் என்று நினைத்துப் பார்த்தால் ஒன்றுமே தோன்றாது. 'நாகரிகக் கோமாளி' என்று தம்மை அழைத்துக்கொண்ட கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் நகைச்சுவை என்றென்றும் உயிருடன் வாழ்ந்து வரும் தரமான நகைச்சுவை: நம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் அருமையான நகைச்சுவை.

ஒரு முறை திருக்குறளார் வீ.முனுசாமியும், கலைவாணரும் காரில் போய்க்கொண்டிருந்தார்கள். திடீர் என்று ஒரு ரயில்வே கேட்டருகே டிரைவர் காரை நிறுத்தினார். கலைவாணர், "என்னப்பா ஆச்சு?" என்று கேட்டார். "கேட்டு (Gate) சாத்தியிருக்கிறார்கள் ஐயா" என்று டிரைவர் சொன்னார். உடனே கலைவாணர் திருக்குறளாரைப் பார்த்து, "பொய் சொல்லுகிறான் பார்த்தீர்களா?" என்றார். திருக்குறளார் என்ன என்று கேட்டபோது கலைவாணர் சிரித்துக்கொண்டே இப்படிச் சொன்னார்:

"கேட்டு சாத்தினான் என்று சொல்லுகிறானே, நம்மை கேட்டா சாத்தினான்"?

இப்படிக் கால உணர்வுடன் (Timing) சமயோசிதப் பாங்கும் (Presence of Mind) சமவிகிதத்தில் சேரும்போது அங்கே அற்புதமான நகைச்சுவை பிறக்கும். நிறைவாக எது தரமான நகைச்சுவை என்பதற்கு விடை இதுதான்.

"ஆயிரம் பேர் கூடி இருக்கிற அவையில் நீங்கள் ஒரு நகைச்சுவை சொல்லும்போது அனைவரும் அகமும் முகமும் மலர்ந்து சிரிக்க

வேண்டும்; யாரும் தலையைக் குனிந்துகொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் தயக்கத்துடன் பார்த்துக்கொண்டு சிரிக்கக்கூடாது. தரமான நகைச்சுவையின் இலக்கணம் இதுதான்; இயல்பும் இதுதான்."

தாயுமானவர் 'சேர வாரீர் செகத்தீரே' என்று நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார். தரமும் திறமும் வாய்ந்த நகைச்சுவையாளர்களோ 'சிரிக்க வாரீர் செகத்தீரே!' என்று நம்மை அன்போடு அழைக்கிறார்கள். அவர்களின் அழைப்புக்குச் செவி சாய்ப்போமா?

25

'முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு!'

இன்று பெரும்பாலான மக்கள் மிக எளிதில் தன்னம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள். வாழ்க்கையில் எதிர்ப்படும் சிறுசிறு சோதனைகளும் சிக்கல்களும் கூட அவர்களுக்குப் பெருந்துயரத்தையும் பேரச்சத்தையும் தந்துவிடுகின்றன. அத்தகைய மக்களுக்குச் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று பொன்னான பாடமாக அமையும், அந் நிகழ்ச்சியைப் பற்றி விவேகானந்தர் குறிப்பிட்டிருப்பது வருமாறு:

"ஒரு முறை நான் வாரணாசியில் இருந்தேன். ஒரு பக்கம் பெரிய குளமும் மறுபக்கம் நீண்டு நெடிது உயர்ந்த சுவரும் இருந்த தெரு ஒன்றின் வழியாக நான் நடந்து சென்று கொண்டிருந்தேன். அங்கிருந்த திடல் ஒன்றில் ஏராளமான குரங்குகள் இருந்தன. வாரணாசியில் இருக்கும் குரங்குகள் தடித்த விலங்குகளாய் இருந்தன. சில வேளைகளில் அவை முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டன. தாம் வாழும் தெரு வழியாக என்னைச் செல்லவிடக்கூடாது என்று அவை முடிவு செய்து விட்டன போலும்! நான் நடந்து செல்லுகையில் அவை கீச்சுக்கீச்செனக் கூச்சலிட்டும், வீறிட்டு அலறியும், என்னுடைய பாதங்களைப் பிடித்து இழுத்தும் வம்பு செய்தன.

குரங்குகள் என்னை மிக நெருங்கி வரவே, வேறு வழி இல்லாமல் நான் ஓடத் தொடங்கினேன். எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாக நான் ஓடினேனோ, அக்குரங்குகளும் மிக விரைவாக ஓடி வந்து என்னைக் கடிக்கத் தொடங்கின. அவற்றிடம் இருந்து எவ்விதத்திலும் தப்ப முடியாது என்ற அந்தக் கடுமையான சூழ்நிலையில் முன்பின் தெரியாத வழிப்போக்கர் ஒருவர் என்னிடம் உரத்த குரலில் 'முரட்டு விலங்குகளை எதிர்த்து நின்றிடு' என்று கத்தினார்.

நான் உடனே திரும்பி என்னை விரட்டிக் கடித்த அந்தக் குரங்குகளை நேருக்கு நேர் துணிச்சலோடு பார்த்தேன். உடனே அவை பின்வாங்கி, பின்னர் ஓடத் தொடங்கின. அந்நிகழ்ச்சி என் வாழ்க்கையில் ஒரு பாடமாக அமைந்தது.

'இடுக்கண் வருங்கால் அஞ்சாமல் அதனை எதிர்கொள்க! துணிச்சலுடன் அதனை எதிர்த்திடுக' என்பதே அப்பாடம்.

குரங்குகளைப் போன்று வாழ்க்கையில் நம்மை எதிர்நோக்கி வரும் இடர்ப்பாடுகளும், அவற்றைக் கண்டு அஞ்சி ஓடாமல் எதிர்த்து நின்றோமானால், நம்மைவிட்டு விலகி ஓடிவிடும். நாம் சுதந்திரம் பெறுவதாயின், இயற்கையை வெற்றி கொள்வதன் மூலமே பெற வேண்டும்; ஓடி ஒளிவதன் மூலமன்று. நாம் அச்சத்தை எதிர்த்துப் போராட வேண்டும்; துன்பங்களும் அறியாமையும் நம்மை விட்டு நீங்க வேண்டுமாயின், நாம் அவற்றை எதிர்த்து நிற்க வேண்டும்!"

சுவாமி விவேகானந்தர் காட்டிய வழியில், நாம் எதிர்த்து நின்றோம் என்றால் - துணிவோடு போராடினோம் என்றால்-முரட்டு விலங்குகள் மட்டுமல்ல, முரட்டு மனிதர்களும் கூட நம்மை விட்டு விலகி ஓடி விடுவார்கள்.

"பாதகங் செய்பவரைக் கண்டால் - நாம்

பயங் கொள்ள லாகாது பாப்பா,

மோதி மிதித்து விடு பாப்பா - அவர்

முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

என்று 'பாப்பாப் பாட்'டில் பாரதியார் பாடியிருப்பது பெரியவர்களான நமக்காகவும்தான்! இனி, 'துஷ்டனைக் கண்டால் தூரவிலகு' என்ற பழமொழியை இப்படி மாற்றிப் புதுமொழியாகச் சொல்லுவோம்:

"துஷ்டனைக் கண்டால் தூர விரட்டு!"

26
மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு உரிய ஏழு வழிமுறைகள்

அண்மைக் காலத்தில் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் நீண்ட நாள் உயிர் வாழ்வது எப்படி என்பது பற்றிய ஆய்வுகள் பல்வேறு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன; 100 வயதுக்கு மேல் வாழ்ந்து சாதனை படைக்கும் பெரியவர்களைப் பற்றிய அரிய தகவல்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் சாரத்தைக் குறித்து நாம் சிறிது அலசிப் பார்ப்போமா? 100 வயது வாழ முடியும் என்ற உண்மையை அமெரிக்க ஆய்வு நிறுவனம் ஒன்று தற்போது உறுதிப்படுத்தி உள்ளது. நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்து பவர்கள் கவலையின்றி நீண்ட நாள் உயிர் வாழ்ந்து வருவதையும், 'நம் கையில் எதுவுமே இல்லை; நடப்பது எல்லாம் தலையெழுத்தின்படியே நடக்கும்' என நம்பிக்கை இல்லாமல், ஒருவித விரக்தி மனப்பான்மை யுடன் வாழ்க்கை நடத்துபவர்களுக்குச் சகல விதமான ஆபத்தான நோய்கள் வருவதுடன், அவர்களது வாழ்நாள் குறைந்துபோவதையும் அந்நிறுவனத்தின் ஆய்வு முடிவுகள் தெளிவுபடுத்தி உள்ளன.

ஓர் அமெரிக்க ஆய்வு நிறுவனம் நான்கு ஆண்டுகள் அரிதின் முயன்று, 839 பேரிடம் வினாப் பட்டியல்கள் தந்து, மொத்தம் 550 கேள்வி கள் கேட்டு அவற்றின் அடிப்படையில் கண்டறிந்த உண்மையைப் பற்பல ஆண்டுகளுக்கு முன்பே மகாகவி பாரதியார் இரண்டே வரிகளில் எவ்வளவு அழுத்தம் திருத்தமாக வெளியிட்டிருக்கிறார் பாருங்கள்:

"கவலைப் படுதலே கரு நரகம்மா!
கவலையற் றிருத்தலே முக்தி"

எனவே, எப்போதும் சென்றதையே சிந்தனை செய்துகொண்டு இராமல், கொன்றழிக்கும் கவலை எனும் குழியில் வீழ்ந்து குமையாமல், 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு தின்று விளையாடி இன்புற்று இருந்து வாழ வேண்டும் என்பதே பாரதியார் தம் மனத்திற்கு மட்டுமன்றி, நம் அனைவருக்கும் செய்யும் உபதேசம் ஆகும்.

இதே போல், அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் ஹாரிசயன் ஹோல்கோம்ப் என்னும் பெரியவர் அண்மையில் 110 வயது வரை வாழ்ந்து சாதனை படைத்தார்; பெஞ்சமின் நீண்ட நாள் உயிர் வாழும் ரகசியம் குறித்து அவரது மகள் கூறியிருப்பது வருமாறு:

"சந்தோஷம், சோகம் எதையும் எனது தந்தை மனத்தில் வைத்துக் கொள்ளமாட்டார்; வெளியில் சொல்லி அழுது விடுவார். இதுதான் அவரது நீண்ட ஆயுளுக்குக் காரணம்."

இதைப் பற்றியும் நம் வள்ளுவர் பெருமான் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சிந்தித்துப் பார்த்துள்ளார். அவரது வாய்மொழி வருமாறு:

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்!"

"மகிழ்ச்சியில் மகிழ்ச்சி அடையாதவன், கவலையில் கவலை அடையான்" என்பது மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் இக்குறளுக்குத் தீட்டியுள்ள தெளிவுரை ஆகும்.

நிறைவாக, நீண்ட நாள் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமானால் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஏழு வழிமுறைகள் இவைதான்:

1. மகிழ்ச்சியாக இருப்பது என்பதில் முதலில் உறுதியாக இருங்கள்.
2. ஆசைகளைக் குறையுங்கள் (ஆசைகளை அறவே ஒழியுங்கள் என்று சொல்லவில்லை, அது முடியவும் முடியாது).
3. தீய எண்ணங்களில் இருந்து விலக்கி, உங்கள் மனத்தைத் தூய்மையாக வைத்திருங்கள்.
4. வாழ்க்கையைப் பற்றிய உங்கள் பார்வை - உங்கள் எண்ணம் - எப்போதும் நேரானதாக (Be Positive) இருக்கட்டும்.
5. இல்லாததைப் பற்றி எண்ணி வருத்தப்படுவதைக் காட்டிலும் இருப்பவைகளைப் பற்றிப் பெருமையாக நினையுங்கள்.
6. உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கடவுள் கூடவே இருப்பதாக நினைத்துச் செயல்படுங்கள்.
7. அடுத்தவர்களுக்கு உதவுங்கள். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால், அது மற்றவர்களை மகிழ்விப்பதன் மூலமே முடியும்.

வாரத்திற்கு ஏழு நாட்கள் என்பது போல், மகிழ்ச்சியான, நீண்ட நாள் வாழ்க்கைக்குத் தாதா வாஸ்வானி கூறியிருக்கும் ஏழு வழிமுறைகள் இவை! இவ்வழிமுறைகளைப் பின்பற்றி நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து காட்டுவது என்ற முடிவுக்கு வந்து விட்டீர்கள் போல் தெரிகிறதே? சரிதானா?

27

உழைப்பால் உயர்ந்தவர் என்று பெயர் எடுங்கள்!

வாழ்க்கையில் எப்போதாவது சோதிடம் பார்ப்பதில் தவறு இல்லை; ஆனால் எதற்கு எடுத்தாலும் சோதிடத்தை நம்பியே செயல்படுவது என்றால், அது சரியில்லை. சோதிடம் ஒரு கலை - ஏன், அறிவியல் என்று கூடச் சொல்லலாம். அதில் இரண்டாவது கருத்து இல்லை. ஆனால் சில பேர் தங்கள் வாழ்க்கையில் சோதிடம் பார்ப்பதையே ஒரு பழக்கமாக - வழக்கமாக - வாடிக்கையாக- வாழ்க்கையாகக் கொண்டு அல்லும் பகலும் இயங்கி வருவதைப் பார்க்கும்போதுதான் கோபம் பீறிட்டு எழுகின்றது; அதுவும் ஒரு சிலர் சோதிடப் பைத்தியமாகவே வாழ்ந்து வருவதைக் காண நேரும்போது, 'இது பொறுப்பதில்லை தம்பி! எரிதழல் கொண்டு வா, கதிரை வைத்து இழந்தான் - அண்ணன் கையை எரித்திடுவோம்' என்று உணர்ச்சியின் உச்சியிலே நின்று சூதில் பாஞ்சாலியைப் பணயப் பொருளாக வைத்து ஆடிய தருமனைப் பற்றி வீமன் கூறியது போல் விமர்சனம் செய்யவே தோன்றுகிறது.

வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றவர்கள் நேரம், காலம், யோகம், ராசி, அதிர்ஷ்டம், தலையெழுத்து ஆகியவற்றிற்கு எப்போதும் முதன்மை தரவே கூடாது. ஒருவர் எந்தவிதமான முயற்சியும் செய்யாமல் அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு தமக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக்கொண்டால் வாழ்க்கையில் முன்னேற முடியுமா? எழுவதைப் பற்றி ஒரு சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல், தலைவிதியை எண்ணி விழுந்தே கிடக்கும் ஒருவர் தம் வாழ்வில் உயர்வைக் காண முடியுமா? காலையில் கண் விழித்து எழுந்ததும் செய்தித்தாளில் ராசி பலன் பார்த்து அதன்படி செயல் திட்டம் வகுக்கின்ற ஒருவர் தம் வாழ்வில் எளிதாகப் போகிற போக்கில் செல்வமும் செல்வாக்கும் தேடிவிட முடியுமா? கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

எழுத்தாளர் கல்கியின் வாழ்வில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி இது:

மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, உடல் நிலை கவலைக்கு இடமாக இருந்தபோது, ஒருநாள் கல்கியைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர், ஜாதகம் பார்க்கும்படி அவரிடம் சொன்னாராம். இதைப் பற்றி மீ.ப.

சோமசுந்தரத்திடம் (சோமுவிடம்) குறிப்பிட்டுவிட்டுப் பிறகு கல்கி சொன்னதுதான் இங்கே மிகமிக முக்கியமானது.

"தம்பி! இந்த ஜாதகம் பார்க்கிற பைத்தியம் மட்டும் எனக்குக் கட்டோடு பிடிக்காது. ஏன் தெரியுமா? காலில் நகம் முளைத்த நாளில் இருந்து நாம் எத்தனையோ கஷ்டப்பட்டு, எத்தனையோ இடத்தில் அடிபட்டு, மிதிபட்டு, குட்டுக்கள் வாங்கி முன்னுக்கு வருகிறோம். என் வரையில் நான் ஒவ்வொரு படி முன்னேறியதும் என்னுடைய சொந்த உழைப்பினால்தான். ஆனால் ஜோசியரிடம் போய்க் கேட்டால் என்ன சொல்லுவார் தெரியுமா? என்னுடைய முன்னேற்றத்துக்குக் காரணம் என்னுடைய திறமை, என்னுடைய உழைப்பு என்று ஒப்புக்கொள்வாரா? மாட்டார். ஏதோ ஒரு செவ்வாய், ஒரு சுக்கிரன், ஒரு சூரியன்தான் காரணம் என்று சொல்லுவார். இதை எப்படிக் கேட்டுக்கொண்டு சகிப்பது? ஒப்புக்கொள்வது என்பதோ முடியவே முடியாத காரியம்!"

கல்கியின் இந்தக் கூற்றை ஒரு முறைக்கு இருமுறை பொருளுணர்ந்து படித்துப் பாருங்கள்! அவரது உள்ளத் திடமும் தெளிவும் உங்களையும் உடும்பு போல் இறுகப் பற்றிக்கொள்ளும்.

'அதிர்ஷ்டத்தால் முன்னுக்கு வந்தவர்' என்ற பெயர் உங்களுக்குத் தேவையில்லை; 'உழைப்பினால் உயர்ந்தவர்' என்ற பெயர் கிடைக்கும்படியாக, உங்கள் வாழ்வின் ஒவ்வோர் அடியையும் எடுத்து வையுங்கள்; வாழ்வில் ஒவ்வொரு படியாக முன்னேறுங்கள். வெற்றி உங்கள் கையில்!

28

வீட்டுக்கு நடுவே சொர்க்கம் உண்டு!

பல்கலைக்கழகத்தில் என்னிடம் படித்த மாணவர்கள் இருவரைச் சில நாட்களுக்கு முன்பு அடுத்தடுத்துச் சந்தித்தேன்; இருவரும் அண்மையில் திருமணம் ஆனவர்கள்; இல்லற வாழ்வில் அடியெடுத்து வைத்துச் சில மாதங்களே ஆனவர்கள். முதல் மாணவர் முகாரி ராகத்தில் இப்படிச் சொன்னார்:

"ஐயா, 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்று கண்ணதாசன் தெரியாமலா பாடி இருக்கிறார்? எனக்கு அப்படி அமையலையே ஐயா! 'Wife is a knife to cut our Life' என்ற பழமொழிக்கு ஒரு நல்ல உதாரணம் சொல்ல வேண்டும் என்றால் என் மனைவியைத் தான் சொல்லலாம் ஐயா!" விரக்தியின் விளிம்பில் - வேதனையின் உச்சியில் - நின்றுகொண்டு இப்படிப் பேசினார் - புலம்பினார் - அவர்.

அடுத்த மாணவரோ உற்சாகமான குரலில் இப்படி அழுத்தம் திருத்தமாகச் சென்னார்:

"இப்பொழுது தான் ஐயா எனக்கு வாழ்க்கை என்றால் என்ன என்று விளங்கியிருக்கிறது. மனைவி என்று ஒருத்தி வந்த பிறகுதான் இல்லறம் என்பது எனக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. 'What is Life without a Wife' என்பது நூற்றுக்கு நூறு சரிதான் ஐயா. 'சாரீரம் இல்லாமல் சங்கீதமா? சம்சாரம் இல்லாமல் சந்தோஷமா?' என்று தெரியாமலா பாடி இருக்கிறார்கள்? என்னைப் பொறுத்த வரையில் இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி ஐயா!"

எனக்கு உடனே திருக்குறள் இல்லறவியலில் 'வாழ்க்கைத் துணை நலம்' அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா நினைவுக்கு வந்தது.

"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்; உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை"

"மனைவி நற்பண்பு உடையவள் ஆனால் வாழ்க்கையில் இல்லாதது என்ன? அவள் நற்பண்பு இல்லாதவள் ஆனால் வாழ்க்கையில் இருப்பது என்ன?" என இக்குறளுக்குத் தெளிவுரை கூறுவார் மு.வரதராசனார்.

இரண்டு உதாரணங்கள் காட்டினால் இக்குறளின் கருத்து நன்றாக விளங்கும். சாக்ரடீஸ், கிரேக்கம் தந்த சீரிய சிந்தனையாளர்; 'நீ உன்னை அறிவாய்' (Know thyself) என்ற உயரிய குறிக்கோள் வாசகத்தை உலகிற்கு வழங்கிய பெருமகனார். ஆனால் அவருக்கு வாய்த்த மனைவி? பெரிய சோகக் கதை அவருடையது. நண்பர்களுடன் உரையாடுவதில் மிகுந்த விருப்பம் கொண்டவர் சாக்ரடீஸ். அதுவும் விவரமாகப் பேசக் கூடிய நண்பர்கள் கிடைத்துவிட்டால் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார். ஒருநாள் வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டு நண்பர் ஒருவருடன் நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டே இருந்தார் சாக்ரடீஸ், அவருடைய மனைவி பலமுறை அழைத்தும் அவர் உள்ளே செல்லவில்லை. மனைவி மாடிக்குச் சென்று அங்கு நின்றுகொண்டு சாக்ரடீஸைப் பற்றி வாய்க்கு வந்தபடி பேசினார். சாக்ரடீஸ் அதையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. உடனே ஆத்திரமும் கோபமும் கொண்ட அவருடைய மனைவி ஒரு வாளித் தண்ணீரை எடுத்து சாக்ரடீஸின் தலையில் அதைக் கொட்டினார். சாக்ரடீஸுடன் பேசிக் கொண்டிருந்த நண்பர் இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். ஆனால் சாக்ரடீஸோ கொஞ்சமும் பதட்டம் அடையாமல், "நீங்கள் ஆச்சரியப்பட இதில் ஒன்றும் இல்லை. சற்று முன்பு இடி இடித்தது; இப்போது மழை பெய்கிறது. அவ்வளவுதான்!" என்றார்.

'உள்ளது என் இல்லவள் மாணாக் கடை' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு இதை விட வேறு உதாரணம் வேண்டுமா என்ன?

சரி, 'இல்லது என் இல்லவள் மாண்பானால்' என்பதற்கும் ஓர் உதாரணம் காண்போமா? காரல் மார்க்ஸ் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த பெருமை மிகு சிந்தனையாளர்; 'மூலதனம்' என்ற உலகப் புகழ் பெற்ற நூலை உருவாக்கித் தந்தவர். அவரது அருமைத் துணைவியார் ஜென்னி அவரை விட நான்கு வயது மூத்தவர். இருவரும் ஒருவரை ஒருவர் மனமாரக் காதலித்து மணம் செய்து கொண்டவர்கள்; எத்தனையோ சோதனைகளையும்; வேதனைகளையும் தடைகளையும் துன்பங்களையும் தாண்டி வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள். 'ஏங்கல்ஸ் இல்லை என்றால், மார்க்ஸின் எழுத்துக்கள் இல்லை; ஜென்னி இல்லை என்றால், மார்க்ஸே இல்லை' என்று கூறும் அளவிற்கு ஜென்னியின் உறவு மார்க்ஸின் வாழ்வில் அமைந்தது. 'காதல் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம்

யாவினும் கை கொடுத்து' என்று பாரதியார் பாடியது போல் எல்லா வகையிலும் மார்க்ஸுக்கு உறுதுணையாக இருந்தவர் ஜென்னி.

சொர்க்கம் என்று சொல்கிறார்களே, அது எங்கே இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்? இதோ, கவிஞர் கண்ணதாசன் ஒரு திரையிசைப் பாடலில் பாடியிருக்கும் அனுபவ மொழிகளை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்:

"தங்கக் கட்டி போலே மனைவியுண்டு;

சிங்கக் குட்டி போலே மழலையுண்டு;

வீட்டுக்கு நடுவே சொர்க்கம் உண்டு!"

29
செல்வத்தைச் சேமித்து வைக்கப் பொருத்தமான இடம் எது?

வாழ்வில் பாடுபட்டுத் தேடிய பணத்தை எங்கே சேமித்து வைப்பது என்று நாம் பல கோணங்களில் இருந்து சிந்தித்துப் பார்க்கிறோம். எங்கே நம் பணத்திற்குப் போதிய பாதுகாப்பு இருக்கும்? எங்கே வட்டி விகிதம் அதிகமாகக் கிடைக்கும்? எங்கே பணத்தைச் சேமித்து வைக்கலாம்? தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலா? வெளிநாட்டு வங்கியிலா? தனியார் நிதி நிறுவனத்திலா? ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலா? அஞ்சலகச் சேமிப்புத் திட்டத்திலா? இப்படிப் பலவாறு ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னரே ஒரு முடிவுக்கு வருகிறோம். இத்தகைய நம் சிந்தனைகளையும் ஆராய்ச்சிகளையும் எல்லாம் விஞ்சும் வண்ணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே வள்ளுவர் பெருமான் செல்வத்தைச் சேமித்து வைக்கும் இடம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பாடுபட்டுத் தேடிய பணத்தை எங்கெங்கோ நிலத்தடியில் புதைத்து வைத்த காலம் அது. எனினும் அத்தகைய ஓர் இடத்தைக் காட்டாமல், செல்வர்கள் தங்கள் செல்வத்தைச் சேமித்து வைக்கப் பொருத்தமான இடம் பசியால் வாடும் ஏழைகளின் வயிறுகளே என வள்ளுவர் கூறியுள்ள கருத்து மிக ஆழ மானதாகும். அக்கருத்தினைத் தன்னகத்தே கொண்ட திருக்குறள் இதோ:

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள் வைப் புழி!"

"வறியவன் கடும்பசியைத் தீர்க்க வேண்டும், அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்" என இத்திருக்குறளுக்குத் தெளிவுரை வரைவார் மு.வரதராசனார்.

பஞ்சாப் மாநிலத்தில் குருநானக்கின் பெயரால் வழங்கிவரும் 'மக்கள் கதை' (ஜனம் சாக்கி) ஒன்று இங்கு நினைவுகூரத்தக்கதாகும். அக்கதை வருமாறு:

ஓர் ஊரில் துனிசந்த் என்ற பெயரில் பெரும் வணிகர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தம் செல்வத்தைக் குறிக்கும் வகையில் வீட்டின் மேல்

கொடிகளைக் கட்டுவார். ஒரு கொடி ஒரு லட்சம் பொன்னைக் குறிக்கும். அவரது வீட்டின் மேல் ஏழு கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

ஒருமுறை குருநானக் அந்த ஊருக்கு வந்தார். துனிசந்தின் வீட்டில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. குருநானக் துனிசந்தை நோக்கி, "வணிகனே, உனது வீட்டின் மேல் ஏழு கொடிகள் பறக்கின்றனவே, அது எதனால்?" என்று கேட்டார். துனிசந்த், "ஐயா, அவை நான் சேர்த்து வைத்துள்ள செல்வத்தைக் குறிக்கின்றன. ஏழு இலட்சம் பொன்னின் அதிபதி என்பதைக் குறிக்கும் வகையில் ஏழு கொடிகள் என் வீட்டின் மேல் பறக்கின்றன" என்று பெருமிதத்தோடு பதில் கூறினார்.

இதனைக் கேட்ட குருநானக், "நண்பா, இந்த ஊசியை எனது ஒப்படைப்பொருளாக நீ வைத்திருப்பாயாக. அடுத்த உலகில் நாம் இருவரும் சந்திக்கும் பொழுது நான் இதனை உன்னிடம் இருந்து திரும்பப்பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறித் துனிசந்திடம் ஓர் ஊசியைத் தந்தார். எதுவும் புரியாத துனிசந்த் அந்த ஊசியை குருநானக்கிடம் இருந்து பெற்றுக்கொண்டார்; வீட்டிற்குள் சென்று மனைவியிடம் அந்த ஊசியைக் கொடுத்து நடந்ததைக் கூறினார். துனிசந்தின் மனைவி, "அன்புள்ள கணவரே! இவ்வுலகில் யாராக இருந்தாலும் இறக்கும் பொழுது தன்னுடன் எதையும் கொண்டு செல்ல முடியாது. ஆதலால் ஊசியைக் குருவிடமே திரும்பக் கொடுத்து விடுங்கள்" என்றாள்.

விவரம் புரிந்த துனிசந்த் குருநானக்கை நோக்கிச் சென்று அவரது காலில் விழுந்தார். "ஐயா, என்னை மன்னித்து விடுங்கள்; மண்ணுலகில் தேடிய செல்வத்தை யாராலும் விண்ணுலகிற்குக் கொண்டு செல்ல முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். செல்வத்தால் அறிவிழந்த எனக்கு அறிவுறுத்துங்கள்" என்றார்.

குருநானக் துனிசந்திடம், "நண்பனே! நீ மண்ணுலகில் ஈட்டிய செல்வத்தை எல்லாம் இறைவனது பெயரால் தருமம் செய்; பசியோடு வாடி இருப்பவர்களுக்கு வயிறு நிறைய உணவு கொடு; உன்னோடு மறு உலகிற்கு வரவேண்டியவை வரும்" என்று கூறினார்.

துனிசந்த் குருநானக்கின் அறிவுரையை ஏற்றுக்கொண்டார்.

"காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே" என்னும் பட்டினத்தாரின் வாக்கு இங்கே ஒப்புநோக்கத்தக்கதாகும்.

நம் செல்வத்தைச் சேமித்து வைப்பதற்குப் பொருத்தமான-பாதுகாப்பான-இடம் எது என்று இப்போது உங்களுக்கு நன்றாக விளங்கி இருக்குமே? எங்கெங்கோ உள்ள கோயில் உண்டியலில் கோடிக்கணக்கான பொருளையும் பொன்னையும் காணிக்கையாகப் போடும் பெருஞ்செல்வர்கள் எல்லாம் தங்கள் கருத்திலும் கவனத்திலும் கொள்ள வேண்டிய அற்புதமான சிந்தனை அல்லவா இது?

30
அதிசயமே அதிசயிக்கும் அதிசயம்!

அண்மையில் தமிழ் கூறு நல்லுலகில் 'அதிசயமே அதிசயிக்கும் அதிசயம்' ஒன்று நிகழ்ந்தது. உண்மையில் இது எட்டாவது அதிசயம்தான். யாருக்கும் எளிதில் எட்டாத அதிசயம்தான். அப்படி என்ன அதிசயமான அதிசயம் என்று கேட்கிறீர்களா?

தமிழ்நாட்டில் ஒரே நாளில் - அதுவும் விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமையில் - ஒரு சில மணி நேரங்களில் ஆயிரம் நூல்கள் விற்பனை ஆவது என்றால் அது சாதாரண காரியமா? கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய அருஞ்சாதனை அல்லவா? இப்போதுதான் "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்னும் பாரதியின் வரிகளை வாய் விட்டு உரக்கப் பாடி மகிழ வேண்டும் போலத் தோன்றுகின்றது!

'பாரத ரத்னா' அ.ப.ஜெ.அப்துல் கலாம் அருண் திவாரியுடன் இணைந்து 'விங்க்ஸ் ஆஃப் ஃபயர்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதியுள்ள அவரது சுயசரிதை, 'இந்தியா 2020-எ விஷன் ஃபார் நியூ மில்லினியம்' என்னும் கலாமின் பிறிதொரு ஆங்கில நூல், மு.சிவலிங்கம் மொழிபெயர்த்துள்ள அப்துல் கலாமின் சுயசரிதையின் தமிழ் வடிவமான 'அக்னிச் சிறகுகள்' என்னும் மூன்று நூல்களும்தான் தமிழ் நாட்டில் இத்துணைப் பரபரப்பாக விற்பனை ஆனவை.

இத்தனைக்கும் அப்துல் கலாம் ஒரு நடிகரும் அல்ல; கிரிக்கெட் வீரரும் அல்ல; தகவல் தொடர்பு சாதனங்களில் அடிக்கடி தலைகாட்டும் அரசியல்வாதியும் அல்ல. ஆனாலும் நம் நாட்டின் புகழை - பெருமையை - தமது அறிவியல் தொழில்நுட்பத் திறத்தால் உச்சிக்குக் கொண்டுபோய் நிறுத்தி இருக்கும் அணு சக்தி விஞ்ஞானி அப்துல் கலாம். தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் தீவில் ஒரு நடுத்தரத் தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர் அவர். அவரது தந்தையார் ஜைனுல்லாபுதீன் பெரிய பணக்காரர் அல்ல;. மெத்தப் படித்தவரும் அல்ல, காண்பவரைக் கவர்ந்திழுக்கும் அழகிய தோற்றம் கொண்டவர் என்றும் கலாமைச் சொல்ல முடியாது. இருப்பினும் அப்துல் கலாமைக் காணும்போது ஒரு மகிழ்ச்சி - அவரது 'அக்னிச்

சிறகு'களைப் படிக்கும்போது ஒரு நெகிழ்ச்சி -யாருடைய மனத்திலும் தோன்றவே செய்யும்.

இன்றைய சூழலில் வாழ்வில் முன்னேறத் துடிக்கும் ஒவ்வோர் இந்தியரும் - குறிப்பாக இளைய தலைமுறையினர் எல்லோரும் - படிக்க வேண்டிய ஒரு புத்தகம் உண்டு என்றால், அது நிச்சயமாக அப்துல் கலாமின் சுயசரிதமான 'அக்னிச் சிறகுகள்'தான். அது அவரது கதை மட்டுமல்ல, இந்திய அறிவியலின் மேன்மைக் கதை; சோதனைகளைச் சாதனைகள் ஆக்கிக் காட்டிய ஒரு மனிதரின் உண்மைக் கதை; ஒளி படைத்த கண்ணுக்கும், உறுதிகொண்ட நெஞ்சுக்கும், ஓயாத உழைப்புக்கும் சொந்தக்காரரான ஒருவரின் கதை; அணுசக்தித் துறையில் தாயகம் சாதித்துக் காட்டிய தன்னிறைவின் கதை; தீர்க்க தரிசனத்தின் கதை; ஒரு கடலோரப் படகுக்காரரின் மகன் கடலளவு விரிந்து, இமயமாய் உயர்ந்த கதை; ஒரு கவிஞன், விஞ்ஞானி ஆன கதை.

'உலகை மாற்றிய புத்தகங்கள்' என்று ஒரு சில புத்தகங்களை அறிஞர்கள் சுட்டிக்காட்டுவார்கள். அதுபோல் தமிழில் படிப்பவரது உள்ளத்தை மாற்றும் - இல்லை, உலுக்கும் - ஐந்து சிறந்த புத்தகங்களின் பெயர்களைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றால், அந்தப் பட்டியலில் இடம் பெறும் அனைத்துத் தகுதிகளும் அப்துல் கலாமின் 'அக்னிச் சிறகு' களுக்கு உறுதியாக உண்டு. இதோ, 'அக்னிச் சிறகுக'ளின் அறிமுகப் பகுதியில் கலாம் நம்மிடம் மனம் திறந்து பேசுகின்றார்:

"இந்த அழகிய கிரகத்தில் உள்ள ஒவ்வொரு ஜீவராசியையும் ஒரு குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்றுவதற்காக இறைவன் படைத்திருக் கிறான். நான் வாழ்க்கையில் சாதித்திருப்பவை எல்லாம் அவன் உதவியால் கைகூடியவை. அவன் விருப்பத்தின் வெளிப்பாடு அது. அற்புதமான ஆசிரியர்கள், சகாக்கள் மூலம் அவன் கருணை எனக்குக் கிடைத்தது. இந்த நல்லவர்களுக்கு நான் புகழாரம் சூட்டும்போது அவனது கீர்த்தியைத்தான் பாடுகிறேன். கலாம் என்று சொல்லப்படும் ஒரு எளிய மனிதன் மூலம் அவன் நடத்திய லீலைதான், இந்த ராக்கெட்டுகளும், ஏவுகணைகளும், யாரும் தங்களை அற்பமானவர்கள் என்றோ, நிராதரவானவர்கள் என்றோ எப்போதும் நினைக்கக்கூடாது என்பதைக் கோடானு கோடி இந்திய மக்களிடம் சொல்வதற்காக அவன் வகுத்த திட்டம் இது! நாம் அனைவருமே நமக்குள்ளே ஒரு தெய்வீக

அக்னியுடன் பிறந்திருக்கிறோம். இந்த அக்னியைக் கொழுந்துவிட வைத்து அதன் பொன்னொளியை இந்த உலகத்தில் பரப்புவதற்காக முனைவது நமது கடமை. கடவுள் உங்களுக்கு அருள் புரியட்டும்!"

தெய்வ பக்தியும் தேசபக்தியும் தன்னம்பிக்கையும் அப்துல் கலாமின் நாடி நரம்போடு இளமையில் இருந்தே பின்னி வளர்ந்து வந்த உணர்ச்சிகள் என்பதை உணர்த்தும் அற்புதமான வரிகள் இவை!

படிப்பவர் உள்ளங்களில் கல்வெட்டுக்களாய்ப் பதிய வேண்டிய அப்துல் கலாமின் இன்னும் சில அனுபவ மொழிகள் இதோ:

∴ நினைத்தது நிறைவேற வேண்டும் என்றால், அதற்குத் தீவிரமாக ஆசைப்பட வேண்டும்; அது நிச்சயமாக நடந்தே தீரும்.

∴ வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.

∴ தங்களுடைய தொழில் சிகரத்தை எட்ட விரும்புகிறவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தகுதி முழுமையான பொறுப்புணர்வு... ஈடுபாடு, பங்கேற்பு, பொறுப்புணர்வு இந்த மூன்று அம்சங்கள்தான் செயல் திட்டத்தின் தாரக மந்திரங்கள்.

∴ தெளிவான கண்ணோட்டம் இல்லாத தடுமாற்றம், திசை தெரியாத குழப்பம் - இதுதான் இந்திய இளைஞர்களை வாட்டும் மிகப் பெரிய பிரச்சினை.

∴ ஆன்மிக உணர்வு நிறைந்த வாழ்க்கையில்தான் முழுமையான திருப்தி காண முடியும், சம நிலைக்கு வரக்கூடும்.

∴ பொருளாதாரச் செழிப்பு, வலுவான பாதுகாப்பு என்ற இரண்டு அம்சங்களுமே ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவை.

"ஒரு நெறியையோ, ஒரு நூலையோ, சான்றோர் ஒருவரையோ பற்றிக்கொண்டு வாழ்கின்றவர்களே மனம் தடுமாறாமல் விளங்குகின்றார்கள்" என்பார் முனைவர் மு.வரதராசனார்.

உங்களின் மனம் என்றுமே தடுமாறாமல் விளங்க வேண்டும் என்றால், நீங்கள் சிக்கெனப் பற்றிக்கொள்ள வேண்டிய ஒரு நூல் அப்துல் கலாமின் 'அக்னிச் சிறகுகள்' தான்!

31
'சின்னச் சின்ன வார்த்தையில்தானே ஜீவன் இன்னும் இருக்கு?'

சாப்பாட்டு மேசை; மனைவி உங்களுக்கு உணவு பரிமாறுகிறார்; குழம்பு ஊற்றுகிறார். "குழம்பா இது? எவ்வளவு தெளிவாக இருக்கிறது" என்று சொல்லிப் பாருங்கள். மனைவியின் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பும். அடுத்து ரசம் ஊற்றும்போது "ரசமா இது? அதிரசம்! என் அம்மாவும் ரசம் வைத்துச் சாப்பிட்டிருக்கிறேன் (அம்மா பக்கத்தில் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு இதைக் கூறுங்கள்). ஆனால், உன் கைபட்டதும் ரசத்திற்கே ஒரு தனி மணம் வந்துவிடுகிறதே எப்படி?" என்று கேட்டுப் பாருங்கள். மனைவியின் முகத்தில் இப்போது புன்னகை மொட்டாக விரியும். நிறைவாக, மோர் ஊற்றும் போது 'ஒன்ஸ் மோர்' என்று சொல்லிக் கையில் வாங்கி உறிஞ்சிக் குடித்துப் பாருங்கள். உங்கள் அன்பு மனைவியின் முகம் அன்றலர்ந்த மலர் போல் மலரும். 'சின்னச் சின்ன வார்த்தையில் தானே ஜீவன் இன்னும் இருக்கு?' என்னும் கவிஞர் வைரமுத்துவின் பாடல் வரிகளுக்கான அனுபவப் பொருள் உங்களுக்கு நன்றாக விளங்கும்.

இதே போல் இன்னொரு காட்சி: நீங்கள் சாப்பிடும்போது உணவின் இடையே தலைமுடி ஒன்று வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்; உடனே தாம், தூம் என்று மண்ணுக்கும் விண்ணுக்குமாகத் தாவிக் குதிக்காமல், மெல்லச் சிரித்துக்கொண்டே "இந்த முடி உன் தலையில் இருந்தாலும் அழகு; இந்தத் தட்டுக்கு வந்தாலும் அழகு" என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் மனைவியே தன் தவற்றினை உணர்ந்து அடுத்துக் கவனமாகச் செயல்படுவார்; கண்ணும் கருத்துமாக உங்களுக்கு உணவு பரிமாறுவார்.

கவியரசு கண்ணதாசன் 'அர்த்தமுள்ள இந்து மதம்' நூலில் குறிப்பிட்டிருப்பது போல், "நிம்மதியைத் தேடி அலைவதில் பயனில்லை. அது உங்கள் நெஞ்சுக்குள்ளேயே இருக்கிறது.

வெளியில் இருந்து வீட்டுக்குத் திரும்பும் போதே, பிரச்சினையோடு திரும்பக்கூடாது.

மனைவியும் சில கேள்விக் குறிகளோடு கணவனை வரவேற்கக் கூடாது.

எதையும் அடித்துப் பேசக்கூடாது; இடித்துச் சொல்லக்கூடாது.

'நீங்கள் வாங்கி வந்த காய்கறி மகா மட்டம்' என்று மனைவி சொன்னால், 'எந்த நாய் சொன்னது' என்று கேட்கக்கூடாது. 'தப்பாகத்தான் வாங்கி வந்துவிட்டேன்' என்று ஒப்புக்கொண்டுவிட வேண்டும். பிரச்சினை அடியோடு முடிந்துவிடும்.

'சாப்பாடு மகாமட்டம்' என்று கணவன் சொன்னால், 'எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான். வேண்டுமானால் உங்கள் அம்மா வீட்டில் போய்ச் சாப்பிடுங்கள்' என்று சொல்லக்கூடாது. 'இன்றைக்கு என்னவோ உடம்புக்கு சரியில்லை, படுத்துக் கிடந்தேன். நாளைக்கு நன்றாகச் செய்து வைக்கிறேன்' என்று சொல்ல வேண்டும்."

நமது கிராமப்புறங்களிலே வழங்கி வரும் ஒரு பழைய கதை இல்லற வாழ்வின் வெற்றி இரகசியத்தை எவ்வளவு இயல்பாகவும் சுவையாகவும் எடுத்துக்காட்டுகிறது பாருங்கள்:

"ஒரு பையனுக்குத் திருமணம் ஆயிற்று. மனைவி வீட்டுக்கு வந்தாள். ஆயினும் தாயாரிடம் இருந்த மிதமிஞ்சிய பயபக்தியினால் மனைவியுடன் பேசுவதற்குக் கூட அவனுக்குத் துணிச்சல் ஏற்பட வில்லை. அதற்கான வாய்ப்பும் அவனுக்குக் கிடைக்கவில்லை. இப்படிப் பல நாட்கள் கழிந்தன. ஒருநாள் இரவு பையன் சற்று நேரம் கழித்து வீட்டிற்கு வந்தான். தாயாருக்கு உடல்நலம் இல்லை; படுத்துக்கொண்டு விட்டாள். 'அப்பா! குதிர் இடுக்கில் சாதம் எடுத்து வைத்திருக்கிறேன். அவளையே போடச் சொல்லிச் சாப்பிடு' என்றாள். பையன் கிராக்கி பண்ணிக்கொண்டான்.

'உன் கையால் போட்டால்தான் அம்மா எனக்கு வயிறு நிறைந்தாற் போல இருக்கும்' என்றான். 'இல்லையடா, அப்பா! இன்று ஒருநாள் அவள் போடட்டும், நாளைக்கு நான் போடுகிறேன்' என்றாள் தாயார்.

பையன் சமையல் அறைக்குச் சென்று இலை எதிரில் உட்கார்ந்தான். எத்தனை நாளைய கனவு இன்று நனவாகப் போகிறது? அதை நன்கு அனுபவிக்க வேண்டாமா? 'சாதத்தைக் கையிலேயே போட்டுவிடு' என்றான். மனைவி ஈயச் சட்டியில் மாமியார் எடுத்து வைத்திருந்த பழைய

சாதத்தைக் கொண்டுவந்து பிடிபிடியாக எடுத்துக் கணவனின் உள்ளங் கையில் போட்டாள். அவன் ஒவ்வொரு பிடியுடனும் மனைவியின் முகத்தின் அழகையும் சேர்த்து அருந்தினான். வழக்கத்தை விட இரண்டு மடங்கு அதிகம் சாப்பிட்டான்: ஈயச்சட்டி காலியாகிவிட்டது.

மறுநாள் காலையில் தாயார் எழுந்து சென்று எருமை மாட்டுக்குப் பருத்திக்கொட்டை ஊற வைத்திருந்த ஈயச் சட்டியை எடுத்துப் பார்த்தாள். அது காலியாக இருக்கவே, திடுக்கிட்டாள். இன்னொரு ஈயச் சட்டியைப் பார்த்தாள். அதில் பழைய சாதம் அப்படியே இருந்தது. தன் கணவனைத் தனியாகக் கண்ட மகிழ்ச்சியில் அந்த இளம்மனைவி பழையது வைத் திருந்த சட்டிக்குப் பதிலாக, எருமை மாட்டுக்குப் பருத்திக்கொட்டை ஊற வைத்திருந்த சட்டியைக் கொண்டுவந்துவிட்டாள். அதே மகிழ்ச்சியினால் பையனும் அவ்வளவு பருத்திக்கொட்டையையும் அப்படியே சாப்பிட்டு விட்டான்!"

உங்கள் இல்லறம் நல்லறமாக விளங்க வேண்டும் என்றால் - உங்கள் குடும்பம் ஒரு கோயிலாக, பல்கலைக்கழகமாகத் திகழ வேண்டும் என்றால் - ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழுங்கள்! நிம்மதியும் மன நிறைவும் மகிழ்ச்சியும் உங்கள் குடும்பத்தில் என்றென்றும் களிநடம் புரிந்து கொண்டிருக்கும்!

32
அவரவர் பண்பறிந்து செயல்படுங்கள்!

உண்மையைக் கூட மற்றவர் மனம் நோகாத வண்ணம் - புண்படாத வகையில் - எடுத்துரைக்க வேண்டும். அதுதான் ஒருவர் தம் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழி ஆகும். அது எளிதான காரியம் அன்று. ஆனால் முயன்றால் முடியாததும் அன்று. உதாரணமாக, பீர்பால் கதை ஒன்று வருமாறு:

மாமன்னர் அக்பர் ஒருநாள் கனவு ஒன்று கண்டார். அது என்ன கனவு தெரியுமா? தம்முடைய பற்களில் ஒன்றைத் தவிர மற்ற பற்கள் எல்லாம் விழுந்துவிட்டது போல்!

மறுநாள் தமது நாட்டில் உள்ள சோதிடர்களை எல்லாம் வரவழைத்துத் தாம் கண்ட கனவுக்குப் பலன் என்ன எனக் கேட்டார் அக்பர்.

"அரசே! உங்கள் உறவினர்கள் எல்லோரும் உங்களுக்கு முன்னதாக இறந்து விடுவார்கள்! நீங்கள் மட்டும் தனித்து விடப்படுவீர்கள்! இதுதான் அந்தக் கனவுக்குப் பொருள்" என்று எல்லாச் சோதிடர்களும் ஒருமித்த குரலில் கூறினார்கள்.

சோதிடர்களின் பொருள் விளக்கம் அக்பருக்கு மனநிறைவைத் தரவில்லை. மாறாக, ஆழ்ந்த வருத்தத்தையே தந்தது. எனவே, அவர்களுக்குப் பரிசோ, பாராட்டோ எதுவும் தராமல் திருப்பி அனுப்பிவிட்டார் அக்பர்.

அப்பொழுது பீர்பால் அரசவைக்குள் நுழைந்தார். அவரை அழைத்து, தாம் கண்ட கனவுக்குப் பொருள் என்ன என்று கேட்டார் அக்பர்.

பீர்பால் சிறிது நேரம் பிரச்சினையைச் சிந்தித்துப் பார்த்தார். பிறகு சொன்னார்: "மன்னர் பெருமானே! நீங்கள் கண்ட கனவின் பொருள் எதைக் குறிப்பிடுகிறது என்றால், 'உங்கள் உறவினர்களைக் காட்டிலும் நீங்கள் மட்டும் எல்லாவிதமான இன்பங்களையும் பேறுகளையும் பெற்று நீடூழி வாழ்வீர்கள்' என்பதைத்தான்".

சாமர்த்தியமான இந்தப் பதிலைக் கேட்ட மாமன்னர் அக்பர் மனம் மிகவும் மகிழ்ந்து பீர்பாலைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

சோதிடர்களும் பீர்பாலும் சொன்ன செய்தி ஒன்றுதான். ஆனால் அதனை வெளியிட்ட முறையில்தான் வேறுபாடு! சோதிடர்கள் உள்ளதை உள்ளபடி கூறினார்கள், என்றாலும் அவர்களால் அக்பரின் உள்ளத்தைத் தொட முடியவில்லை; அவரிடம் இருந்து பரிசையோ பாராட்டையோ பெற முடியவில்லை. பீர்பாலோ உள்ளதை மன்னரின் உள்ளம் ஏற்றுக் கொள்ளுமாறு உரைத்தார். அதனால் அவரால் அக்பரின் உள்ளத்தைத் தம்பால் ஈர்க்க முடிந்தது; அவரிடம் இருந்து பரிசையும் பாராட்டையும் பெற முடிந்தது.

நம் வாழ்க்கை அனுபவத்திலும் பார்க்கலாம். நாம் ஒருவருக்கு நல்லதைத்தான் சொல்லி இருப்போம்; செய்து இருப்போம். ஆனால், அவர் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு இருப்பார்; விளைவு என்ன ஆகும் தெரியுமா? அவருக்கு நம்மீது வருத்தமும் கோபமும் உண்டாகும்; நட்பே முறிந்துபோனாலும் போகும்.

வள்ளுவரின் அனுபவ மொழி இதோ:

'நன்று ஆற் றலுள்ளும் தவறு உண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.'

ஒருவருக்கு நல்லதே சொன்னாலும் சரி, செய்தாலும் சரி, அவரது பண்பு அறிந்து செயல்படவில்லை என்றால், தவறு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே எப்போதும், யாருக்கும் அவரவர் பண்பறிந்து எதையும் சொல்லுங்கள், செய்யுங்கள்!

33

இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்!

21-ஆம் நூற்றாண்டில் ஒளி படைத்த பாரதம் - வளமும் வலிமையும் வாய்ந்த பாரதம் - உருவாக வேண்டும் என்றால், அதற்கு இரண்டு காரியங்கள் முக்கியமாக நடந்தாக வேண்டும். அவை என்ன என்ன என்று கேட்கிறீர்களா? இதோ, பாட்டுக்கொரு புலவர் பாரதியார் முரசறைகின்றார், கேட்போம்:

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழு மனிதருக்கெல்லாம்;
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்!"

இந்தப் பாரை - பாரத தேசத்தை - உயர்த்திட வேண்டுமானால் முதலில் இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும். இந்தியாவில் எவரும் பசியால் வாடக்கூடாது; பட்டினியால் சாகக்கூடாது. இன்னும் ஒரு படி மேலே சென்று, "இந்தியாவில் ஒரு நாய் பட்டினி கிடந்தால் அதற்கு உணவளிப்பதே என் மதம்" என்கிறார் வீரத்துறவி விவேகானந்தர்.

ஒருநாள் மாமன்னர் அக்பர் தம் அரசவையில் வீற்றிருந்த அமைச்சர்களை நோக்கி "ஒவ்வோர் ஆண்டிலும் இலையுதிர் காலம், வசந்த காலம், மழைக் காலம், கோடைக் காலம் என்று பல காலங்கள் வருகின்றனவே. இவற்றில் எந்தக் காலம் மக்களுக்கு நல்ல காலம்?" என்று கேட்டார்.

அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காலம் சிறப்பு வாய்ந்தது என்று கூறினார்கள்.

அக்பருக்கு இந்தப் பதில்கள் எதுவுமே மன நிறைவைத் தரவில்லை. எனவே, பீர்பாலை நோக்கி, "இந்தக் கேள்விக்கு உம்முடைய பதில் என்ன?" என்று கேட்டார்.

"அரசர் பெருமானே! வயிறு நிறையச் சாப்பிட்டவர்களுக்கு எல்லாக் காலங்களுமே நல்ல காலம்தான்! வறுமையால் வாடுகின்றவர்களுக்கோ எல்லாக் காலங்களும் கெட்ட காலங்களே" என்று கூறினார் பீர்பால்.

அக்பர் அக மகிழ்ந்தார்.

சரி, இந்திய நாட்டில் பிறந்த அனைவருக்கும் வயிற்றுக்குச் சோறு கிடைத்தாகிவிட்டது; உணவுத்துறையில் தன்னிறைவைப் பெற்றாகி விட்டது. அப்புறம்? பாரதியார், அடுத்து வலியுறுத்துவது எதை என்று பாருங்கள். அவர் ஏட்டுக்கல்வி மட்டும் போதும் என்று எங்கும் சொல்லவில்லை. ஏட்டுக் கல்வி வெறும் பட்ட அறிவை மட்டும் தரும்; நமக்கு வேண்டுவது பட்டறிவும் அல்லவா? ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? ஒரு பத்திரிகையில் வெளிவந்த நகைச்சுவைத் துணுக்குச் செய்தி இது:

ஓர் அறிஞர் வெளிநாடு சென்று தாவர இயலில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார்; பட்டம் பெற்ற கையோடு - கர்வத்தோடு - தம் கிராமத்திற்கு வந்தார். அங்கே ஒரு மரத்தடியில் படிப்பறிவே இல்லாத ஏழை விவசாயி ஒருவனைச் சந்தித்தார். இருவரும் இவ்வாறு உரையாடிக் கொண்டார்கள்:

"ஏம்ப்பா? இது உன்னுடைய மரமா?"

"ஆமாமுங்க!"

"இதுக்கு என்ன உரம் போடுறே? அமோனியம் பாஸ்ஃபேட் போடுறியா?"

"இல்லீங்க. ஆட்டுப்புழுக்கைதான் போடறேன்!"

"சோடியம் சல்ஃபேட்டாவது போடுறியா?"

"இல்லீங்க, எருமைச்சாணிதான் போடறேன்!"

"இதோ பாருப்பா, அம்மோனியம் பாஸ்ஃபேட், சோடியம் சல்ஃபேட் இரண்டும் போட்டா, இந்த மரம் இப்ப காய்க்கறதை விட கூடுதலா 50 தேங்காய் காய்க்கும்ப்பா!"

"காய்க்காதுங்க!"

"அதெப்படி அவ்வளவு தீர்மானமாய்ச் சொல்றே?"

"ஏன்னா, இது கொய்யா மரமுங்க!"

'பயிற்றிப் பல கல்வி தந்து' என்று பாரதியார் பாடியதன் உண்மைப் பொருள் இப்போது உங்களுக்கு விளங்கியிருக்குமே? ஏட்டுக்கல்வி,

தொழில் கல்வி, வாழ்க்கைக் கல்வி எனப் பல்வகைக் கல்வியையும் தந்து இந்தப் பாரை உயர்த்துமாறு கட்டளை இடுகிறார் பாரதியார். அவர் வாக்கைப் பொன்னே போல் போற்றுவோம்; 21-ஆம் நூற்றாண்டில் உலக அரங்கில் பாரத தேசம் நல்லரசாகவும் வல்லரசாகவும் ஒருங்கே விளங்கப் பாடுபடுவோம்.

34

வாழ்க்கை உங்கள் வசப்படும்!

இன்றைய சூழலில் சிலருக்குச் சாதியும் மதமும் பக்கபலங்களாக அமைகின்றன. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எளிதாக முன்னேற்றத்தைக் கண்டு விடுகிறார்கள். இன்னும் சிலருக்குப் பண பலம் இருக்கின்றது. அந்த அபாரமான பலத்தின் துணையோடு அவர்கள் விரைவாக வெளிச்சத்திற்கு வந்துவிடுகிறார்கள். வேறு சிலருக்கு அரசியல் செல்வாக்கு அல்லது இயக்கப் பின்னணி உள்ளது. அவர்கள் புகழேணியின் உச்சியை வெகு சீக்கிரமாகவே அடைந்துவிடுகிறார்கள். மற்றும் சிலர் மீது அதிர்ஷ்ட தேவதையின் கடைக்கண் பார்வை படுகின்றது. உடனே அவர்களது வாழ்வில் வெற்றி மீது வெற்றி வந்து சேருகின்றது. இவற்றை எல்லாம் காணும் இன்றைய இளைய தலைமுறையினர் 'நம்மால் இப்படி வாழ்க்கையில் வேகமாக, எளிதாக் முன்னேற முடியவில்லையே' என்று மிகவும் கவலைப்படுகின்றனர்; ஆழ்ந்த வருத்தமும் அடைகின்றனர்; சில நேரங்களில் விரக்தியின் விளிம்புக்கும் சென்று விடுகின்றனர். அவர்களுக்கு நான் என் அனுபவத்தில் இருந்து சொல்லும் சில சொற்கள் இவைதான்:

"இளைஞர்களே! 'வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கிறேன்; அதற்காக அல்லும் பகலும் உழைக்கவும் செய்கிறேன். ஆனால், எனக்குத் தகுந்த நல்ல வாய்ப்பு கிடைக்கவில்லையே, என்ன செய்வது?" என்று கேட்கிறீர்கள். உங்களுக்கு நான் சொல்ல விரும்புவது ஒன்று உண்டு. 'நல்ல வாய்ப்பு இன்னும் வரவில்லை' என்ற எண்ணத்திலேயே - எதிர்பார்ப்பிலேயே - ஏக்கத்திலேயே - உங்கள் காலத்தை எல்லாம் வீணாகக் கழித்துக்கொண்டிருக்காதீர்கள். உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளப் பாருங்கள். இன்னும் கூர்மைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றால், நீங்களே உங்களுக்கு ஏற்ற ஓர் வாய்ப்பினை உருவாக்கப் பாருங்கள். அதில் உங்களுடைய ஆற்றலையும் தனித்தன்மையையும் முழுமையாக வெளிப்படுத்துங்கள். 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' என்று வெற்றியானது உங்கள் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு வீடு தேடி வரும்."

வீரத்துறவி விவேகானந்தரின் குட்டிக் கதை ஒன்று இங்கே நினைவு கூரத்தக்கது. அக் கதை இதோ:

"ஏழை ஒருவன் ஒரு தேவதைக்குப் திருப்தி ஏற்படும்படி நடந்து கொண்டான். அந்தத் தேவதை அவன் முன்னர் தோன்றி, மூன்று சொக்கட்டான் காய்களைக் கொடுத்து, அவற்றை உருட்டி மூன்று வரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறியது. மகிழ்ச்சி அடைந்த அந்த மனிதன் வீடு திரும்பி, தன் மனைவியிடம் விவரத்தைச் சொன்னான். பண ஆசை பிடித்த அவளோ பணத்திற்காகக் காயை உருட்டும்படிச் சொன்னாள். அதற்கு அவன், 'நம் இருவருக்கும் மூக்கு மிகவும் அசிங்கமாக இருக்கிறது. ஊரார் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். முதலில் அழகான மூக்கு வேண்டும் என்று காயை உருட்டுவோம்' என்றான். ஆனால் பணத்தை விரும்பிய மனைவியோ காயை உருட்ட விடாமல் கணவனின் கையைப் பிடித்துக்கொண்டாள். கணவனோ திமிறிக் கையை விடுவித்துக்கொண்டு, 'எங்கள் இருவருக்கும் அழகான மூக்குகள் அமையட்டும். மூக்குகளைத் தவிர வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம்' என்று சொல்லிக் காயை உருட்டி விட்டான். உடனே-அவர்கள் இருவர் உடம்பிலும் அழகிய, ஆனால் பல மூக்குகள் தோன்றிவிட்டன. பல மூக்குகள் இருப்பது அவர்களுக்கு மிகவும் தொந்தரவாக இருந்ததால், மூக்குகளே வேண்டாம் என்று காயை உருட்ட அவர்கள் இருவரும் சம்மதித்தார்கள். அதன்படி உருட்டியபோது அவர்களுக்கு மூக்குகளே இல்லாமல் போய்விட்டன. இப்படி இரண்டு வரங்கள் வீணாகிவிட்டன. என்ன செய்வது என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கேட்பதற்கு இனி ஒரே ஒரு வரம்தான் மீதி இருந்தது. மூக்குகள் இல்லாத காரணத்தால் அதிக விகாரமாக இருந்தது. இந்த நிலையில் வெளியில் போக அவர்கள் மிகவும் நாணினார்கள். அழகிய மூக்குடன் வெளியே போனால், ' உங்களுக்கு அழகிய மூக்கு எப்படி வந்தது?'என்று ஊரார் கேட்பார்களே, அதற்கு என்ன பதில் சொல்வது என்று அஞ்சினார்கள். தங்கள் மடமையை நினைத்து வருத்தப்பட்டார்கள். அதனால் 'அழகற்ற பழைய மூக்கு தங்களுக்கு வந்தால் போதும்' என்று கூறிக் காயை உருட்டினார்கள்."

தேவதையிடம் இருந்து மூன்று வரங்களைப் பெற்றும், அவற்றை

முறையாகப் பயன்படுத்தாததால் இந்தக் கதையில் வரும் ஏழை தன் வாழ்வில் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை பார்த்தீர்களா?

எனவே, இளைஞர்களே! பொன்னான வாய்ப்பு ஒன்று வரும் என்று கண்ணில் கனவோடும் மனத்தில் கற்பனையோடும் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறீர்கள். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு - இல்லையேல், உங்களுக்குத் தகுந்த ஒரு வாய்ப்பை நீங்களே உருவாக்கிக்கொண்டு - கண்ணில் கனலோடும் மனத்தில் குறிக் கோளோடும் விடாமல் உழைத்து வாருங்கள்! அப்போது முன்னேற்றம் மட்டும் அல்ல, வாழ்க்கையும் உங்கள் வசப்படும்!

85
'நீ உன்னை அறி!'

பகவான் ரமணரின் உபதேசத்தை மூன்றே சொற்களில் இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் இப்படிச் சொல்லலாம்:

'நீ உன்னை அறி!'

அறிவு இரு வகைப்படும். ஒன்று, பிற பொருளைப் பற்றிய அறிவு. இது ஒருவன் எவ்வளவுதான் கற்றாலும், முழுமை அடையாது. 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்னும் வள்ளுவரின் வாக்கு இங்கே நினைவுகூரத்தக்கது. இன்னொன்று, தன்னைப் பற்றிய அறிவு. இது உறவு நிலையைக் கடந்தது; மனத்திற்கு அப்பாற்பட்டது. 'நான் ஆர், என் உள்ளம் ஆர், ஞானங்கள் ஆர்? என்னும் மணிவாசகரின் கூற்று இவ்வகையில் மனங்கொள்ளத்தக்கது.

பக்தர் ஒருவருக்கும் பகவான் ரமணருக்கும் இடையே நிகழ்ந்த ஓர் உரையாடல் இக்கருத்தை நன்கு உணர்த்தும்.

"பக்தர் : நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?

ரமணர் : அதை ஏன் அறிய விரும்புகிறீர்கள்?

பக்தர்: நீங்கள் கடவுளைப் பார்த்திருந்தால் நானும் அவரைக் காண உதவி செய்ய வேண்டுகிறேன்.

ரமணர்: 'நான் கடவுளைக் காண விரும்புகிறேன்' என்கிறீர்கள். முதலில் நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்.

பக்தர்: என் பெயர் தேவதத்த சர்மா.

ரமணர்: இது உங்கள் பெயர். ஆனால் நீங்கள் யார்?

பக்தர்: நான் சர்மா என்று முன்னரே சொல்லிவிட்டேன். நான் ஒரு பிராமணன்.

ரமணர்: அது உங்கள் ஜாதியின் அடையாளம். ஆனால் நீங்கள் யார்?

பக்தர்: நான் ஒரு கல்லூரி விரிவுரையாளர்.

ரமணர்: அது உங்கள் வேலை. ஆனால் நீங்கள் யார்?

பக்தர் : நான் ஒரு மனிதன்.

ரமணர் : அது உங்கள் பிறப்பு. ஆனால் நீங்கள் யார்?

பக்தர்: நான் ஒரு ஆண்.

ரமணர்: அது உங்கள் பால் அடையாளம், கடவுளை அடைய விரும்புவது யார் என்று கேட்கிறேன்.

பக்தர்: என்னை எனக்குத் தெரியாது போல் இருக்கிறது.

ரமணர்: நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியாதபோது கடவுளை எவ்வாறு புரிந்துகொள்வீர்கள்? கடவுளை உணர வேண்டுமானால் முதலில் உங்களைப் பற்றி நீங்கள் அறிய வேண்டும்; கடவுளைப் பற்றி அறிய விரும்புவது யார் என்பதை அறிய வேண்டும்."

இங்கே தான் பகவான் ரமணர் நுழைகிறார்; நம்மைப் பற்றிய உண்மையை அறிய நமக்கு உதவுகிறார். தற்பொழுது அது பற்றி ஒன்றுமே தெரியாத நிலையில் நாம் இருக்கிறோம். அக்கேள்விக்குள் நாம் இதுவரை நுழையாததே அதற்குக் காரணம். நமது கவனம் முழுவதும் வேறு எங்கோ, எதிலோ இருக்கிறது. நம் கவனத்தை உள்முகமாகத் திருப்பி நம்மைப் பற்றி அறியச் செய்வதே ரமணரின் உபதேச நோக்கமாக அமைகிறது. நம்மைப் பற்றி நாம் அறியாதபோது பிற எல்லாம் பயனற்றுப் போகின்றன. "நம்மைப் பற்றி நாம் ஒன்றும் அறியாதபோது உலகைப் பற்றி அறிவது என்ன பயன் தரும்?" என்று கேட்கிறார் ரமணர். "நம்மைப் பற்றிய உண்மை மட்டுமே அறியத்தக்கது" என்று அவர் மேலும் வலியுறுத்திக் கூறுகிறார்.

ரமணரைப் போலவே கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரட்டீசும் "மனிதனே! உன்னை நீ அறிவாயாக!" என்று மனிதனைச் சிந்திக்குமாறு வேண்டினார்.

ரமணர், சாக்ரட்டீஸ் ஆகியோரது கருத்துக்களின் சாரத்தைக் கவியரசு கண்ணதாசனும் தம் திரைப்பாடல் ஒன்றில் இங்ஙனம் எளிமைப்படுத்திப் பாடியுள்ளார்:

"உன்னையறிந்தால் - நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்!
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் - தலை
வணங்காமல் நீ வாழலாம்!"

உங்களை அறிந்துகொள்ளும் முயற்சியில் நீங்கள் எப்போது இறங்கப் போகிறீர்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள்; மற்றவற்றைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

36
சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போடுங்கள்!

மதுரையில் சமணர்களோடு வாதிடுவதற்காகத் திருஞானசம்பந்தர் புறப்பட நேர்ந்தது. அந்த நாள் சோதிடப்படி நல்ல நாளாக இல்லை. உடன் இருந்தவர் அதைச் சுட்டிக்காட்டித் தடை எழுப்பினார். அப்போது திருஞான சம்பந்தர் "எங்கள் தலைவன் சிவபெருமான் பெண் ஒரு பாகமாகக் கொண்டவன். நஞ்சையே உண்டு கண்டம் கறுத்தவன். கங்கையையும் பிறைச் சந்திரனையும் முடியில் அணிந்து, என் உள்ளத்தில் குடி புகுந்தவன். அவ்வாறு அவன் என் உள்ளத்தில் இருப்பதால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் , வெள்ளி, சனி ஆகிய நாள்களும், ராகு, கேது என்பனவும் ஒரு தீமையும் செய்யமாட்டா. அவை எல்லாம் நல்லவைகளே, அடியார்களுக்கு மிக நல்லவைகளே" என்று அஞ்சாமையும் ஊக்கமும் பிறக்குமாறு ஒரு பதிகம் பாடினார்.

"வேயுறு தோளி பங்கன், விடமுண்ட கண்டன்,
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள், கங்கை முடி மேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல, அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே."

'குழந்தை ஞானி' திருஞானசம்பந்தர் தோன்றி, 'கோளறு பதிகம்' பாடிய இந்தத் திருநாட்டில்தான் இன்று மனிதன் 'கிளி சோதிடம்' பார்க்கிறான். ஏன், கம்ப்யூட்டரில் கூட சோதிடம் பார்க்கிறான். பல்லி விழுந்தால் உடனே பஞ்சாங்கத்தில் பலன் பார்க்கிறான். 'நரி முகத்தில் விழித்தால் நன்மை உண்டாகும்', 'கழுதை படத்தை மாட்டி வைத்தால் அதிர்ஷ்டம் அடிக்கும்', 'பூனை குறுக்கே போனால் போன காரியம் தடைப்படும்' என்றெல்லாம் பற்பல மூடநம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறான். கவிஞர் அறிவுமணி தம் கவிதை ஒன்றில் கேட்பது போல், 'பூனை எலியைப் பிடிக்கப் போகிறது.

நீங்கள் பஸ்ஸைப் பிடிக்கப் போகிறீர்கள்; பூனை அதன் வேலையை ஒழுங்காகச் செய்யும்போது, நீங்கள் உங்கள் வேலையைக் கருத்தாகச் செய்யக் கூடாதா?' இன்னும் எத்தனை காலம் தான் இது போலத் தேவையில்லாத சகுனங்களைப் பார்த்துக்கொண்டு வாழ்நாளை வீணாளாகக் கழித்துக்கொண்டிருப்பது?

இதோ, நம் சிந்தனைக்கு விருந்தாகும் ஒரு நாட்டுப்புறக் கதை:

'அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக ஒரு கிளையில் அமர்ந்திருப்பதைக் காண நேர்ந்தால், அதனால் பெருத்த நன்மை உண்டு' என்று புகழ் பெற்ற சோதிடர் ஒருவர் அரசனிடம் சொன்னார்.

அன்று முதல் இரண்டு காகங்களை அதிகாலையில் காண வேண்டும் என்ற ஆசை அரசனுக்கு ஏற்பட்டது. நாளுக்கு நாள் அந்த ஆசை அவனுக்குத் தீவிரமாகிக் கொண்டு வந்தது.

ஆகவே, அவன் தன் வேலையாளை நோக்கி, 'அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக இருப்பதை நீ பார்க்க நேர்ந்தால், தாமதிக் காமல் உடனடியாக வந்து என்னிடம் செல்லு!' என்று கட்டளை இட்டான்.

மறுநாள் அதிகாலையில் இரண்டு காகங்கள் ஒன்றாக ஒரே கிளையில் அமர்ந்திருப்பதை வேலையாள் கண்டான். ஓடோடியும் அரசனிடம் சென்று இரண்டு காகங்கள் ஒன்றாக இருப்பதைத் தெரிவித்தான்.

காகங்களைப் பார்ப்பதற்காக அரசன் மகிழ்ச்சியுடன் எழுந்து வந்தான். ஆனால் அதற்குள் ஒரு காகம் பறந்து போய்விட்டது. அரசன் வந்து பார்த்தபோது ஒரு காகம் மட்டும்தான் மரத்தின் மீது அமர்ந்திருந்தது.

அரசனுக்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. பொய் சொல்லி விட்டான் என்று குற்றம் சாட்டி வேலையாளை நையப் புடைக்கச் செய்தான்.

'அதிகாலையில் இரு காகங்களைப் பார்ப்பவனுக்கு எனக்கு நேர்ந்த கதி தான் நேரும்' என்று அடிவாங்கிய வேலையாள் அலறினான்.

இதைக்கேட்டதும் அரசன் முகம் நாணத்தால் சுருங்கிப் போய்விட்டது. அன்றுமுதல் சகுனம் பார்க்கும் வழக்கத்தை அந்த அரசன் விட்டுவிட்டான்.

நீங்களும் இந்த நாட்டுப்புறக் கதையில் வரும் அரசனைப் போல் சகுனம் பார்க்கும் வழக்கத்திற்கு முழுக்குப் போட்டு விடுவது என்ற முடிவுக்கு என்று வரப்போகிறீர்கள்?

37

முத்தியும் சித்தியும் எப்போது வாய்க்கும்?

'மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக் கோனே!
சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக் கோனே - யாவும்
சித்தியென்றே நினையேடா தாண்டவக் கோனே!
ஆசையென்னும் பசுமாளின் தாண்டவக் கோனே - இந்த
அண்டமெல்லாம் கண்டறிவாய் தாண்டவக் கோனே'

-என்பது இடைக்காட்டுச் சித்தர் வாக்கு. இதன் நயத்தையும் நுட்பத்தையும் கொஞ்சம் நாம் அலசிப் பார்ப்போமா?

ஒருவருக்கு முத்தி எப்போது வாய்க்கும்? மனம் என்னும் மாடு அடங்கினால் வாய்க்கும். மனத்தை அடக்குவது என்பது எளிதான காரியமா? அரிதினும் அரிதான காரியம் அது. எப்படி என்று கேட்கிறீர்களா?

ஓர் இளைஞன் தியானம் செய்ய நிம்மதியான ஓர் இடம் கிடைக்குமா என்று தேடுகிறான். கடைசியில் ஓர் ஓடைக்கு அருகில் உள்ள ஆலமரத்தடியைத் தேர்ந்தெடுக்கிறான். நாள்தோறும் காலை எட்டு மணியில் இருந்து தியானம் செய்வது என்று முடிவெடுக்கிறான்.

அன்று காலை 10 மணி இருக்கும். ஓர் அழகான இளம்பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவளைக் கண்டதும் இளைஞனின் தியானம் கலைகிறது.

கண்கள் திறந்து இருந்ததனால் தானே தியானம் கலைந்தது என்று அடுத்த நாள் ஒரு துணியால் கண்களைக் கட்டிக்கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அப்பொழுது காலை 10 மணி இருக்கும். திரும்பவும் அப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவளுடைய கால் கொலுசு ஜல்ஜல் என்று ஒலி எழுப்ப, இளைஞனின் தியானம் கலைகிறது.

அடுத்த நாள் காலை காதுகளையும் மூடிக்கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அன்று பத்து மணி அளவிற்கு அந்தப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். அவள் தலையில் சூடியிருக்கும் மல்லிகைப் பூவின் வாசனை இளைஞனின் மூக்கைத் துளைக்கிறது. அதன்

விளைவாக அன்று அவனது தியானம் கலைகிறது.

அடுத்த நாள், மூக்கையும் மூடிக்கொண்டு தியானம் செய்கிறான் இளைஞன். அன்றும் பத்து மணி அளவிற்கு அந்தப் பெண் அந்தப் பக்கம் வருகிறாள். இளைஞன் அவளைப் பார்க்கவில்லை; அவளுடைய கொலுசின் ஒலியைக் கேட்கவில்லை; அவள் சூடிய மல்லிகைப் பூவின் வாசனையையும் நுகரவில்லை; இருந்தும் இளைஞனின் மனம் நினைக்கிறது, 'அந்தப் பெண் இத்தனை நேரம் இங்கு வந்திருப்பாளே!' என்று. அதன் காரணமாக அவனுடைய தியானம் கலைகிறது.

மனத்தை அடக்குவது எவ்வளவு அரிய முயற்சி என்பதை இந்தக் கதையால் உணர முடிகிறது அல்லவா? ஆனாலும், முறையான பயிற்சியாலும், திட்டமிட்ட முயற்சியாலும் மனத்தை நம் வசத்தில் வைத்துக்கொள்ளலாம்.

அடுத்தது சினம். 'சினம் என்னும் பாம்பு இறந்தால் யாவும் சித்தி ஆகும்' என்கிறார் இடைக்காட்டுச் சித்தர். இன்று 'AIDS' என்ற கொடிய நோயை, 'உயிர்க்கொல்லி நோய்' என்கிறோம். வள்ளுவரோ 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' என்கிறார். 'ஆறுவது சினம்' என்று தானே இளமையில் நாம் படித்த ஆத்திசூடியும் நமக்கு அறிவுறுத்துகின்றது?

மூன்றாவது, ஆசை. 'ஆசை என்னும் பசு மாண்டால் இந்த அண்டமெல்லாம் கண்டறிவது எளிதாகும்' என்கிறார் இடைக்காட்டுச் சித்தர். தமிழில் ஆசை, பற்று என இரு சொற்கள் உண்டு. மண், பெண், பொன் இவற்றின் மீது ஒருவர் வைப்பது ஆசை. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என இவற்றைச் சுட்டுவர். நாடு, மொழி, இனம் இவற்றின் மீது ஒருவர் கொள்ளுவது பற்று. நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்று என இவற்றைக் குறிப்பிடுவர். ஒருவர் மனத்தில் பற்று இருக்கலாம்; ஆசை இருக்கக்கூடாது. 'ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்' என்றார் திருமூலர். 'ஆசைக்கோர் அளவில்லை, அகிலமே கட்டி ஆண்டாலும்' என்றார் தாயுமானவரும்.

முத்தாய்ப்பாக ஒரு சொல்:

ஒருவரால் தம் மனத்தை அடக்கி, சினத்தை வென்று, ஆசையைக் கட்டுப்படுத்த முடிந்தது என்றால், அதுவே மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கான அடையாளம் ஆகும்.

38

பிரச்சினைகளை எதிர்கொண்டு சமாளியுங்கள்!

பிரச்சினைகளைக் கண்டு பயந்து, பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாமல் ஓடி ஒளிந்து கொள்ளப் பார்ப்பது கோழைத்தனம். இது தப்பித்தல் மனப்பான்மையின் (Escapism) அடையாளம்.

பிரச்சினைகளில் மாட்டிக்கொண்டு விடுபட முடியாமல், பிரச்சினைகளைச் சகித்துக்கொண்டு போவது முட்டாள்தனம். இது அறியாமையின் (Ignorance) வெளிப்பாடு.

பிரச்சினைகளை முழுமூச்சோடு எதிர்கொண்டு சமாளித்து வெளிவருவது, பிரச்சினைகளோடு சரிக்குச் சரியாக மல்லுக்கு நின்று கடுமையாகப் போராடித் தீர்வு காண்பது புத்திசாலித்தனம். இதுவே வாழ்க்கையில் வெற்றி காண்பதற்கான சூழ்ச்சித் திறம் (Diplomacy); வழிமுறை.

நீங்கள் யாராக இருக்க விரும்புகிறீர்கள்? கோழையாகவா? முட்டாளாகவா? புத்திசாலியாகவா?

மராத்திய மன்னர் வீர சிவாஜியின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி:

அவுரங்கசீப்பின் படையை மராத்திய வீரர் சிவாஜி எதிர்த்து நின்ற வேளை அது. சிவாஜியின் படையினர் முகலாயர்களால் துரத்தப்பெற்று அவிழ்த்து விடப்பெற்ற நெல்லிக்காய் மூட்டைகளைப் போல் சிதறி ஓடினர். சிவாஜி நடுக்காட்டில் மறைந்து திரிந்தார். காட்டில் இருந்த குடிசையின் உள்ளே சென்ற சிவாஜிக்குப் பசி. அக்குடிசையில் இருந்த கிழவி சூடான சோற்றை சிவாஜியின் முன் வைத்தாள். அகோரப் பசி ஆகையால், சோறு சூடாக இருக்கும் என்ற உணர்வு இன்றி முதல் கவளத்தை எடுத்து வாயில் போட்டார் சிவாஜி. சூடாக இருந்ததால் சோறு அவரது வாயைச் சுட்டுவிட்டது.

கிழவி, "மகனே, உனக்கும் சிவாஜிக்கும் கொஞ்சம் கூட வித்தியாசம் இல்லையே?" என்றார்.

"அம்மா, சிவாஜிக்கும் எனக்கும் என்ன தொடர்பு? ஏன் அவரோடு என்னை ஒப்பிடுகிறாய்?" என்று கேட்டார் சிவாஜி.

"மகனே, அவன் தைரியசாலி, சிறந்த போர் வீரன், திறமையானவன். ஆனால் அரசியல் தந்திரத்தில் முட்டாளாய் இருக்கிறானே! உன்னை

அவனுடன் ஒப்பிட்டுக் கூறியது மிகவும் பொருத்தமே. ஏனென்றால், இலையின் ஓரத்தில் உள்ள ஆறிப் போன சோற்றை முதலில் பிசைந்து எடுத்து வாயில் போட்டுக்கொள்ளாது, சூடான சோற்றை வாயில் போட்டுக்கொண்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கிறாய். அவனும் சிறிய கோட்டைகளை முதலில் கைப்பற்றுவதை விட்டுவிட்டுப் பெரிய கோட்டைகளை வெல்ல ஆசைப்படுகிறான்.

கிழவி இதனைக் கூறி முடித்ததும் சிவாஜி அவள் கால்களில் விழுந்து, "அம்மா, எனக்கு நீ அரசியல் தந்திரத்தைப் பற்றிய முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொடுத்திருக்கிறாய்" என்றதும், வந்தவர் சிவாஜிதான் என்று அறிந்து சிலையானாள் கிழவி.

இங்கே ஒரு மாமன்னர் தமது அரசியல் பிரச்சினையின் பரிமாணத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளுவதற்குக் குடிசையில் வாழும் ஓர் ஏழைக் கிழவியின் ஆலோசனை உதவி இருக்கின்றது.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என வள்ளுவர் பெருமான் 'மருந்து' அதிகாரத்தில் பாடியிருப்பதை நாம் பிரச்சினைக்கும் பொருத்திப் பார்த்து இப்படிக் கூறலாம்:

"பிரச்சினையையும், பிரச்சினையின் காரணத்தையும், பிரச்சினையைத் தீர்க்கும் வழியையும் ஆராய்ந்து செயல்படுவதே வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிமுறை ஆகும்."

பிரச்சினை இல்லாமல் வாழ்க்கை இல்லை; பிரச்சினை இல்லாத வாழ்க்கையும் வாழ்க்கை இல்லை. எனவே, வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்க வேண்டாம்; ஓடி ஒளியவும் வேண்டாம்; பிரச்சினைகளில் மாட்டிக் கொண்டு வெறுமனே அல்லாடிக்கொண்டு இருக்கவும் வேண்டாம்; பிரச்சினைகளைப் பொறுத்துக்கொண்டு அவற்றுடன் பழகிப் போகவும் வேண்டாம்; பிரச்சினைகளோடு மல்லுக்கு நின்று தீர்வு காண்போம்; பிரச்சினைகளைச் சமாளித்து வெளிவருவோம்; வெற்றி வாகை சூடுவோம். ஒருமுறை எழுத்தாளர் ஜெயகாந்தன் 'என் கதைகள் பிரச்சினைகளின் பிரச்சினை' என்று தம் கதைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அதுபோல் நாமும் பிரச்சினைக்குப் பிரச்சினையாக இருப்போமே? பிரச்சினையை ஒரு கை பார்ப்போமே?

89
கடவுளின் கருணை யாருக்கு?

யார், என்ன, எப்போது, எங்கே, ஏன், எப்படி? என்ற ஆறு வினாக்களுக்கு விடை கிடைத்தால் அதுதான் செய்தி (NEWS) என்று பத்திரிகைத் துறையில் கூறுவார்கள். அதுபோல் கடவுள் யார், அவரது கருணை எப்போது, எங்கே, எப்படிக் கிடைக்கும், ஏன் இப்படி பக்தர்களுக்குச் சோதனை தருகிறார் அவர், என்ன சொல்லி அவருக்கு நம் நிலையைப் புரிய வைப்பது என்ற வினாக்களுக்கு உரிய விடைகளைக் குறித்தும் கொஞ்சம் சிந்தித்துப் பார்ப்போமா? இவ் வகையில் நமக்குக் கைகொடுக்கும் இரு ஆன்மிகக் கதைகள் இதோ:

● தொடர்ந்து பெரும் மழை. அந்தச் சிறிய கிராமத்தை நோக்கி வெள்ளப்பெருக்கு வந்துகொண்டிருந்தது. மக்கள் எச்சரிக்கையோடு அந்த ஊரை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

ஒரு பக்தன் மட்டும் தன் வீட்டில் அமர்ந்து, "கடவுளே! என்னைக் காப்பாற்றும்!" என்று வேண்டிக் கொண்டிருந்தான்.

ஊருக்குள்ளேயே வெள்ளம் புகுந்துவிட்டது. எஞ்சியிருந்த ஒரு சிலரும் மற்றவர்கள் உதவியுடன் தண்ணீரில் இறங்கிக் கடந்து பாதுகாப்பான இடம் தேடிப் போனார்கள்.

பக்தன் போகவில்லை. "நம்பிக்கையோடு இருக்கிறேன். கடவுளே, காப்பாற்றும்!" என்று உருக்கமாக வேண்டினான்.

வீட்டுக்குள் தண்ணீர் புகுந்தது. பக்தன் கூரை மேல் தொத்தினான், மீண்டும் வேண்டினான்.

ஒரு பெரிய மரக்கிளை அவன் பக்கத்தில் வந்தது. அதன் மேல் ஒரு நாயும் அமர்ந்திருந்தது. பக்தன் அந்த மரத்தையும் பற்றிக்கொள்ளவில்லை.

ஒரு பெரிய அலை வந்து அவனை வெள்ளத்தில் அடித்துச் சென்றது. அவன் கத்தினான்: "கடவுளே! உன்னை நம்பி உறுதியாய் இருந்தேன். என்னைக் கைவிட்டுவிட்டாயே!"

கடவுள் சொன்னார்: " என் உதவி உனக்கு முன்னெச்சரிக்கையாய், மற்றவர்களின் முயற்சியாய், இயற்கையில் மிதந்து வந்த மரமாய் உன்னிடம் வந்ததே! நீ தான் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே?"

விடாமுயற்சியும் உழைப்பும் இல்லாதவனுக்குக் கடவுளின் அருள் எப்படி வந்து சேரும்?

● அலை மோதி அந்தக் கப்பல் உடைந்து போய்விட்டது.

நீர் சூழ்ந்த அந்தத் தீவில் அவன் மட்டும் கரை சேர்ந்தான். மீதியுள்ளோர் நீரில் மூழ்கி இறந்து போனார்கள்.

கரை சேர்ந்த அவன் மட்டும் காமா சோமா என்று குடிசை ஒன்றைக் கட்டி அதிலேயே வாழ்ந்துவந்தான்.

மூழ்கிய கப்பலில் இருந்து எப்படியோ முடிந்தவரை எடுத்து வந்த தன் உடைமைகள் சிலவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தான்.

கிடைத்ததை உண்டு, பிரார்த்தனையிலேயே காலத்தைக் கழித்தான்.

"தெய்வமே! ஏதாவது ஒரு கப்பல் இந்தப் பக்கம் வந்து என்னை ஏற்றிக்கொண்டு போய் என் சொந்த நாட்டில் சேர்த்துவிட்டால் நன்றாக இருக்கும். இதற்கு நீ அருளமாட்டாயா?" என நெஞ்சுருகி வேண்டி வந்தான்.

உணவுக்காக வேட்டையாடித் திரும்பிய ஒருநாள் அவனது குடிசை தீக்கு இரையாகி எரிந்து சாம்பல் குவியலாகக் காட்சி தந்தது.

"தெய்வமே! இத்தனை நாளும் உன்னை உருகி உருகிப் பிரார்த்தித்த தற்கு இதுதானா நான் கைமேல் கண்ட பலன்? உனக்கு இரக்கமே இல்லையா?" என்று மிகவும் நொந்து தெய்வ நிந்தனை செய்தான்.

அடுத்த நாள்,

என்ன ஆச்சரியம்! கப்பல் ஒன்று கரையோரம் வந்தது. கப்பலின் தலைவன் சொன்னான்: "இங்கே ஏதோ புகை கண்ணில் பட்டது. யாரோ உதவி வேண்டித் தவிக்கிறார்கள், காப்பாற்றுவோம் என்று வந்தோம்."

கடவுள் தீயாகவும் இருப்பார் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையே அவர் தீயாகவும் வருவார் என்பதும்.

"வேண்டத் தக்கது அறிவோய் நீ,

வேண்ட முழுவதும் தருவோய் நீ"

என மணிவாசகர் இறைவனைப் பற்றிக் கூறியது எவ்வளவு சரியானது பார்த்தீர்களா?

40
இன்பங்களில் எல்லாம் தலைசிறந்த இன்பம்

'இன்பங்களில் எல்லாம் தலைசிறந்த இன்பம் எது?' என்று கேட்டால், 'நாளும் நல்ல நல்ல புத்தகம் படித்தல்' என்று பகுத்தறிவு படைத்த எவரும் தயங்காமல் உடனடியாகப் பதில் சொல்லி விடுவார்கள். ஏனெனில், புத்தகம் படிப்பது என்பது மனித வாழ்க்கையில் ஒரு நல்ல பழக்கம் மட்டும் அன்று; வாழ்க்கைக்கு நன்மை பயக்கும் ஒரு விழுமிய வழக்கமும் ஆகும். இன்னும் ஒரு படி மேலாகச் சொல்ல வேண்டும் என்றால், மனிதனது ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் - ஏன், உலகின் போக்கையே மாற்றி அமைக்கும் திறம் - நல்ல புத்தகங்களுக்கு உண்டு. ஆங்கில நாளிதழான 'இந்து' ஒரு கட்டுரையில் இருபதாம் நூற்றாண்டில் உலகை மாற்றிய புத்தகங்களாகப் பின்வரும் ஐந்து அறிஞர்களின் நூல்களைக் குறிப்பிட்டிருந்தது: –

1. நிக்கோலஸ் கோபர்னிகஸ் (Nicolaus Copernicus, On the Revolution of Celestial Bodies. 1543)
2. ஷேக்ஸ்பியர் (Shakespeare, Hamlet, 1600-1)
3. சர் ஐசக் நியூட்டன் (Sir Issac Newton, Mathematical Principles of Natural Philosophy, 1686-87)
4. காரல் மார்க்ஸ் (Karl Marx, The Communist Manifesto, 1848)
5. சிக்மண்ட் ஃபிராய்டு (Sigmund Freud, The Interpretation of Dreams, 1900)

பட்டியல் இருக்கட்டும், 'ஒரு நல்ல புத்தகம் என்ன செய்யும்? முதலில் அதற்கு விடை சொல்லுங்கள்' என்று கேட்கிறீர்களா? இதோ ஓர் உண்மை நிகழ்ச்சி:

"ஒரு நீதிபதி, ஒரு புத்தகத்தைப் படித்தார். தாம் படித்த அந்தப் புத்தகத்தைத் தம் மனைவிக்கும் தந்து படிக்கச் செய்தார். அந்தப் புத்தகத்தைப் படித்ததன் விளைவாக என்ன நடந்தது தெரியுமா? நீதிபதி தமக்குச் சொந்தமாக இருந்த பல ஏக்கர் நிலத்தையும், மாளிகை போன்ற பங்களாவையும் மகளிர் நிலையத்திற்கு எழுதிக் கொடுத்தார். அவரது துணைவியாரும் தம் சொத்து, நகைகள் ஆகிய எல்லாவற்றையும் அந்த மகளிர் நிலையத்திற்கு அள்ளித் தந்தார்.

அந்த மகளிர் நிலையம்: சென்னை சேத்துப்பட்டில் இன்றும் உள்ள 'சேவா சதன்.'

அந்த நீதிபதியின் பெயர்: சர் வெங்கட் சுப்பாராவ்.

நீதிபதியின் துணைவியார் பெயர்: லேடி ஆண்டாள்.

இருவரும் இங்ஙனம் செயல்படத் தூண்டிய புத்தகம்: 'சேவா சதன்' என்ற நாவல்.

அந்த அருமையான நாவலின் ஆசிரியர்: நாவலாசிரியர் பிரேம் சந்த்.

சென்னையிலும், இதே போல் மும்பையிலும் (பம்பாயிலும்), 'அபலை இல்லம்' உருவாவதற்குக் காரணாக அமைந்தது 'சேவா சதன்' என்ற பிரேம்சந்தின் ஒரு நாவல்தான்!

வாழ்க்கையில் வெற்றி பெற்ற - சிங்க நடைபோட்டுச் சிகரத்தில் ஏறிய - சாதனையாளர்கள் பலரும் புத்தகங்கள் படிப்பதிலே தணியாத ஆர்வமும் தளராத நாட்டமும் கொண்டவர்களாகவே எப்போதும் இருந்திருக்கிறார்கள். நெஞ்சை அள்ளும் ஒரு சில நிகழ்ச்சிகள் வருமாறு:

- புத்தகம் படிப்பதில் அறிஞர் அண்ணா கொண்டிருந்த ஆர்வம் அளவிடற்கரியது. அதனைப் புலப்படுத்தும் வகையில் சென்னை, கன்னி மாரா நூலக விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது தமிழக முதல்வர் மு.கருணாநிதி குறிப்பிட்ட ஓர் உருக்கமான நிகழ்ச்சி இது:

"புற்று நோய் சிசிச்சைக்காக அமெரிக்கா சென்று திரும்பி இருந்தார் அண்ணா. எனினும் உடல்நலக் குறைவு காரணமாக இரண்டாவது முறை அறுவைச் சிகிச்சைக்காக அவர் அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அறுவை சிகிச்சைக் கூடத்துக்குச் செல்லும் வரை அண்ணா ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டே இருந்தார். 'வாருங்கள்' என்று அழைத்த பிறகுதான் படிப்பதை நிறுத்தினார். வாழ்வே முடியப் போகிறது என்ற கடுமையான சூழ்நிலையிலும் அவர் படித்துக்கொண்டிருந்தார்.

இப்போது புத்தகம் படிப்பதே தேவையற்ற, அலுப்பான வேலை என்று கருதும் இளைஞர்களுக்கு எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சியைக் கூறுகிறேன்!"

- இறக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்திருந்தும் பகத்சிங்

படித்துக் கொண்டிருந்தார். தூக்கில் இட வேண்டும் என்று அழைப்பு வந்தபோது பகத்சிங், லெனின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துக் கொண்டிருந்தார். "ஐந்து நிமிடங்கள் பொறுங்கள், இதோ வந்துவிட்டேன்! ஒரு புரட்சியாளன் இன்னொரு புரட்சியாளனுடன் உறவாடிக் கொண்டிருக் கிறான். இன்னும் சில மணித்துளிகளில் வருகிறேன்" என்று குறிப்பிட வேண்டுமானால் பகத்சிங்கின் 'புத்தகக் காதல்' எத்தகையதாக இருந்திருக்க வேண்டும்?

● கோவையைச் சார்ந்த பேரறிஞர் நா.வரதராஜுலு நாயுடு, பன்மொழிப் புலமை படைத்த அவரை எல்லோரும் 'என்.வி.நாயுடு' என்று அன்புடன் அழைப்பார்கள். 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கியமாக அமைந்தது பேரறிஞர் என்.வி.நாயுடுவின் வாழ்க்கை. கண்கள் பழுதுபட்ட நிலையிலும், முதிர்ந்த வயதிலும், தளர்ந்த உடல்நிலையிலும், மிகுந்த ஒளிவிளக்கை நூலின் நெருக்கத்திலே குவிய வைத்து, மூக்குக்கண்ணாடி போதாமல் பூதக் கண்ணாடி வைத்துக் கடைசி மூச்சு உள்ள வரையில் படித்துக்கொண்டே இருந்தார் அவர். "வாழ்நாள் எல்லாம் படித்துச் சேர்த்த களஞ்சியம் கொள்ளை கொள்ளையாக இருக்கிறதே, போதாதா? இன்னும் இத்தனை சங்கடத்தோடு படித்து என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்ட போது, அவர் சொன்ன பதில்: "படிப்பது இல்லையென்றால் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்?" பேரறிஞர் என்.வி.நாயுடு தம் வாழ்நாள் முழுவதிலும் படித்தார், படித்தார், படித்துக்கொண்டே இருந்தார் எனலாம்.

இளைஞர்களே! ஒன்றே செய்யுங்கள் - ஒன்றும் இன்றே செய்யுங்கள் - இன்றும், இன்னே - இப்பொழுதே - செய்யுங்கள்: 'படியுங்கள், இன்னும் படியுங்கள், எப்போதும் படியுங்கள்!'

41
'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே!'

நீங்கள் பாரதியாரின் 'ஞான ரதம்' படித்திருக்கிறீர்களா? அதன் தொடக்கம் உங்களுக்கு நினைவிருக்கிறதா?

பின்மாலைப் பொழுது. ஒரு வீட்டு மேடையில் உள்ள மஞ்சத்தின் மீது ஒய்வாகப் படுத்திருப்பார் பாரதியார். 'ஆஹா! இப்படியே போய் ஒரு குளியல் போட்டுவிட்டு, அருமையான ஒரு குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு, கடற்கரை ஓரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய், வழியெல்லாம் காளிதாசனுடைய சாகுந்தலத்தையோ அல்லது ஓர் உபநிடதத்தையோ படித்து மகிழ்ந்துகொண்டே பயணம் செய்தால் எப்படி இருக்கும்?' என்று ஒருகணம் சிந்தித்துப் பார்ப்பார் பாரதியார். ஆனால், அடுத்த கணமே, தம்மிடம் குதிரை வண்டி இல்லை என்ற உண்மை அவரது நினைவுக்கு வரும். இந்நிலையில் அவர் மனத்தில் ஒரு வித்தியாசமான சிந்தனை மின்னலைப் போல் தோன்றும்.

"..அடடா! மிகுந்த செல்வம் இல்லாததனால் உலகத்தின் பலவிதமான இழிந்த இன்பங்கள் மட்டுமல்ல, உயர்ந்த இன்பங்கள் பெறுவதற்குக் கூடத் தடை ஏற்படுகிறதே!"

பணம் இல்லாததால் உலகத்தில் உள்ள பலவிதமான இழிவான இன்பங்களை அனுபவிக்க முடியவில்லை என்பது கூட முக்கியமல்ல. ஆனால், பணம் இல்லை என்ற ஒரே காரணத்தால் வாழ்க்கையில் சில நேரங்களில் உயர்ந்த இன்பங்களைக் கூட அனுபவிக்க முடியாமல் போகின்றதே? இது எவ்வளவு பெரிய சோகம்? எவ்வளவு பெரிய கொடுமை?

எனவே இந்த உலகில் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றால் - நிம்மதியாக வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்றால் - நமக்குப் போதிய அளவு பணம் வேண்டும். அதனால்தான் 'செய்க பொருளை' என்றார் வள்ளுவர்; 'பொருள்தனைப் போற்றிவாழ்' என்றார் ஔவையார்; 'பணத்தினைப் பெருக்கு' என்றார் பாரதியார். எல்லாம் சரிதான். ஆனால் ஒன்று; பணம் வருகின்ற வழி பழி தீர்ந்ததாக, தீது இல்லாததாக இருக்க வேண்டும்; நல்ல, நேர்மையான வழியில் வந்ததாக இருக்க வேண்டும்.

பெட்டியிலே (சூட் கேஸிலே) வருகின்ற பணம் - குறுக்கு வழியில் வருகின்ற பணம் - நிலைத்து நிற்காமல் வந்த வழியே சென்றுவிடும். பணத்தால் எதையும் சாதித்துவிடலாம், யாரையும் விலைக்கு வாங்கி விடலாம் என்று நினைப்பதும் தவறாகவே முடியும். இதை உணர்த்தும் அருமையான ஓர் சீனக்கதை இதோ;

ஒரு பணக்காரன் தன்னைப் பற்றி ஓர் ஏழையிடம் பிரமாதமாக அளந்து கொண்டிருந்தான்.

"இந்த ஊரிலேயே நான்தான் பெரிய பணக்காரன்!"

"அப்படியா?" என்றான் ஏழை.

"அப்படியா, என்ன அப்படியா? என்னிடம் 1000 தங்கக் கட்டிகள் இருக்கின்றன!"

"ஓஹோ!"

"அந்த 1000 தங்கக் கட்டிகளில் ஐம்பதை நான் உனக்குத் தந்தால், நீ என்னப் புகழ்ந்து பேசுவாயா?"

"ஊஹூம்... மாட்டேன்."

"ஏன்?"

"உன்னிடம் இருப்பது 1000 தங்கக் கட்டிகள். நீ எனக்குத் தருவதாகச் சொல்வது 50 தங்கக் கட்டிகள். இதற்குப் போய் நான் உன்னைப் புகழ்ந்து பேச முடியுமா?"

"சரி, என்னிடம் உள்ளதில் பாதியைக் கொடுத்துவிடுகிறேன். அப்போது நீ என்னைப் புகழ்ந்து பேசுவாய்."

"அதுதான் நடக்காது."

"ஏன்?"

"உன்னிடம் ஐந்நூறு தங்கக் கட்டிகளும், என்னிடம் ஐந்நூறு தங்கக் கட்டிகளும் இருந்தால், நாம் இருவருமே சமமானவர்களாகிவிடுகிறோம். சமமான ஒருவனை நான் எப்படிப் புகழ்ந்து பேசுவது? சொல்!"

"நான் வைத்திருக்கிற எல்லாவற்றையும் உனக்கே தானமளித்துவிடு கிறேன். இப்போது நீ கட்டாயம் என்னைப் புகழ்ந்தே ஆகவேண்டும்."

"உளறாதே! நீ வைத்திருக்கிற 1000 தங்கக் கட்டிகளும் எனக்குச்

சொந்தமாகிவிட்டால் நான் பணக்காரனாகிவிடுவேன்; நீ ஏழையாகி விடுவாய். பணக்காரனான நான், ஏழையான உன்னைப் பிறகு எதற்காகப் புகழ வேண்டும்? நீயல்லவா என்னைப் புகழ வேண்டியிருக்கும்?"

பணக்காரனுக்கு வாயடைத்துப் போயிற்று.

ஆயிரம்தான் சொல்லுங்கள். 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்ற குமரகுருபரரின் வாக்கிற்கு ஈடு இணை அன்றும் இல்லை; இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் இல்லை. 'அட்சர லட்சம்' பெறத் தகுந்த அற்புதமான அனுபவ மொழியல்லவா அது?

42
'வழியா இல்லை பூமியில்?'

சில மாதங்களுக்கு முன்பு மைசூரில் நடந்த நெஞ்சைப் பிழியும் ஒரு நிகழ்ச்சி: 'கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் முதுகு வலி காரணமாக இனிமேல் கிரிக்கெட் விளையாட முடியாது' என்று பத்திரிகைகளில் வெளியான செய்தியைப் படித்து மனம் நொந்த தீபா, அன்று இரவு தனது உடம்பில் மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துக்கொண்டு தற்கொலை செய்துகொண்டார். துளியும் உண்மை இல்லாத வதந்தியை நம்பி கல்லூரி மாணவி தீபா தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டார். அதுவும் 18 வயதில்! ஆறில் சாகலாம், அறியாத வயது! அறுபதில் சாகலாம், அனுபவித்து முடிந்த வயது. பதினெட்டில் சாவது என்றால்? எதையும் அனுபவித்து அறியாத - எவ்வளவோ அனுபவிக்க வேண்டிய - வயது அல்லவா? இத்தனைக்கும் 'கம்ப்யூட்டர்' படிப்புப் படித்து வந்த மாணவி அவர்! ஒரு தீபா மட்டும்தானா? ஒரு மாதத்துப் பத்திரிகைச் செய்திகளை அலசிப் பாருங்கள்! எத்தனை தீபாக்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள், தங்கள் பிரச்சினைக்குத் தீர்வாகத் தற்கொலை முடிவை நாடியிருக்கிறார்கள் என்று தெரியவரும்.

பள்ளியிலோ, கல்லூரியிலோ படிக்கும் மாணவன் அல்லது மாணவி தேர்வில் தோல்வி காரணமாக - அல்லது மதிப்பெண் குறைந்து போனதற்காக - தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

காதலர்கள் தங்கள் காதலில் ஏற்பட்ட தோல்வி காரணமாகத் தற்கொலை முடிவைத் தேடிக்கொள்கிறார்கள்.

திருமணம் ஆனவர்கள் குடும்பப் பிரச்சினை காரணமாக - கடன் தொல்லை காரணமாக - வியாபாரத்தில் ஏற்படும் இழப்பு காரணமாக - தீராத வயிற்றுவலி போன்ற உடல் நோய் காரணமாக - இன்னும் எத்தனை எத்தனையோ தனிப்பட்ட காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

அண்மையில் காவல் துறையில் பணிபுரியும் ஓர் இளைஞனின் மனைவி - திருமணமாகி ஒரு வருடமே ஆனவர் - ஏழு மாதக் கர்ப்பிணி - உடலில் மண்ணெண்ணை ஊற்றித் தீயிட்டுக்கொண்டு தற்கொலை

செய்துகொண்டார். காரணம் என்ன தெரியுமா? கணவர் தொடர்ந்து இரவுப் பணிக்குச் செல்வதால் வருத்தம் அடைந்தாராம். இதனால் மனம் உடைந்தாராம். முடிவு? தற்கொலை!

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். யாருக்குத் துன்பம் இல்லை? யாருக்குத் தொல்லை இல்லை? யாருக்குத் தோல்வி இல்லை? யாருக்குப் பிரச்சினை இல்லை? யாருக்கு நெருக்கடி இல்லை? துன்பப்படுகிறவர்கள் எல்லாம் - தோல்வி அடைந்தவர்கள் எல்லாம் - பிரச்சினையில் சிக்கிக் கொண்டவர்கள் எல்லாம் - தற்கொலை செய்து கொள்வதுதான் ஒரே தீர்வு என்ற முடிவுக்கு வந்தால் அப்புறம் உலகத்தில் யார்தான் மிச்சம் இருப்பார்கள்?

பிரச்சினையை எதிர்கொண்டு வெற்றிபெறும் துணிச்சல் இல்லாமல், பிரச்சினைக்கு ஒரே தீர்வு தற்கொலைதான் என்று நினைப்பவர்களுக்குக் கவிஞர் கண்ணதாசன் காட்டும் நல்வழி - நம்பிக்கை வழி - இதோ:

"வாழ நினைத்தால் வாழலாம்
வழியா இல்லை பூமியில்?
ஆழக்கடலும் சோலையாகும்
ஆசையிருந்தால் நீந்திவா!
பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும்
பார்த்து நடந்தால் பயணம் தொடரும்
பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும்
கதவு திறந்தால் காட்சி கிடைக்கும்
காட்சி கிடைத்தால் கவலை தீரும்
கவலை தீர்ந்தால் வாழலாம்!"

வேண்டுமானால் தற்கொலை தற்கொலை செய்துகொள்ளட்டும். நாம் மூச்சிருக்கும் வரை உயிர் வாழ்வோம்! மானுடத்தை நம் தோளில் ஏந்தி ஓர் அங்குலமாவது உயர்த்தப் பாடுபடுவோம்! பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை; இடைப்பட்ட வாழ்க்கை மட்டுமே நம் வசத்தில் உள்ளது; நமக்குச் சொந்தமானது. அந்த வாழ்க்கையை அர்த்தமும் அழகும் உள்ளதாக ஆக்குவோம்!

43
சிக்கெனப் பிடியுங்கள் சீன இலக்கியத்தை!

அண்மையில் மூதறிஞர் வெ.சாமிநாத சர்மாவின் 'சீனாவின் வரலாறு' என்ற அற்புதமான நூலைப் படித்தேன். அதில் அவர் சீனர்களைப் பற்றியும், சீன இலக்கியம் பற்றியும் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

"சீனர்கள், எப்பொழுதுமே திறமையைப் போற்றுகிறவர்கள்; அறிவுக்கு மதிப்புக் கொடுக்கிறவர்கள்; இலக்கியத்தில் இன்பம் நுகர்கிறவர்கள்.

சீன இலக்கியப் பரம்பரை வளமை மிக்கது மட்டுமல்ல; மிகப் பழமையானது; அகன்ற பரப்பை உடையது. அது காணாத,தொடாத துறையே இல்லை... எந்த ஒரு துறையையும், அதன் அடிப்படைக்குச் சென்று கண்டும் தொட்டும் இருக்கிறது."

சீனாவைப் பற்றிய எண்பதுக்கு மேற்பட்ட ஆங்கில நூல்களைப் படித்து, அதன் சாரத்தை - சாற்றை - அருமையாகத் தம் நூலில் பிழிந்து தந்துள்ளார் மூதறிஞர் சாமிநாத சர்மா. சீனத்துச் சான்றோர் கன்பூசியஸின் சிந்தனையாயினும் சரி - சீனச் சிரிப்பாயினும் சரி - சீனப் பழமொழி யாயினும் சரி - சீனக் கதையாயினும் சரி - அதிலே அற்புதமான வாழ்க்கைத் தரிசனம் அடங்கி இருக்கும்; ஆழமான அனுபவத்தின் முத்திரை பொதிந்து இருக்கும். அவற்றுள் ஒரு சிலவற்றையே இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.

● கன்பூசியஸ் சீனாவின் சிறப்பு மிக்க சிந்தனையாளர் ஆவார். அவரது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல் 'முதுமொழிகள்'. ஒருமுறை சிலர் அவரிடம், "இறப்பு என்பது யாது? மரணத்தின் பின் மனிதனுடைய நிலை யாது?" என்ற கேள்விகளைக் கேட்டனர். உடனே, அவர் சிறிதும் தயக்கம் இன்றி, "வாழ்க்கையைப் பற்றியே ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை! இந்நிலையில் மரணத்தைப் பற்றி நீங்கள் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்?" என்று அவர்களிடம் திருப்பிக் கேட்டார். உள்ளத்தை உலுக்கும் என்ன அருமையான கேள்வி பாருங்கள்.

● மேடைகளிலே நான் அடிக்கடி பயன்படுத்தும் சீனச் சிரிப்பு இது:

"பரம ஏழை ஒருவன், தெய்வ வரம் பெற்றிருந்த தனது பழைய

நண்பனைச் சந்தித்தான். ஏழை நண்பனின் தரித்திரத்தைக் கேள்விப்பட்ட அவன், சாலை ஓரத்தில் இருந்த செங்கல்லை நோக்கித் தன் விரலை நீட்டினான். உடனே செங்கல் தங்கப் பாளமாக மாறியது. அதை எடுத்து ஏழைக்குக் கொடுத்தான். ஏழைக்கோ திருப்தி ஏற்படவில்லை. தெய்வ வரம் பெற்ற நண்பனோ பிறகு தங்கத்தினால் ஆன ஒரு சிங்கத்தைக் கொடுத்தான். அப்போதும் ஏழைக்குத் திருப்தி ஏற்படவில்லை.

'வேறு என்னதான் வேண்டும்?' என்று கேட்டான்.

'உன் விரல்' என்று பதில் வந்தது."

'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்று நம் எல்லோருடைய உதடுகளும் ஒப்புக்குத்தான் உச்சரிக்கின்றன.

ஆனால் நம் அனைவரது மனங்களோ வேண்டும், வேண்டும், இன்னும் வேண்டும் என்ற பல்லவியையே மீண்டும் மீண்டும் இடைவிடாமல் பாடிக்கொண்டிருக்கின்றன. இதுதான் வாழ்க்கை யதார்த்தம். இந்த யதார்த்தத்தையே மேலே உள்ள சீனச் சிரிப்பு அழுத்தமான குரலில் - ஆனால், அழகான முறையில் - எடுத்துரைக்கின்றது.

● இனி 'நெஞ்சை அள்ளும் சிலம்பு' என்பது போல், படித்தவுடன் நம் சிந்தையை அள்ளும் சில சீனப் பழமொழிகளைப் பார்ப்போமா?

1. வாய்ப்புகளை உணர்வதே அறிவுக் கூர்மையாகும்.
2. உனக்குப் பல்வலி இருந்தால்தான், மற்றொருவனின் பல் வலியை உணர முடியும்.
3. புதிய ஆடைகளே சிறந்தவை; பழைய நண்பர்களே சிறந்தவர்கள்.
4. மனிதன் நூறாண்டுகள் வாழ்வதில்லை. ஆனால் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதைப் போல பலவற்றை எண்ணிக் கலங்குகிறான்.
5. துன்பம் இல்லாவிட்டால் யாரும் புத்தராக மாட்டார்கள்.
6. ஒரு குடும்பத்தைத் திறமையாக நடத்துவது கடினம்; ஆனால் ஒரு நாட்டை ஆள்வதோ சுலபம்.
7. மனத்திட்பம் உள்ள மனிதனைக் கண்டு வேலை அஞ்சும்.

ஒருமுறைக்கு இருமுறை இந்தச் சீனப் பழமொழிகளை மனம் ஒன்றிய ஈடுபாட்டுடன் படித்துப் பாருங்கள். பிறகு அமைதியான சூழலில்,

பொறுமையாக இவை உணர்த்தும் பொருள் குறித்து, உங்கள் மனத்திலே அசை போட்டுப் பாருங்கள். எவ்வளவு ஆழமான வாழ்வியல் உண்மைகளை இந்தப் பழமொழிகள் எவ்வளவு எளிமையான முறையில் உணர்த்தி இருக்கின்றன என்பது உங்களுக்குப் படிப்படியாக விளங்கும்.

இனிமேல் நூலகத்திலோ, புதிய அல்லது பழைய புத்தகக் கடையிலோ சீனத்து இலக்கியம் என்று எது தென்பட்டாலும் நீங்கள் அதைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ளுங்கள்! பிறகு, அது உங்களைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளும். இதில் 'யார்கொலோ சதுரர்?' என்று மாணிக்கவாசகர் இறைவனிடம் கேட்டது போல் கேட்க வேண்டியிருக்கும்!

44
‘பெண்மைதான் தெய்விகமாம் காட்சியடா!’

‘கதவு பேசுமா?’ என்ற தலைப்பில் பாவேந்தர் பாரதிதாசன் படைத்திருக்கும் ஒரு காதல் கவிதை இது:

“காதல் துரத்தக் கடிதுவந்த வேல்முருகன்,
ஏதும் உரையாமல் இருவிரலை வீட்டுத்
தெருக்கதவில் ஊன்றினான்; ‘திறந்தேன்’ என்றோர் சொல்
வரக்கேட்டான், ‘ஆஆ மரக்கதவும் பேசுமா?
என்ன புதுமை!’ என ஏங்க, மறுநொடியில்
சின்னக் கதவு திறந்த ஒலியோடு
தன்னருமைக் காதலியின் தாவுமலர்க் கைநுகர்ந்தான்!
புன்முறுவல் கண்டு உள்ளம் பூரித்தான் - ‘என்னேடி
தட்டுமுன்பு தாழ் திறந்து விட்டாயே?’ என்று உரைத்தான்.
விட்டுப் பிரியாதார் மேவும் ஒரு பெண்நான்
பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை தெருவில்
கருமரத்தாற் செய்த கதவு”

இந்தக் கவிதையை முதன்முறையாகப் படித்தபோது, என்னால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை; இப்படி எல்லாம் நடக்குமா, கற்பனைக்கும் ஓர் அளவு வேண்டாமா, காதல் கவிதை என்றால் கற்பனை என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் அள்ளிவிடலாமா என்றெல்லாம் பல வகையான சிந்தனைகள் என் மனத்துள் எழுந்தன. ஆனால், 11.7.1991 ‘குமுதம்’ இதழில் தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் வெளியிட்டிருந்த அவரது வாழ்க்கை அனுபவம் ஒன்றைப் படித்தபோது என் கருத்தை மாற்றிக்கொண்டேன்; பாரதிதாசன் என் மதிப்பில் இப்போது பல மடங்கு உயர்ந்தார். சிலம்பொலி செல்லப்பனார் ‘குமுதம்’ இதழில் வெளியிட்டிருந்த அரிதினும் அரிதான அனுபவ மொழிகள் இதோ:

“நான் என் மனைவியுடன் 33 வருடங்கள் வாழ்ந்தவன். நான்கு வருடங்களுக்கு முன் தான் அவள் மறைந்தாள். அவள் இருந்த வரை எனது வேட்டி சட்டைகளைக் கூட நான் கடைக்குப் போய் வாங்கியது

கிடையாது. அவளே பார்த்துப் பார்த்து வேட்டிகளும், நான் வழக்கமாய் அணியும் வெள்ளை அல்லது வெளிர் மஞ்சள் சட்டைத் துணிகளும் வாங்கி வருவாள். வீட்டுக்கு வேண்டிய பொருட்கள் எதையும் எப்போதும் நான் வாங்கி வந்ததே கிடையாது. உண்மையில் அவளுடைய குழந்தை போல் நான் வளர்ந்தேன் என்றால் அது மிகையாகாது. பொதுவாழ்வில் நான் ஏதோ கொஞ்சமாவது தமிழ்த் தொண்டு செய்திருக்கிறேன் என்றால் அதற்கு அவளுடைய ஒத்துழைப்புத்தான் காரணம்.

நான் வீட்டில் இருக்கும் நாளில் எல்லாம் அவள் சாப்பிட்ட உடனேயே தூங்கப் போய் விடுவாள். அயர்ந்து தூங்குவாள். யாராவது வந்து கூப்பிட்டால் கூடக் காதில் விழாது. நான்தான் போய்க் கதவைத் திறக்க வேண்டும்.

ஆனால், நான் வெளியே இலக்கியக் கூட்டங்களில் பேசிவிட்டுத் திரும்பும்போது, நடுராத்திரியோ, இரவு இரண்டு மணிக்கோ, மூன்று மணிக்கோ கூடத் திரும்பி வருவது உண்டு. அப்போதெல்லாம் தட்டாத போதே கதவைத் திறந்துவிடுவாள். 'அது எப்படி?' என்று நான் வியப்புடன் கேட்டால், 'உங்கள் காலடிச் சத்தம் கேட்டது, கதவைத் திறந்தேன்' என்பாள். 'தெருவில் எத்தனையோ பேர் போகிறார்கள், வருகிறார்கள். வேறு யாராவதாகக் கூட இருக்கலாமே?' என்று கேட்பேன்.

'எத்தனை பேர் போனாலும், உங்கள் காலடிச் சத்தம் எனக்குத் தனியாகத் தெரியுமே!' என்பாள்.''

உண்மையில் 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்பது இதுதான்! ஆம்,

"விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதமடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்விகமாம் காட்சியடா!"

என்று பாட்டுக்கொரு புலவர் பாரதியார் பெண்மையை வியந்து போற்றியது நூற்றுக்கு நூறு உண்மைதான், வெறும் புகழ்ச்சி இல்லை!

45

'மேடையில் முழங்கு அறிஞர் அண்ணா போல்!'

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வந்தவர்' கவியரசர் பாரதியார். அதே போல், 'பேச்சுத் திறந்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வந்தவர்' அறிஞர் அண்ணா. ஆம், பொது மேடை, சட்ட மன்றம், தனிப்பட்ட உரையாடல் என எங்கே பேசினாலும் அண்ணாவின் பேச்சு ஒவ்வொன்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் சொற்களிலே சொல்லுவது என்றால், 'செவி நுகர் கனி'தான்! இதோ, அறிஞர் அண்ணாவின் நாவன்மைக்குக் கட்டியம் கூறும் ஒரு சில உதாரணங்கள்:

● இன்றைய சூழ்நிலையில் விலைவாசி ஏறுவதும் இறங்குவதும் இயல்பு. இதே போல் விலைவாசி ஏறும்போது ஆளுங்கட்சியைக் குறை கூறுவது என்பதும் அரசியல் உலகில் இயல்பினும் இயல்பே.

அறிஞர் அண்ணா முதல்வர் ஆன பிறகு ஒருமுறை சட்ட மன்றத்தில் புளியின் விலை பற்றிக் காரசாரமாக விவாதம் ஒன்று நடந்தது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த விநாயகம், "எங்கள் ஆட்சியில் புளியின் விலை குறைந்திருந்ததே, அது யாருடைய சாதனை?" என்று ஆவேசமாகக் கேட்டார்.

உடனே அண்ணா அமைதியாக, "அது புளியமரத்தின் சாதனை" எனக் கூற, கேள்வி கேட்ட விநாயகம் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சிரித்துவிட்டனர்.

● ஒருமுறை நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது அறிஞர் அண்ணா கூறியது:

"எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்புக் கொண்டவர்கள். ஒரு தடவை நிதி அமைச்சர் பீடத்தில் உட்கார வைத்துவிட்டால் எப்பொழுதும் கனவிலும் நினைவிலும் அவருக்கு 'வரி' என்ற நினைவுதான் இருக்கும். ஒரு பத்திரிகையில் வெளிவந்த நகைச்சுவைத் துணுக்கு: மனைவி கட்டிக் கொண்டிருக்கும் சாதாரணமான சேலையைப் பார்த்து நிதி அமைச்சர், 'இதில் வரி இல்லையா?' என்று கேட்டாராம். அங்கே கூட நிதி அமைச்சருக்கு 'வரி'யின் கவனம் போகவில்லை பாருங்கள்!"

● தமிழக முதல்வர் கலைஞர் ஒரு முறை பேச்சுவாக்கில் கவிஞர்

வைரமுத்துவிடம் அறிஞர் அண்ணாவைப் பற்றிக் கூறிய ஒரு சுவையான தகவல்:

அறிஞர் அண்ணா பேசிய ஒரு கூட்டத்தில் சில முரட்டு இளைஞர்கள் முன்வந்து, ''ஆணையிடுங்கள் அண்ணா, எங்கள் தலையையே கொடுக்கிறோம்!" என்றார்களாம்.

"தம்பிகளே! உங்கள் தலைகள் வேண்டாம்; இதயங்கள் போதும்" என்றாராம் அண்ணா.

காரில் வரும்போது கலைஞர் கேட்டாராம்: "இதயம் கொடுங்கள்; தலை வேண்டாம் என்று ஏன் அண்ணா சொன்னீர்கள்?"

"ஆமாம்! அவர்கள் தலையில் என்ன இருக்கிறது? அதை வைத்து என்ன செய்வது?''என்று அண்ணா இயல்பாகச் சிரித்துக்கொண்டே சொன்னாராம்.

அண்ணா இப்படிச் சொன்னதைக் கேட்டு கலைஞரும், உடன் வந்தவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.

● ஒருமுறை தேர்தல் நேரத்தில் அறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்க மக்கள் வெள்ளம் நடுங்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் இரவில் நெடுநேரம் காத்திருந்தது. பல தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசிவிட்டுக் களைத்து வந்தாலும், மேடையிலே இன்முகத்துடன் தோன்றி, கூடி இருந்த மக்களை நோக்கி,

"மாதமோ சித்திரை

மணியோ பத்தரை - உங்களைத்

தழுவுவதோ நித்திரை - மறக்காது

இடுவீர் எமக்கு முத்திரை"

என்று அறிஞர் அண்ணா நறுக்குத் தெறித்தாற் போல் நான்கே வரிகளில் நயமாக ஓட்டுக் கேட்டபோது, அங்கே நீண்ட நேரம் விண்ணதிரும் வண்ணம் கரவொலி எழுந்தது.

அறிஞர் அண்ணாவின் நயத்தகு நாவன்மையால் இவை போல் நமக்குக் கிடைத்திருக்கும் இன்பங்கள் ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல?

46
தாயின் மடியைப் போன்ற பழமொழிகள்

உலகப் பழமொழிகளிலே எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அவ்வப் போது நேரம் கிடைக்கும் போதெல்லாம் பழமொழிகளைப் புரட்டுவேன்; என் உள்ளத்தில் ஊக்கமும் உற்சாகமும் ஓடோடி வந்து இடம்பிடித்துக் கொள்ளும். அதே போல் துன்பமோ தோல்வியோ என்னைத் தாக்கும் போதும் உலகப் பழமொழிகளிடம் அடைக்கலம் புகுவேன்; அவை எனக்குத் தாயின் மடியில் தலை வைத்துப் படுத்திருப்பது போன்ற இனிமையான ஆறுதலையும் இதமான சுகத்தையும் தரும். பழமொழிகள் அறிவுக் களஞ்சியங்கள்: அனுபவத்தின் எதிரொலிகள்; உண்மையின் குழந்தைகள்; கருத்துப் பெட்டகங்கள்; சிந்தனையின் திறவுகோல்கள்; மக்களின் குரல்கள். எனக்கு மிகவும் பிடித்த பத்துப் பழமொழிகளை இங்கே உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.

● வந்தான் வாழ்ந்தான் போனான்' என்று சொல்லும் அளவில் இந்த உலகத்திற்கு வந்து, ஏதோ பெயருக்கு வாழ்ந்து, ஒருநாள் தனது மூச்சுத் தொடருக்கு முற்றுப்புள்ளி வைப்பவன் மனிதன் அல்லன். பின் உயர்ந்த மனிதன் - முழு மனிதன் - என்பவன் எப்படி எல்லாம் இருப்பான், அவன் என்ன எல்லாம் செய்வான் என்று கேட்கிறீர்களா? இதோ உங்களுக்குப் பதில் சொல்ல ஓடி வருகின்றது ஓர் இத்தாலியப் பழமொழி.

"ஒரு மனிதன் வாழ்ந்தான் என்பதற்கு, அவன் வீடாவது கட்டியிருக்க வேண்டும் அல்லது ஒரு மகனையாவது பெற்றிருக்க வேண்டும் அல்லது ஒரு நூலாவது எழுதியிருக்க வேண்டும்."

● மனித முயற்சிக்கு மணிமகுடம் சூட்டும் சீனப் பழமொழி இது:

"சோகம் என்ற பறவைகள் உன் தலைக்கு மேலே பறப்பதை நீ தடுக்க முடியாது. ஆனால் அவைகள் உன் தலையிலே கூடு கட்டி வசிப்பதை நீ தடுக்கலாம்". முடிவில் 'முயன்றால்' என்ற சொல்லைச் சேர்த்து மீண்டும் இந்தப் பழமொழியை ஒருமுறை படித்துப் பாருங்கள்.

● 'ஒரு சமுதாயத்தின் மனப்போக்கைப் பழமொழிகளைவிட வேறு எதுவும் எடுத்துக்காட்டுவதில்லை' என்னும் இங்கிலாந்துப் பழமொழிக்கு ஒரு நல்ல உதாரணம் வேண்டுமா? 'இதோ, ஜெர்மனி நாட்டுப் பழமொழி, இல்லை 'பணமொழி':

"இறைவன் வானத்தை ஆள்கிறான், பணம் உலகத்தை ஆள்கின்றது."

● பழமொழியை எதுவும் வெல்ல முடியாது; எவரும் மறுக்க முடியாது. எங்கே மறுத்துத்தான் பாருங்களேன் இந்த பிரான்ஸ் நாட்டுப் பழமொழியை:

"எந்தக் கண்ணாடியும் ஒரு பெண் அழகி இல்லை என்று சொல்லியதில்லை."

● 'நினைவில் உள்ள நல்ல பழமொழி பெட்டியில் உள்ள தங்க நாணயம் போன்றது' என்பது ஸ்வீடன் நாட்டுப் பழமொழி. இதோ உங்களுக்கு ஒரு தங்க நாணயப் பரிசு; சும்மா சொல்லக்கூடாது, நீங்கள் அதிர்ஷ்டசாலி தான்;

"எதுவும் உலகில் நடைபெறும் - செல்வம் மிகுந்தவனும் ஓர் ஏழையின் வீட்டை நாடிச் சென்று தட்ட நேரலாம்."

● 'வானம் இடிந்து வீழ்வதில்லை, பழமொழியும் பொய்ப்பதில்லை' என்னும் கூற்றை மெய்ப்பிக்கும் ஒரு போலந்துப் பழமொழி இதோ:

"நீ இனிமையாய் இருந்தால், உன்னை விழுங்கிவிடுவார்கள்; கசப்பாய் இருந்தால், உன்னை வெளியே துப்பிவிடுவார்கள்!"

● 'உணவுக்கு உப்பு எப்படியோ, அப்படிப் பேச்சுக்குப் பழமொழி' என்பார்கள். உங்கள் பேச்சுக்குப் பயன்படும் ஒரு ஜப்பான் பழமொழி வருமாறு:

"மனிதன் வெற்றியிலே கற்பது சொற்பம்; தோல்வியிலே கற்பது அதிகம்."

● 'அனுபவத்தின் குழந்தைகள் பழமொழிகள்' என்பது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஓர் உதாரணம் இதோ:

"வியர்வையைச் சிந்து, நீ நன்கு வாழ்வாய்" (ஆப்பிரிக்கப் பழமொழி)

● நல்ல பழமொழி எந்த நேரமும் பயன் அளிக்குமாம். பின்வரும் செர்பியா பழமொழியை இந்த ரகத்தில் சேர்க்கலாம் தானே?

"ஒரு பெண்ணைப் பற்றி அவதூறு சொல்வதைப் பார்க்கினும் ஓர் ஆலயத்தை எரிப்பது குறைந்த பாவம்."

● நம்புங்கள். பழமொழியில் உமி கிடையாது. நம்பாவிட்டால், பிடித்துக் கொள்ளுங்கள் இந்த இந்தியப் பழமொழியை:

“இனிப்புக்குத் தேன், அன்புக்கு மனைவி!”

பழமொழிகளைப் பற்றிய இன்றைய சிந்தனையை ஒரு பழமொழியோடு முடிக்கட்டுமா?

‘‘பழமொழிகள் வண்ணத்துப் பூச்சிகள்; சிலவற்றைப் பிடித்துக் கொள்கிறோம், சில பறந்தோடி விடுகின்றன” (ஜெர்மனி).

எங்கே மனம் திறந்து சொல்லுங்கள், இதுவரை படித்தவற்றுள் நீங்கள் எத்தனைப் பழமொழிகளைப் பிடித்துக்கொண்டீர்கள்?

47
பொறுமையுடன் நடந்து பாருங்கள்!

வாழ்க்கையில் தவறு செய்யும் ஒருவரைத் தண்டிப்பதால் மட்டும் திருத்த முடியாது. கண்டிப்பதாலும் அவரது உள்ளத்தை அவ்வளவாக மாற்ற முடியாது. அறிவுரை, உபதேசம் போன்றவற்றாலும் உடனடியாக எந்த விளைவும் ஏற்பட்டுவிடாது. பின் என்னதான் செய்ய வேண்டும் என்கிறீர்களா? எப்படித்தான் தவறு செய்வதைத் திருத்துவது என்று கேட்கிறீர்களா?

இதோ, வள்ளுவர் பெருமான் ஏதோ கூறுகிறார், காது கொடுத்துக் கேட்டுப் பார்ப்போமா?

'ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.'

"தண்டித்தவர்க்கு அப்போதைய மகிழ்ச்சியே; பொறுத்தவர்க்கு உலகம் உள்ளளவும் புகழ்'' என்பது மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார் இத் திருக்குறளுக்கு எழுதும் தெளிவுரை.

ஒறுத்தல் (தண்டித்தல்) நெறி, பொறுத்தல் நெறி என்னும் இரண்டனுள் ஒருத்தல் நெறியைப் பின்பற்றுவோர்க்கு ஒருநாள் இன்பம் - அப்போதைய மகிழ்ச்சி - வேண்டுமானால் கிடைக்கலாம்; ஆனால், பொறுத்தல் நெறியைப் பின்பற்றுவோர்க்கோ வாழ்க்கையில் நிலைத்த புகழ் கிடைக்கும். அது உலகம் உள்ள வரையில் நிலைத்து நிற்கும்.

இதை உணர்த்தும் ஒரு ஜென் கதை வருமாறு:

சிச்சிரி கோஜு-ஒன் என்று ஒரு குரு இருந்தார். ஒருநாள் இரவு நேரத்தில் அவர் ஏதோ ஞான நூல் ஒன்றைத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தார்.

அந்த வேளை பார்த்து, ஒரு திருடன் உள்ளே நுழைந்தான். அவன் கையில் ஒரு கூர்மையான கத்தி இருந்தது.

"மரியாதையாகப் பணம் தந்து விடுகிறாயா அல்லது ஒரே குத்தாகக் குத்தட்டுமா?" என்று குருவிடம் கேட்டான்.

குரு, "என்னைத் தொந்தரவு செய்யாதே, அப்பா. அதோ அந்த மேசையில் பணம் இருக்கிறது, எடுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுப் படிப்பதில் ஆழ்ந்துவிட்டார்!

திருடன் மேசையை நோக்கி நகர்ந்தான்.

அப்போது குரு, "எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய் விடாதே. கொஞ்சம் மிச்சம் இருக்கட்டும். நாளைக்கு வரி கட்ட வேண்டும்" என்றார் தலை நிமிராமலேயே!

திருடனுக்கு குருவின் நிதானம், பதற்றமின்மை, அமைதி, பொறுமை ஆகிய பண்புகள் ஆச்சரியத்தைத் தந்தன. அவர் சொன்னபடியே கொஞ்சம் பணத்தை விட்டு விட்டு, பெரும்பகுதிப் பணத்தை எடுத்துக் கொண்டு திரும்பினான் திருடன். அவன் கதவை நோக்கிச் செல்லும் போது, "எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும் அப்பா. அதுதானே நாகரிகம்?" என்றார் குரு.

திருடன் திகைப்புடன் குருவைத் திரும்பிப் பார்த்தான். அவரிடம் நன்றி சொன்னான். எந்தப் பயமும் பதற்றமும் இல்லாமல் அமைதியாக இருளில் சென்று மறைந்தான்.

சில நாட்களில் அந்தத் திருடன் அகப்பட்டுக் கொண்டான். குருவின் வீட்டில் திருடியதையும் மற்ற திருட்டுகளோடு சேர்த்துச் சொன்னான்.

காவல் துறையினர் சாட்சி சொல்லக் குருவை அழைத்தனர்.

"என்னைப் பொறுத்த வரையில் இவன் திருடன் இல்லை. சிரமமாக இருந்ததால், என்னிடம் வந்தான், பணம் கொடுத்தேன், வாங்கிக்கொண்டு நன்றி கூடச் சொல்லி வீட்டுச் சென்றான்... என்ன, நன்றி சொன்னாய் அல்லவா?" என்று கேட்டார் குரு.

"ஆமாம் சுவாமி, சொன்னேன்" என்று வியப்புடன் சொன்னான் திருடன்.

சிறைவாசம் முடிந்ததும் நேராகக் குருவின் வீட்டிற்கு வந்தான் அந்தத் திருடன். பிறகு அங்கேயே தங்கி அவரது சீடன் ஆனான் அவன்.

இந்த ஜென் கதையில் வரும் குருவைப் போல் நீங்களும் நிதானமாக, அமைதியாக, பொறுமையாக, பதற்றம் இல்லாமல் உங்கல் குடும்ப வாழ்க்கையில் - குழந்தை வளர்ப்பில் - நண்பர்கள் வட்டத்தில் - நடந்து பாருங்கள். வெற்றி மீது வெற்றி வந்து உங்களைச் சேரும். அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் உங்களது பொறுமையையே சேரும்!

48

சிக்கனம் வேறு, கருமித்தனம் வேறு!

ஒருசமயம் நபிகள் நாயகத்திடம் ஒரு பெரியவர் வந்து, "எங்கள் ஊரில் பள்ளிவாசல் இல்லை. அதைக் கட்டியாக வேண்டும். அதற்குப் பணம் தேவை. என்ன செய்யலாம்?" என்று கேட்டார். அதற்கு, நபிகள் நாயகம், "பக்கத்து ஊரில் உள்ள ஒரு செல்வரின் பெயரைச் சொல்லி, அவரிடம் சென்று கேளுங்கள் கொடுப்பார்" என்றார். பெரியவர் உடனே அவ்வூருக்குச் சென்று பணக்காரரைப் பார்க்கப் போனார். அப்பொழுது பணக்காரர் தம் வேலையாளைத் தூணில் கட்டி வைத்துத் தம் கையை மடக்கி அவன் முகத்தில் குத்திக் கொண்டிருந்தார். பெரியவர் பக்கத்தில் உள்ளவர்களிடம் "ஏன் இப்படி அவனைக் குத்துகிறார்?" என்று கேட்டார். "செல்வர் வேலையாளைப் பருப்பு வாங்கி வரச் சொன்னார். வழியில் பத்து பருப்புச் சிந்திப் போயிற்று. அதற்காக அவனைப் பத்துக் குத்துக் குத்திக் கொண்டிருக்கிறார்" என்றார்கள். அதைக் கேட்டதும் பெரியவர் பயந்து ஓட்டம் பிடித்து நபிகள் நாயகத்திடம் திரும்பி வந்துவிட்டார்.

நபிகள் நாயகம் "செல்வர் என்ன கொடுத்தார்?" என்று பெரியவரைப் பார்த்துக் கேட்டார். அவர் வேலையாளுக்குக் கொடுத்த குத்துக்களைக் கூறினார். நபிகள் நாயகம், "மறுபடியும் நீர் அவரிடம் சென்று கேளும்" என்று கட்டளை இட்டார். மறுபடியும் பெரியவர் செல்வரிடம் சென்றார்.

அப்பொழுது அச்செல்வர் தம் மற்றொரு வேலையாளை மரத்தில் கட்டி வைத்துச் சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தார். பெரியவர் அங்கு இருந்தவர்களிடம் "ஏன் இப்படி அடிக்கிறார்?" என்றுகேட்டார். "இந்த வேலையாள் எண்ணெய் வாங்கி வரும் போது வழியில் பத்துச் சொட்டு எண்ணெய் சிந்திப் போயிற்று, அதற்காகச் சவுக்கால் பத்து அடிகள் அடிக்கிறார்" என்று சொன்னார்கள். பெரியவர் மிகவும் பயந்து நடுங்கி, இக்கருமியிடம் பணம் கேட்பதை விடப் பள்ளிவாசல் கட்டுவதையே நிறுத்திவிடலாம் என்று எண்ணி நபிகள் நாயகத்திடம் ஓடிவந்துவிட்டார்.

நபிகள் நாயகம் "செல்வர் என்ன கொடுத்தார்?" என்று பெரியவரிடம் மீண்டும் கேட்டார். அவர் சவுக்கடி கொடுத்த செய்தியைக் கூறி "அவரிடம் பணம் கேட்க என் மனம் துணியவில்லை" என்று கூறினார்.

"போய்க் கேளும்" என மறுபடியும் உத்தரவு வந்தது. பெரியவர் மறுபடியும் செல்வரிடம் சென்றார்.

நல்ல வேளையாக எதுவும் அங்கு அப்பொழுது நடைபெறவில்லை. பெரியவர் துணிந்து செல்வரிடம் சென்று தமது நோக்கத்தைத் தெரிவித்தார். செல்வர், "எவ்வளவு ரூபாயில் பள்ளிவாசல் கட்டப் போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்குப் பெரியவர், "அதைக் கட்டி முடிப்பதற்குப் பத்தாயிரம் ரூபாய் ஆகும். நீங்கள் ஐந்தாயிரம் கொடுத்தால் வேறு பலரிடம் ஐயாயிரம் வாங்கி விரைவில் கட்டி முடிக்க உதவியாக இருக்கும்" என்று கேட்டுக்கொண்டார். அதற்குச் செல்வர், "இவ்வளவு காலம் உங்கள் ஊரில் பள்ளிவாசல் இல்லாமல் இருந்ததே தவறு. இன்னும் பலரிடம் சென்று காலம் தாழ்த்த வேண்டாம். நானே பத்தாயிரமும் தருகிறேன். இதற்கு உதவாமல் என்னிடம் பணம் எதற்காக இருக்கிறது?" என்று கூறிப் பெரியவரிடம் அள்ளிக்கொடுத்து அனுப்பினார். பெரியவருக்குத் தலைசுற்ற ஆரம்பித்தது. மனக்குழப்பத் தோடு நபிகள் நாயகத்திடம் வந்து, "பத்துப் பருப்புச் சிந்தியதற்காகவும், பத்துச் சொட்டு எண்ணெய் சிந்தியதற்காகவும் தம் வேலைக்காரர்களைக் குத்தியும், சவுக்கால் அடித்தும் துன்புறுத்திய இவர், பள்ளிவாசல் கட்ட ஐயாயிரம் கேட்டபொழுது பத்தாயிரம் கொடுத்தாரே, இதற்கு என்ன காரணம்?" என வினவினார் பெரியவர்.

அதற்கு நபிகள் நாயகம், "கருமித்தனம் வேறு, சிக்கனம் வேறு. அந்தச் செல்வர் கருமியல்ல; சிக்கனத்தைக் கையாள்பவர். அவர் அப்படி யெல்லாம் பொருள்களைப் பாழாக்காமல் சேர்த்து வைத்திருந்ததனால் தான் அப்பணம் பள்ளிவாசல் கட்டப் பயன்படுகிறது" எனத் தெளிவு படுத்தினார்.

கருமித்தனத்திற்கும் சிக்கனத்திற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்து கொண்டு நீங்களும் வாழ்க்கையில் சிக்கனமாக இருங்கள்; ஆனால் கருமியாக இருக்காதீர்கள். இதோ உங்களுக்காகக் கவிஞர் மருதகாசியின் புகழ்பெற்ற ஒரு திரைப்படப் பாடலி : இருந்து சில வரிகள்:

"சேத்த பணத்தைச் சிக்கனமா செலவுபண்ண பக்குவமா
அம்மா கையிலே கொடுத்துப்போடு சின்னக்கண்ணு அவுங்க
ஆறை நூறு ஆக்குவாங்க செல்லக்கண்ணு!"

49
அதிர்ஷ்டம் என்பது என்ன?

லூயிஸ் பாஸ்டியூர் என்ற பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி - கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் காற்றில் மிதக்கின்றன, தண்ணீரில் இருக்கின்றன என்ற உண்மையை முதன்முதலில் நுண்ணோக்காடி (மைக்ராஸ்கோப்) மூலம் கண்டறிந்து உலகிற்கு உரைத்தவர் - கூறியிருக்கும் ஒரு முக்கியமான கருத்து இது:

"அதிர்ஷ்டம் என்பது என்ன? அதிர்ஷ்டம் என்பது 'இரண்டும் இரண்டும் நான்கு' என்கிற கணக்குப் போல, அதாவது 'தயார் நிலை + வாய்ப்பு = அதிர்ஷ்டம்' என்கிறார் லூயிஸ் பாஸ்டியூர். முதலில் நீங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். அறிவு, அனுபவம், படிப்பு என்று எல்லா விதங்களிலும் நீங்கள் உங்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும். அதாவது உங்கள் தகுதிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். அந்தத் தயார் நிலையில் இருக்கும் போது வாய்ப்பு வருமானால், நீங்கள் உடனடியாக அதைக் கவ்விப் பிடித்துக் கொள்ளலாம். அதுதான் அதிர்ஷ்டம். தயார் நிலையில் இல்லாதபோது - தகுதி இல்லாத போது - எத்தனையோ வாய்ப்புகள் அந்தத் துறையில் இருந்தாலும் உங்களை அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். நீங்கள் தயார் நிலையில் இருந்தால் வாய்ப்பு இன்று இல்லாவிட்டால் நாளை நிச்சயமாக வரும். ஒரு வாய்ப்பு தவறினாலும் மறுவாய்ப்பில் பலன் கிடைக்கும். ஆகவேதான் எப்போதும் தயார் நிலையில் நம்மை வைத்துக்கொள்ள வேண்டும். நம் தகுதிகளை வளர்த்துக் கொள்வதில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும்."

ஓர் உதாரணம் பார்ப்போமா?

மதுரை மாநகராட்சிப் பள்ளியில் பிளஸ் டூ வகுப்பில் படித்து வந்த ஒரு மாணவர். அவரது தந்தை, ஒரு தலைச்சுமை பாத்திர வியாபாரி. தாய், தனியார் நிறுவனத் துப்புரவுத் தொழிலாளி. அவர்களின் குடும்ப வருமானம் மூன்று குழந்தைகளின் படிப்புக்குப் போதுமானதல்ல.

இந்நிலையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அந்த மாணவர், ஒரு மருத்துவ மனையில் துப்புரவுப் பணி யாளராகச் சேர்ந்து தற்காலிக அடிப்படையில் மூன்று மாதம் பணிபுரிந்தார்.

அதற்குக் கிட்டிய ஊதியம் மேல்நிலைப்பள்ளி முதலாம் ஆண்டு சேர்வதற்கு உதவியது. இருப்பினும், இடையில் பள்ளியில் கட்டணம் செலுத்த இயலாமல் போயிற்று. இதனால் மூன்று மாதம் அந்த மாணவர் பள்ளிக்குச் செல்லவில்லை.

இத்தகவலை அறிந்த மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஒருவர் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தி மீண்டும் மேல்நிலைக் கல்வி பயிலும் வாய்ப்பினை அம்மாணவருக்கு உருவாக்கிக் கொடுத்தார்.

இதையடுத்து பிளஸ் டூ வகுப்பிற்குத் தேவையான நூல்களை மருத்துவமனை நிர்வாகத்தினர் வழங்கினர்.

மாணவரின் கல்வி ஆர்வத்தைப் பார்த்த பள்ளி ஆசிரியர்கள் அவரது படிப்பில் சிறப்புக் கவனம் செலுத்தினர்.

இந்நிலையில் சாலை ஓரப் புரோட்டா கடை ஒன்றில் பகுதி நேர ஊழியராகப் பணிபுரிந்து கொண்டே அந்த மாணவர் தமது கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார்; பிளஸ் டூ தேர்வையும் எழுதினார்.

என்ன நடந்தது தெரியுமா?

அந்த மாணவர் பிளஸ் டூ தேர்வில் புவியியல் பாடத்தில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றார். 'புரோட்டா கடையில் வேலை; புவியியலில் இரண்டாம் இடம்' என்று பத்திரிகைகளில் படத்துடன் அவரைப் பற்றிய தகவல்களும் பேட்டிகளும் அடுத்தடுத்து வெளிவந்தன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரே கல்வித்துறை அதிகாரிகள் மூலம் நேரில் அழைத்து அவரது உயர்கல்விச் செலவுக்காக ஒரு லட்சம் ரூபாயை வழங்கினார். இதுபோல் இன்னும் பல பெருமக்களும் அவருக்குத் தனிப்பட்ட முறையில் நிதி உதவிகள் அளிக்க முன் வந்தனர்.

நாம் இதுவரை பார்த்தது பிளஸ் டூ தேர்வில் புவியியல் பாடத்தில் 197 மதிப்பெண் பெற்று மாநில அளவில் இரண்டாவது இடம் பெற்று, மதுரை மாநகராட்சிப் பள்ளிக்குச் சிறப்புப் பெயரைத் தேடித் தந்துள்ள மாணவர் க.வீரபாண்டியனைப் பற்றித்தான்! இளைய தலைமுறையினரே. சிந்தித்துப் பாருங்கள்! வீரபாண்டியன் தன் குடும்ப வறுமையை நினைத்துப் பயந்து விடவில்லை; சும்மா இருந்து விடவில்லை; சோர்ந்து போய்விடவில்லை. மாறாக, திறமையை நம்பி, கடுமையாக உழைத்தார்; ஆர்வத்துடனும்

விடாமுயற்சியுடனும் படித்தார்; மாநிலத்திலேயே இரண்டாம் இடம் என்ற தகுதியைப் பெற்றார். தயார் நிலையில் இருந்த அவரது முகவரியைத் தேடி வந்து அதிர்ஷ்டம் தமிழக முதல்வரின் மூலம் உதவிபுரிந்தது! 'தயார் நிலை + வாய்ப்பு = அதிர்ஷ்டம்' என்பதை இப்போது நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

50

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!'

அணுகுமுறையில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று, எதையும் நம்பிக்கையோடு பார்ப்பது, உடன்பாட்டு நோக்கில் அணுகுவது. இதனை ஆங்கிலத்தில் 'Optimism' என்றும், 'Positive Thinking' என்றும் குறிப்பிடுவார்கள். இன்னொன்று, எல்லாவற்றையும் நம்பிக்கை இல்லாமல் பார்ப்பது, எதிர்மறையான நோக்கில் காண்பது, இதனை ஆங்கிலத்தில் 'Pessimism' என்றும், 'Negative approach' என்றும் சுட்டுவார்கள்.

நம் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் முக்கியமாகத் தேவைப்படுவது நம்பிக்கைப் பார்வையே; உடன்பாட்டு நோக்கே. தமிழ் இலக்கியத்தை மனம் கலந்து கற்றால் போதும்; நம் மனதில் இருந்து அவநம்பிக்கை அறவே அகன்றுவிடும்; விரக்தி விட்டு விலகிப் போகும்; எதிர்மறைச் சிந்தனை சொல்லாமல் விடை பெற்றுச் செல்லும். ஒரு பறவைப் பார்வையில் தமிழ் இலக்கியத்தை அலசி ஆராய்ந்து பார்ப்போமா?

முதலில் சங்க இலக்கியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். "இன்னாது அம்ம இவ்வுலகம்" என்ற புறநானூற்றுப் புலவர், அத்தோடு நிறுத்திக் கொண்டிருந்தால், அது எதிர்மறையான சிந்தனையாக - விரக்தியின் வெளிப்பாடாக - இருந்திருக்கும். ஆனால், அவரே "இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே" என்று அடுத்துப் பாடியிருப்பதால், 'இந்த உலகம் பொல்லாததுதான்; கொடியதுதான். ஆனால் இதன் இயல்பை உணர்ந்து கொண்டு, நாம்தான் அதிலே இனிமையையும் காணக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்ற தெளிவையும் பெறமுடிகின்றது.

அடுத்து, திருக்குறளுக்கு வாருங்கள். காந்தியடிகள் தொடங்கி ஆல்பர்ட் சுவைட்சர், ஜி.யு.போப் போன்றவர்கள் வரை உலகப் பேரறிஞர்கள் அனைவரும் திருக்குறளை ஒட்டுமொத்தமாகப் போற்றிப் புகழ்கிறார்கள் என்றால் என்ன காரணம்? வள்ளுவர் பெருமான் 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்றோ, 'காயமே இது பொய்யடா' என்றோ, 'பெண் எனும் மாயப் பிசாசு' என்றோ 1330 குறட்பாக்களில் எங்கும், யாரையும் பாடவில்லை, பழிக்கவில்லை. அவர் இந்த வையத்துள் வாழ்வாங்கு வாழவே வழிகாட்டுகின்றார்; இல்லறமாம்

நல்லறத்தின் மாண்பினையே - இல்லாளின் நலத்தினையே - போற்றுகின்றார்; பொதுமை நோக்கில் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் கருத்துக்களையே எடுத்து மொழிகின்றார்; மொத்தத்தில் படிப்பவர் மனங்களில் நம்பிக்கை விதைகளையே தூவுகின்றார்.

அப்படியே தெய்வத் தமிழுக்கு வந்தால், குழந்தை ஞானியான திருஞான சம்பந்தர், "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை" என்று நம் மனங்களில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகிறார். தாண்டக வேந்தர் திருநாவுக்கரசரோ "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்... இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று எழுச்சிமிக்க குரலில் முழங்குகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்த பாரதியோ, சொந்த வாழ்வில் வறுமையின் தாக்குதல் எவ்வளவு இருந்தாலும் சோர்ந்து போய் மூலையில் முடங்கிவிடாமல்,

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள்
இறைவா இறைவா இறைவா"

என்று மூன்று முறை அடுக்கிக் கூறுகின்றார்.

"இளம்பிறையே!
உனது ஏழ்மையை
நினைத்து வருந்தாதே
ஏனென்றால்
உன்னுள்ளே தான்
பூரண சந்திரன்
புதைந்து கிடக்கிறான்"

என்று இன்றைய புதிய தமிழ்க் கவிதையும் தன் பங்கிற்குப் படிப்பவர் உள்ளங்களிலே நம்பிக்கையை ஊட்டியுள்ளது.

'The Power of Positive Thinking' என்ற ஆங்கில நூல் இன்று உலக அரங்கில் இலட்சக்கணக்கில் விற்பனை ஆகியுள்ளது; பல பதிப்புக்களைக் கண்டுள்ளது. இதைப் போலப் பத்துப் புத்தகங்களை எழுதுவதற்கான உடன்பாட்டு எண்ணங்கள் - நம்பிக்கைச் சிந்தனைகள் - தமிழ் இலக்கியங்களில் நிறையவே உள்ளன. தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்!

51
எதிர்த்துச் சுடச்சுடப் பதிலிறுக்கும் கலையில் வல்லவர்

அறிஞர் ஜார்ஜ் பெர்னார்ட் ஷாவினை உலகினுக்கே தந்து உயர்புகழ் கொண்ட நாடு அயர்லாந்து. "உயிர் உள்ள வரையில் உழைத்துச் சாக விரும்புகிறேன். உழைக்க உழைக்கத்தான் எனக்கு உயிர் வாழ்வு இனிக்கிறது" என்று கூறிய ஷா தொண்ணூற்று நான்கு வயது வரை வாழ்ந்தவர்; குடிப்பழக்கமும் புலால் உணவு உண்ணும் பழக்கமும் இல்லாமல் இறுதி வரை மரக்கறி உணவே உண்டு வாழ்ந்தவர்; நாடகத் துறையில் ஷேக்ஸ்பியருக்குப் பிறகு பெருந்தொண்டு ஆற்றிப் பரந்த புகழ் பெற்றவர். அவருடைய எழுத்திலும் பேச்சிலும் அறிவின் ஆழமும், இயல்பான குறும்பும், எதிருரைக்கும் திறமையும், எள்ளல் குறிப்பும், நுட்பமான நகைச்சுவையும், நையாண்டியும், வேடிக்கையும், விளையாட்டுப் போக்கும் என்றென்றும் பளிச்சிட்டு நிற்கும் இயல்புகள் ஆகும். நெஞ்சை அள்ளும் ஒரு சில சான்றுகள் இதோ:

● இங்கிலாந்தைச் சார்ந்த அறிஞர் ஜி.கே.செஸ்டர்டன் பருமனான உடம்பு பெற்றவர். பெர்னார்ட் ஷாவோ உடம்பில் கொழுப்பு ஏறாமல் மிக விழிப்பாக இருந்து நடை முதலான பயிற்சிகளால் உடம்பைக் காத்துக் கொண்டவர்; அதனால் அவரது உடம்பு மிக ஒல்லியானதாக இருந்தது. செஸ்டர்டன், ஷாவைக் கண்டு, "உன்னை யாராவது பார்த்தால், இங்கிலாந்தில் பஞ்சம் வந்திருந்ததாக எண்ணிக் கொள்வார்கள்" என்றார். அதற்கு மறுமொழியாக, உடனே ஷா, "உன்னைப் பார்த்தால் பஞ்சம் வந்ததற்குக் காரணமும் தெரிந்து கொள்வார்கள்" என்றார்.

● இஸிடோரா டங்கன் என்ற புகழ் பெற்ற அழகி ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு முறை ஷாவைக் கண்டபோது, "ஷா, நான் அழகில் சிறந்தவள், நீங்கள் அறிவில் சிறந்தவர். நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் அழகிலும், அறிவிலும் இணையற்ற குழந்தை பிறக்கும்" என்று கூறினாள். அதற்கு உடனே ஷா, "ஆனால் என்னுடைய அழகும், உன்னுடைய அறிவும் அந்தக் குழந்தைக்கு அமைந்துவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டுத் திணற வைத்தார்.

● ஐன்ஸ்டின் என்னும் அறிவியல் அறிஞரைப் பாராட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றிலே பெர்னார்ட் ஷா பேச நேர்ந்தது. அப்போது "உலகத்திலேயே இன்று பெரிய மனிதர் இருவர் இருக்கின்றார்கள். ஒருவர் நான்; மற்றொருவர் ஐன்ஸ்டீன்" என்று கூறினார். இதே போல், சோஷலிசம், கம்யூனிசம் என்னும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை ஒரு முறை விளக்க நேர்ந்தது. "இந்தப் பொருள் எளியதே. ஆனாலும் அரசியல் அறியாமையும், பொருளாதார அறியாமையும் மிகுந்த காரணத்தால் இந்தப் பேச்சு ஒருவருக்கும் விளங்குவதில்லை. உலகத்திலேயே இதை உணர்ந்தவர்கள் இருவரே. அந்த இருவர் யார் என்றால் ஸ்டாலின் ஒருவர்; மற்றொருவர் நான்" என்று குறிப்பிட்டார் ஷா.

● "ஏன் குடியை வெறுக்கின்றீர்கள்?" என்பதற்கு விடையாக ஷா கூறியது அவருடைய நுட்பமான நகைச்சுவைத் திறனைக் காட்டுவதாகும். "என் குடும்பத்தில் இருந்த முன்னோர் என் போல் பலருடைய பங்கு களையும் சேர்த்துத் தாங்களே குடித்து விட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு அதில் பங்கு இல்லாமல் போயிற்று" என்பதே அந்த விடை.

● துன்பக் காலத்திலும் அறிவுத் தெளிவும், குறும்பும் சிறிதும் குறையாமல் பேசி வந்தவர் ஷா. மான்செஸ்டர் பத்திரிகையாளர் ஒருவர், "இக்காலத்தில் நாம் எதிலும் நம்பிக்கை இழந்துவிட்டோம் அல்லவா?" என்று ஷாவிடம் கேட்டார். "இல்லவே இல்லை. முன்னெல்லாம் கடவுளிடம் வைத்திருந்த நம்பிக்கையை மாற்றி, இன்று டாக்டர்களிடம் நம்பிக்கை வைத்திருக்கின்றோம்" என்றார் ஷா.

● 1925-இல் அறிஞர் ஷாவிற்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அப்போதும் ஷாவின் வழக்கமான குறும்புப் போக்கு மாறவில்லை. "இந்த ஆண்டில் நூல் ஒன்றும் நான் எழுதி வெளியிட வில்லை. உலகம் அதைக் கண்டு விடுதலையுணர்ச்சியோடு மகிழ்ந்து எனக்கு நன்றி பாராட்டிச் செய்த செயல் இது!" என்று கூறினார்.

எதிர்த்துச் சுடச்சுடப் பதிலிறுக்கும் கலையில் (RETORT) வல்லமை பெற விரும்பினால் நீங்கள் உடனடியாக அணுக வேண்டியவர் அறிஞர் பெர்னார்ட் ஷாவே ஆவார்.

52
உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் உருவகக் கதைகள்

உலக இலக்கியத்தில் அளவில் மிகச் சிறியதும், படிப்பவர் மனத்தில் பதியும் பாங்கில் மிகச் சிறந்ததுமான ஓர் உருவகக் கதை இது:

"ஒரு பெரிய மீன் சிறிய மீனைக் கண்டதும் அதை விழுங்க வாயைத் திறந்தது.

'இது பெரிய அநீதியாக இருக்கிறதே? எனக்கும் வாழும் உரிமை உண்டு! சட்டப்படி எல்லா மீன்களும் சமமானவை' என்று சிறுமீன் கத்தியது.

பெரிய மீன் அமைதியாக, 'சட்டத்தைப் பற்றி ஏன் சும்மா அளக்கிறாய்? நான் உன்னை விழுங்கக்கூடாது என்பதுதானே உன் எண்ணம்? சரி, இதோ என்னையே நீ விழுங்கிவிடேன். விழுங்கு அப்பனே, விழுங்கு! எதற்கு இப்படிப் பயப்படுகிறாய்? நான் ஒன்றும் உன்மேல் ஒரேயடியாகப் பாய்ந்துவிட மாட்டேன்' என்று பதில் சொல்லியது.

சிறுமீன் துணிவு கொண்டு தன் வாயைத் திறந்து அந்தப் பெரிய மீனை விழுங்க ஆன மட்டும் முயன்றது. கடைசியில் பெருமூச்சு விட்டு நம்பிக்கையை இழந்து, 'நீ சொல்வதுதான் ஐயா உண்மை, என்னை விழுங்கிவிடு' என்றது.

'சமத்துவம்' என்பது இந்தக் கதையின் பெயர். தற்காலத்து ருஷ்ய எழுத்தாளரான ஸோலோகாவ் எழுதிய இதனைப் படிக்க இரண்டு மணித் துளிகூட ஆகாது. ஆனால் படித்தபிறகு எத்தனை ஆண்டானாலும் இதனை மறக்க முடியாது. உலகில் எளியோரை வலியோர் வாட்டுவதும், ஏழைகளைப் பணக்காரர்கள் வருத்துவதுமான அநீதிகளை இந்தச் சின்னஞ்சிறு உருவகக் கதை எவ்வளவு செறிவாகவும் குறிப்பாகவும் நமக்குப் புலப்படுத்தி விடுகிறது பாருங்கள்!

மனித வாழ்க்கையிலும் மனிதனுடைய மனத்திலும் தோன்றும் விசித்திரமான சிக்கல்களையும் விதவிதமான உணர்வுகளையும் சித்திரிக்கும் ஓர் எழுத்தாளருக்கு உருவகக் கதை என்ற இந்த இலக்கிய வடிவம் ஓர் ஒப்பற்ற கருவியாகப் பயன்படுவதாகும். உதாரணமாக, 'தூக்கத்தில் நடப்பவர்கள்' என்ற கலீல் ஜிப்ரானின் உருவகக் கதையைப் பாருங்கள்:

"ஒரு தாயும், பெண்ணும் நள்ளிரவில் தூக்கத்தில் நடந்து கொண்டே வீட்டுக்கு வெளியில் உள்ள சோலைக்கு வருகிறார்கள். அந்த மயக்கத்திலேயே அவர்கள் இருவரும் சந்திக்கிறார்கள். பெண்ணைக் கண்டதுமே தாய் எரிச்சலோடு, 'போடீ, எங்காவது ஓடிப்போய் உன் முகத்தில் கரியைத் தீற்றிக்கொண்டு சா! என் அழகையும் இளமையையும் அழிக்கும் ராட்சசி நீ!' என்கிறாள். பெண்ணும் ஆத்திரத்தோடு, 'நீ மட்டும் என்னவாம்? நீயும் எனக்கு எதிரிதான். உன் தீய தன்மைகள் யாவும் என்னிடம் ஒட்டிக் கொண்டிருக்கின்றன; என் இரத்தத்தில் கலந்திருக்கின்றன. ஓடிப் போடீ! எங்காவது போய் முகத்தில் கரியைத் தீற்றிக்கொண்டு சா! வந்துவிட்டாள் இங்கே, ராட்சசி!' என்கிறாள்.

இதற்குள் கோழி கூவுகிறது. இருவரும் கண் விழிக்கின்றனர். பெண், 'அம்மா, அம்மா!' என்று தாயை அன்போடு தழுவிக் கொள்கிறாள். தாயும், 'அடி என் கண்ணே!' என்று பரிவுடன் பெண்ணை அணைக்கிறாள்."

இருபது பக்கங்களால் ஆன ஒரு சிறந்த சமூகச் சிறுகதை கூட, ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட மனித மனப்பான்மையை இவ்வளவு திட்பத்தோடும் நுட்பத்தோடும் சித்திரிக்க முடியுமா என்பது ஐயமே. உருவகக் கதைகளின் புத்தம் புதிய அழகு வடிவங்களைத் தரிசிக்க வேண்டும் என்றால் நீங்கள் அணுக வேண்டியது கலீல் ஜிப்ரானைத்தான்.

இவ்வளவு ஏன்? "ராபின்ஸன் குருஸோவைப் போல நீங்களும் மனிதப் பூண்டே அற்றுப் போன ஒரு தீவில் பல ஆண்டுகள் வாழ நேர்ந்து, உங்கள் கையில் பத்துப் புத்தகங்களே எடுத்துக்கொண்டு போக முடியும் என்றால் நீங்கள் எந்த எந்த நூல்களை எடுத்துச் செல்வீர்கள்?" என்ற கேள்விக்கு மராத்திய எழுத்தாளர் வி.ஸ.காண்டேகர் அளித்த பதில் என்ன தெரியுமா? அவர் முடிந்த முடிவாகக் குறிப்பிட்ட இரண்டு நூல்கள் எவை தெரியுமா? இராமாயணமும் ஈசாப் நீதிக்கதைகளும்தான். காண்டேகரைப் பொறுத்தவரையில் இராமாயணம் வெறும் இதிகாசம் மட்டுமல்ல. அது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவ நூல். 'இடுக்கண் வருங்கால் நகை'க்கக் கற்றுத்தரும் பெருநூல். அது போலவே இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் கடந்த பின்பும், கற்பனைத் திறன், கலை நுட்பம், சிந்தனையைத் தூண்டும் வல்லமை, சுடர்மிகு அறிவுத்திறம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் ஈசாப்பின் நீதிக் கதைகள் இன்றைய

உலகின் நாகரிக மாந்தரையும் ஈர்க்க வல்ல அழகும் ஆற்றலும் பெற்றவை; காப்பியத்திற்கு இணையான தரமும் திறமும் வாய்ந்தவை.

ஈசாப், கலீல் ஜிப்ரான் ஆகியோரைப் பின்பற்றிக் காண்டேகரும் அழகிய உருவகக் கதைகளைப் படைத்துள்ளார். 'அரும்பு' என்ற பெயரில் கா.ஸ்ரீ.ஸ்ரீ.யின் மொழிபெயர்ப்பில் அவை ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளன. அவற்றைப் படித்துப் பார்த்தால் உருவகக் கதை என்ற இலக்கிய வடிவத்தின் முழுப் பரிமாணமும் உங்களுக்கு நன்றாக விளங்கும்.

53
'நம்மிடம் உழைப்பு வளம் இல்லை!'

திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க.ப.அறவாணன் அண்மையில் தூத்துக்குடியில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்து கொண்டு தலைமை உரை ஆற்றியபோது தெரிவித்த ஒரு முக்கியமான கருத்து வருமாறு :

"நம் நாடு மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளது. எனினும் தண்ணீர்ப் பஞ்சம். காடு, மலைகள் இருந்தும் மின்சாரப் பற்றாக்குறை. சுமார் 100 கோடி மக்கள் இருந்தும் 40 கோடிப் பேர் பட்டினியில் உள்ளனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது நம் நாட்டில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்த நம்மிடம் உழைப்பு வளம் இல்லை அல்லது அந்த உழைப்பைப் பயன்படுத்தும் வகையில் மூளை வளம் இல்லை என்பது உறுதியாகத் தெரிகிறது.

சிறிய நாடான தைவானில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உலகம் முழுவதும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் கடினமான உழைப்புத்தான்.

எனவே இன்றைய சூழலில் வலிமையான இந்தியா - வளம் கொழிக்கும் தமிழ்நாடு - உருவாக வேண்டும் என்றால், நமக்குப் பெரிதும் தேவைப்படுவது உழைப்புத்தான், கடினமான உழைப்புத்தான், ஓயாத உழைப்புத்தான். இதனை உணர்த்தும் ஓர் இந்திய நீதிக்கதை வருமாறு :

ஓர் அரசன் மாறுவேடம் பூண்டு பல சிற்றூர்களைப் பார்வையிட்டு வந்தான். அப்போது ஒரு பட்டியில் ஒரே ஒரு வயதான பெண் மட்டும் மர நிழலில் அமர்ந்து கூடை முடைந்து கொண்டிருந்தாள்.

அரசன் அவளை அணுகி, "அம்மா! நீ மட்டும் தனித்து இருந்து கூடை முடைந்து கொண்டு இருக்கிறாயே? வேறு ஒருவரையும் இந்தக் கிராமத்தில் காணோமே? அவர்கள் எல்லோரும் எங்கே போய் இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"அரசரைத் தரிசிக்கப் போய் இருக்கிறார்கள்" என்று பதில் சொன்னாள் அந்தப் பெண்,

"அரசரைத் தரிசிக்க நீ ஏன் போகவில்லை?" என்று கேட்டான் மன்னன்.

"செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடிக்காமல், முட்டாள்கள் தான் அரசரைத் தரிசிக்கப் போவார்கள்" என்று உறுதியான குரலில் மறுமொழி சொன்னாள் அந்தப் பெண்.

"அரசரைத் தரிசிப்பதால் பயன் ஒன்றும் கிட்டாது என்பது உன் கருத்தா?" என்று அவளை மடக்குவது போல் கருதிக்கொண்டு கேட்டான் அரசன்.

"பயன் கிட்டுமோ, கிட்டாதோ அதை நான் அறியேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு, ஒரு நாள் வேலையைப் பாழ்படுத்திக் கொண்டு அரசரைக் காணச் செல்வது அறிவீனம் ஆகாதோ?" என்று தெளிவான குரலில் அரசனையே திருப்பிக் கேட்டாள் அந்தப் பெண்.

பெண் இப்படிக் கேட்டதும் அரசன் அளவிலா ஆனந்தம் அடைந்தான். அந்தப் பெண்ணின் கையில் ஒரு பொன் நாணயத்தைக் கொடுத்து, "பெண்ணே! இந்தப் பொன் நாணயத்தை நான் தந்த பரிசாக வைத்துக்கொள். அரசனைத் தரிசிக்கச் சென்றவர்கள் திரும்பியதும் அரசன் வந்து உன்னைத் தரிசித்து விட்டுப் போனான் என்று அவர்களிடம் சொல்" என்று கூறி அவளிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினான்.

கடினமாக உழைப்பதால்தான் ஒரு நாட்டின் செல்வம் பெருகுமே ஒழிய, வீணான, படாடோபமான விளம்பரத்தால் மட்டும் ஒரு நாட்டின் செல்வம் ஒருபோதும் பெருகிவிடாது என்னும் பேருண்மையை அந்த உத்தமியின் வாய்மொழி மூலம் தெரிந்து கொண்டு தனது அரண்மனைக்குத் திரும்பினான் அரசன்.

அருமையான இந்த நீதிக் கதையில் வரும் பெண்ணைப் போல் ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் கடினமாக உழைக்க முற்பட்டான் என்றால், 'நாடென்ப நாடா வளத்தன' என வள்ளுவர் கண்ட கனவு விரைவில் நனவாகும், இந்தியா பிற நாட்டை எதிர்நோக்கும் நாடாக இல்லாமல், தன்னிறைவு பெற்ற ஒரு வளநாடாக - உரிமை நாடாக - உருவாகும். பிறகென்ன?

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?"

என நாம் அனைவரும் பெருமிதத்தோடு பாடி மகிழலாம்.

54
தருமனைப் போன்று நல்லதையே காணுங்கள்!

'நல்லோரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று'

- என்பது ஔவையாரின் மூதுரைப்பாடல். இப்பாடலைப் படிப்பதுடன் நில்லாமல் வாழ்க்கையில் பின்பற்றத் தொடங்கினால் போதும், நம் வாழ்க்கையில் எல்லா நலங்களும் நம்மைத் தேடி வரும்; சுருங்கச் சொல்வது என்றால் எல்லாமே இன்ப மயம் ஆகும்!

நல்லவர்களைக் காண்பதும் நல்லதே; நல்லவர்களது நன்மை தரத் தக்க சொற்களைக் கேட்பதும் நல்லதே; நல்லவர்களது நல்ல குணங்களை எடுத்துச் சொல்லுவதும் நல்லதே; அவர்களுடன் தோழமையோடு சேர்ந்திருப்பதும் நல்லதே. காண்பது - கேட்பது - உரைப்பது - சேர்ந்து இருப்பது - இப்படி நல்ல சூழலிலேயே ஒருவர் இருந்தால் - நீண்ட நாள் வாழ்ந்தால் - விளைவு என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்? அவர் எப்போதும் - எதிலும் - எங்கும் - யாரிடமும் - நல்லதையே காண்பார்; அவர் வாயில் இருந்து நல்ல வார்த்தைகளே வரும்; அவர் எண்ணமும் செயலும் எந்த நிலையிலும் நல்லனவாகவே இருக்கும்.

ஒரு மாறுதலுக்கு இப்படி நினைத்துப் பாருங்கள்.

ஒருவர் தீய குணங்கள் உடையவரையே கண்டு - தீயவர்களது பொருளற்ற சொற்களையே கேட்டு - தீயவரது குணங்களையே எடுத்துப் பேசி - தீயவர்களுடனேயே நட்புக் கொண்டு - இப்படித் தீய சூழலிலேயே நீண்ட காலம் வாழ்ந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள். காலப்போக்கில் விளைவு என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்? அவர் எப்போதும் - எதிலும் - எங்கும் - யாரிடமும் - தீயதையே காண்பார். அவர் வாயில் இருந்து தீய சொற்களே வரும்; அவர் எண்ணமும் செயலும் எந்த நிலையிலும் தீயனவாகவே இருக்கும்.

'குமுதம்' இதழில் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த ஒரு நகைச்சுவைத் துணுக்கு இது:

"ஒரு திருமண விழா. தாலி கட்டுவதற்குச் சில நிமிடங்களே இருந்தன. ஒருவர் 'பெரிய எழவாப் போச்சு!' என்றார்.

உடனே பக்கத்தில் இருந்த பெரியவர் ஒருவர் 'நல்ல நேரத்தில் இப்படி அபத்தமாகப் பேசக்கூடாது' என்றார்.

உடனே அந்த ஆசாமி, 'பெரிய அபத்தம்! வேலை செஞ்சு பார்த்திருந்தால் தெரியும். ஒவ்வொன்றும் பொணம் மாதிரி கனக்கிறது' என்றார். மீண்டும் பெரியவர் கண்டித்தார்.

அந்த ஆள்விடவில்லை. 'உமக்கு என்ன? லேசாகச் சொல்லி விடுவீர். இங்கே உழைச்சு உழைச்சுத் தாலி அறுந்துவிடும் போல இருக்கு' என்று கூற, பெரியவர் 'எப்பத்தான் இப்படிப் பேசுவதை நிறுத்துவீர்?' என்றார்.

'என்னைக் கொண்டு போய்ச் சுடுகாட்டில் வச்ச அன்னிக்குத்தான் நிறுத்துவேன்' என்றாராம் அந்த ஆசாமி".

இந்த மனிதரின் வாயில் இருந்து இந்தப் பிறவியில் நல்ல வார்த்தைகள் வரும் என்று நினைக்கிறீர்களா? இவரைப் போலவே நம்மிடையே சில பேர் இன்றும் இருக்கிறார்கள்.

மகாபாரதத்தில் ஓர் இடம் :

பிறவிக் குருடனான திருதராஷ்டிரன் தனது புத்திரர்களான தருமனையும் துரியோதனனையும் அனுப்பி உலகமும் மனிதரும் எவ்விதம் இருக்கிறார்கள் என்று அறிந்து வந்து கூறப் பணித்தான்.

தருமன் உலகையும் மனிதரையும் பார்த்து மகிழ்ந்து கூறினான், 'புருஷர்கள் உத்தம சீலராய், பெண்கள் பதிவிரதைகளாய், மக்கள் சத்தியசந்தராய் வாழ்கிறார்கள்' என்று.

துரியோதனன் சொன்னான், 'புருஷர்கள் சோரர்களாகவும், ஸ்திரீகள் விபசாரிகளாகவும், மக்கள் காமுகர்களாகவும் இருக்கிறார்கள்' என்று.

இன்று நம்மிடையேயும் 'துரியோதனன்'களும் இருக்கிறார்கள்; 'தருமன்'களும் இருக்கிறார்கள். துரியோதனனைப் போன்றவர்கள் எப்போதும் மனிதர்களை - உலகத்தை - எதிர்மறை நோக்கிலேயே பார்ப்பவர்கள். நாம் தருமனைப் போன்று மனிதர்களை - உலகத்தை - எப்போதும் உடன்பாட்டு நோக்கிலேயே பார்ப்போம்; எல்லாம் நல்ல விதமாகவே தோன்றும்; நம் வாழ்க்கையிலும் எந்நாளும் இன்பமே களிநடம் புரியும். சரிதானே?

55

‘தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்?’

பாவேந்தர் பாரதிதாசன் ‘உலக ஒற்றுமை’ என்ற தலைப்பில் பாடிய கவிதை ஒன்றில் மனித உள்ளத்தை ஐந்து வகையாகப் பாகுபாடு செய்கின்றார்; கடுகு உள்ளம், துவரை உள்ளம், தென்னை உள்ளம், மாம்பிஞ்சு உள்ளம், தாயுள்ளம் என்ற பெயர்களால் அவற்றைச் சுட்டுகின்றார்; அவை பற்றிய தனிப்பட்ட தமது விளக்கங்களையும் எடுத்துரைக்கின்றார். அவற்றைக் குறித்துக் கொஞ்சம் சிந்திப்போமா?

தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, வருமானம் இவை உண்டு, தான் உண்டு என்று எந்நாளும் இருப்பவனைச் சின்னதொரு கடுகு போல் உள்ளம் கொண்டவன் என்கிறார் பாரதிதாசன். அதே தெருவில் வாழ்ந்து வருபவர்க்கும் பயன்படாத அவனைச் ‘சிறிய வீணன்’ என்று கடுமையாகச் சாடுகின்றார் கவிஞர்.

கடுகுக்கு நேர் மூத்த துவரை உள்ளம் கொண்டவன் யார் தெரியுமா? ‘கன்னலடா (கரும்படா) என் சிற்றூர்’ எனக் கூறுவோனாம், ஊர்ப்பற்று அவனது தனிக்குணம். தான் உண்டு, தன் வேலை உண்டு என்று மட்டும் இராமல் தன் ஊரைப் பற்றியும் நினைக்கும் அளவிற்குச் சற்றே விரிந்த மனம் பெற்றவன் இவன்.

மனிதரிலே தென்னை உள்ளம் பெற்றவர் என்று ஒரு சாரார் உண்டு. தனது நாட்டுச் சுதந்திரத்தால் பிற நாட்டைத் துன்புறுத்துவோர் இவ்வகையில் அடங்குவர். ஒருவன் தன் கையை எவ்வளவு வேண்டுமானாலும் நீட்டலாம், தாராளமாகத் தயங்காமல் நீட்டலாம், அவனுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. ஆனால் ஒன்று நீட்டுகின்ற ஒருவனது கை அடுத்தவரது மூக்கைச் சென்று தாக்கிவிடக்கூடாது; அது அடுத்தவரது சுதந்திரத்தில் தலையிடுவதாகும்.

ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார், அவரவர் தம் வீடு, நகர், நாடு காக்க வாயடியும், கையடியும் வளரச் செய்வார் - மாம்பிஞ்சு உள்ளம் கொண்டவரின் செயல்பாடுகள் இவை! இங்கே வீடு, நகர், நாடு என்ற எல்லை பரந்து விரிந்திருப்பது போல் தோன்றினாலும் தன்னுடைய வீடு - தன்னுடைய நகர் - தன்னுடைய நாடு என்று தன்னலத்தைச் சுற்றியே எல்லாம் பின்னிப் பிணைந்திருப்பது ஆழ்ந்து நோக்குவோருக்குப் புலனாகும்.

இதுவரை நாம் பார்த்த கடுகு உள்ளம், துவரை உள்ளம், தென்னை உள்ளம், மாம்பிஞ்சு உள்ளம் என்னும் நான்கு வகையான உள்ளங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டு விளங்கும் தாயுள்ளத்தின் இயல்பு எப்படிப் பட்டது தெரியுமா? இதோ, பாவேந்தரின் சொற்களிலேயே அதனைக் காண்போம்.

"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்கள் எலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்? அங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே?!"

பாவேந்தர் பெரிதும் போற்றிப் பாடும் தாயுள்ளம் தூய்மையானது; அன்பே வடிவானது; பெரியது; உலகத்து மக்கள் எல்லாம் ஒன்றே எனக் காணும் ஒருமைப்பாட்டு உணர்வு குடிகொண்டது; தன்னலம் துளியும் இல்லாதது; சண்டை, சச்சரவு எதுவும் அறியாதது; இன்பமே எந்நாளும் என நிறைகுடம் போல் வாழ்வது. இந்தத் தாயுள்ளத்தை ஒவ்வோர் இந்தியரும் பெற்று விட்டால் போதும், நமது இந்தியத் திருநாடு இன்பம் விளையும் தோட்டமாகப் பொலிவுடன் காட்சியளிக்கும்.

இந்தத் தாயுள்ளம் தான் 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று திருமூலரைப் பாட வைத்தது; 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலாரை உருகச் செய்தது; 'எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே' என்று தாயுமானவரை உரைக்கத் தூண்டியது; 'பசித்தோர் முகம் பார்' என்று பட்டினத்தாரைப் பேசப் பணித்தது; 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே - பகைவனுக் கருள்வாய்' என்று பாரதியார் தம் நெஞ்சிற்குச் சொல்லக் காரணமாக அமைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் தாயுள்ளம்தான் இராமானுஜர், தம் குருவின் ஆணையையும் மீறி, தாம் ஒருவர் நரகம் புக நேர்ந்தாலும் சரி, நாட்டு மக்கள் எல்லாரும் சொர்க்கம் செல்ல வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கோயில் கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்று மந்திரத்தை அனைவரும் கேட்கும் வண்ணம் உரத்துச் சொல்ல வைத்தது.

உள்ளத்தில் நல்ல உள்ளமான இந்தத் தாயுள்ளத்தை நாம் எல்லோரும் பெறுவோம்; இந்தத் தரணியை ஒற்றுமையும் ஒருமைப்பாட்டு உணர்வும் கொண்ட அமைதிப் பூங்காவாக ஆக்குவோம்!

56

வாழ்க்கையின் அற்புதமான தரிசனங்கள்!

தத்துவங்கள் அனுபவங்களின் உடனடியான வெளிப்பாடுகள்; உணர்ச்சிகளின் தீவிரமான பதிவுகள்; நிதர்சனங்களின் நேரடியான குரல்கள், சுருங்கச் சொல்வது என்றால், தத்துவங்கள், வாழ்க்கையின் அற்புதமான தரிசனங்கள், மனித மனங்களின் இயல்பான படப்பிடிப்புகள். தத்துவ ஞானிகள் சில நேரங்களில் நாட்டுப்புறங்களில் வழங்கும் பழமொழிகளைப் போல் விளங்குவார்கள்; நடைமுறை உண்மைகளைப் போகிற போக்கில் சொல்லிச் செல்வார்கள். சில நேரங்களில் அவர்கள் விடுகதைகளைப் போல் காட்சி அளிப்பார்கள்; எளிதில் புரியாத புதிர்களைப் போன்ற நடையில் அனுபவ ஞானங்களை உணர்த்தி நிற்பார்கள். அவர்கள் சில சமயங்களில் கள்ளங்கரவற்ற குழந்தைகளைப் போல் விளையாடி மகிழ்வார்கள், சில சமயங்களில் குறிக்கோள் இல்லாத பைத்தியக்காரர்களைப் போல் அலைந்து திரிவார்கள். சில சமயங்களில் பொறுப்பும் முதிர்ச்சியும் மிகுந்த ஞானிகளைப் போல் செயல்படுவார்கள்.

● ஒரு தத்துவப் பேராசிரியரின் வீட்டில் ஒருவன் திருடி விட்டு ஓடினான். பேராசிரியர் வேறு திசையாக ஓடி இறுதியில் கல்லறைத் தோட்ட வாயிலில் போய் உட்கார்ந்தார். அவரிடம் காரணம் கேட்டதற்கு அவர் சொன்னார் :

"என்றைக்காவது ஒரு நாள் அவன் இங்கு வந்துதானே ஆக வேண்டும்?" தத்துவப் பேராசிரியரின் இந்தக் கருத்தை நீங்கள் மறுக்க முடியுமா? சிந்தித்துப் பாருங்கள்.

● இரண்டு தத்துவ ஞானிகள் ஓர் ஆற்றின் ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தனர். ஆற்று நீரில் மீன்கள் துள்ளிக் குதித்து நீந்திக் கொண்டிருந்த காட்சியைக் கண்ட ஒரு தத்துவ ஞானி அடுத்தவரிடம், "ஆற்றில் மீன்கள் எவ்வளவு மகிழ்ச்சியாகத் துள்ளிக் குதிக்கின்றன பார்" என்றார். உடனே இரண்டாவது தத்துவ ஞானி முதலாமவரைப் பார்த்து, "மீன்கள் மகிழ்ச்சியாகத்தான் துள்ளிக் குதிக்கின்றன என்று உனக்கு எப்படித் தெரியும், நீ, மீனா?" என்று கேட்டார். அப்போது முதல் தத்துவ ஞானி இரண்டாவது தத்துவ ஞானியைப் பார்த்துத் திருப்பிக் கேட்டார் இப்படி:

"எனக்குத் தெரியும், தெரியாது என்று உனக்கு எப்படித் தெரியும்? நீ, நானா?" உண்மையில் எவ்வளவு தருக்க முறைப்படியான விவாதங்கள் பாருங்கள்! இனிமேல் யாரும், 'அறிந்தது, அறியாதது, தெரிந்தது, தெரியாதது, புரிந்தது, புரியாதது அனைத்தும் எமக்கு அத்துப்படி' என்று தற்பெருமை பாராட்ட முடியாது போல் இருக்கிறதே, கவனித்தீர்களா?

● ஒரு பொன்மாலைப் பொழுதில் இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா ஒன்றில் நான்கு தத்துவ ஞானிகள் அளவளாவிக் கொண்டிருந்தனர். அப்போது மெல்லிய பூங்காற்று வீசவே கொடி ஒன்று அசைந்து ஆடியது. அதைக் கண்டு ரசித்த ஒரு ஞானி, "ஆகா! இந்தப் பூங்கொடி அசைவது எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்றார். உடனே அடுத்தவர், "பூங்கொடியா அசைகிறது? இல்லை, இல்லை! காற்றல்லவா அசைகிறது?" என்றார். அதற்கு மூன்றாமவர், "அதுவும் இல்லை, மனம்தான் அசைகிறது!" என்றார். நான்காவது ஞானியோ நிதானமாகச் சொன்னார்: "எதுவுமே அசையவில்லை!"

தத்துவ ஞானிகளுக்கு இடையே நடைபெறும் இந்தச் சின்னஞ்சிறு உரையாடல், காட்சி, அனுமானம், ஆகமப் பிரமாணங்களில் இடம்பெறும் பொருள் முதல் வாதம், கருத்து முதல் வாதம் என்னும் நான்கு வகையான உலகத் தத்துவக் கருத்தோட்டங்களைத் தெள்ளத் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

● முத்தாய்ப்பாக ஒரு ஜென் கதை:

ரியோகன் என்ற ஜென் குரு ஒரு மலையடிவாரத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஒரு நாள் அவர் இல்லாத நேரம் பார்த்து ஒரு திருடன் குடிசைக்குள் புகுந்தான். திருட ஏதும் அகப்படவில்லை. அவன் குடிசையை விட்டு வெளியேறும்போது ரியோகன் திரும்பி வந்துவிட்டார். நிலைமை புரிந்தது அவருக்கு. அவர் திருடனிடம் "நீ நீண்ட தூரத்தில் இருந்து வந்திருக்கிறாய். வெறுங்கையோடு திரும்பக்கூடாது. என் ஆடைகளை அன்பளிப்பாக எடுத்துச் செல்" என்றார். துணிகளை வாங்கிக் கொண்டு திருடன் ஓடிவிட்டான். நிர்வாணமாக இருந்த ரியோகன் குளிரால் நடுங்கிக் கொண்டு நிலாவைப் பார்த்து இப்படிச் சொன்னார் :

"பாவம், திருடன்! இந்த நிலவை அவனுக்குத் தர முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?"

உண்மையில் இதுதான் ஒரு தத்துவஞானியின் உள்ளம் என்பது! நாமும் இந்த உள்ளத்தைப் பெற்று விட்டால் போதும், அப்புறம் கவிஞர் கண்ணதாசன் ஒரு திரை இசைப் பாடலில் பாடியிருப்பது போல், 'சிட்டுக் குருவிக்கு மட்டுமல்ல, நமக்கும் இல்லை கட்டுப்பாடு! தென்றலுக்கு மட்டும் அல்ல, நமக்கும் இல்லை சொந்த வீடு! உலகம் முழுவதும் பறந்து பறந்து ஊர்வலம் வந்து விளையாடலாம்!'

57

'கஞ்சி வரதப்பா எங்கே வரதப்பா?'

"கீழ்த்திசை நாடுகளின் அவசரத் தேவை மதம் அன்று. தேவையான மதம் அவர்களிடம் உள்ளது. இந்தியாவில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் லட்சக்கணக்கான மக்கள், தொண்டை வறறக் கூக்குரல் இடுவது உணவுக் காகத்தான். அவர்கள் உணவு கேட்கிறார்கள். நாம் கற்களைக் கொடுக்கிறோம். பசியால் வாடும் மக்களுக்கு மதப் பிரச்சாரம் செய்வது அவர்களை அவமதிப்பதாகும். பசியால் துடிப்பவனுக்கு தத்துவ போதனை செய்வது அவனை அவமதிப்பதாகும்" - சிகாகோ சொற்பொழிவு ஒன்றில் இடம் பெற்றுள்ள சுவாமி விவேகானந்தரின் புரட்சிச் சிந்தனை இது!

"ஏழை மக்களுக்குப் பொருளாதாரமே ஆன்மீகத் தத்துவம் ஆகும். பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு நீங்கள் வேறு வேண்டு கோள் எதுவும் விடுக்க முடியாது. அவர்கள் அதற்குச் செவிசாய்க்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் அவர்களுக்கு உணவு எடுத்துச் செல்லுங்கள். அவர்கள் உங்களை அவர்களுடைய கடவுளாகவே கருதுவார்கள்" - 'யங் இந்தியா' இதழில் தேசப் பிதா காந்தியடிகள் வெளியிட்டுள்ள அழுத்தமான, ஆணித்தரமான கருத்து இது!

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே' என்பது மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரின் இரத்தினச் சுருக்கமான வாக்கு. அவரது கருத்தில் பசிக்கு உணவு கொடுத்துக் காப்பவர், உயிரையே காப்பாற்றும் அறமுடையவர் ஆவார்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன், பசியினால் இளைத்தே, வீடு தோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த, வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்" எனப் 'பிள்ளைப் பெரு விண்ணப்ப'த்தில் கருணை உள்ளத்தோடு உருகி உருகிப் பாடுவார் இராமலிங்க சுவாமிகள்.

"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு" என்று தெள்ளத் தெளி வாகப் பாடும் பட்டினத்தார், "பசித்தோர் முகம் பார்!" என்று பசியினால் வாடுகின்ற ஏழை எளியவர்களுக்காகக் குரல் கொடுக்கவும் தவறமாட்டார்.

"இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்:
தனியொருவனுக்கு உணவிலை யெனில்

ஜகத்தினை அழித்திடுவோம்!"

என உணர்ச்சி முழக்கம் இடுவார் கவியரசர் பாரதியார். அவரது பார்வையில் கண்ணன், அடியவர்களின் வாழ்வில் மழைக்குக் குடை, பசி நேரத்து உணவு.

"பசி, ஐயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்து போகும்!' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே; அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!" - 'பொன்னகரம்' என்ற சிறுகதையில் புதுமைப்பித்தன் எழுதி இருக்கும் அப்பட்டமான - யதார்த்தமான - வரிகள் இவை.

இங்ஙனம் பசியின் கொடுமையைப் பற்றி நம் நாட்டு அருளாளர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும், சிந்தனையாளர்களும் வெளியிட்டிருக்கும் சீரிய கருத்துக்கள் பலப்பல ஆகும். நாட்டுப்புற மக்களிடம் வழங்கி வரும் பழமொழிக் கதை ஒன்றும் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். 'கஞ்சி வரதப்பா, எங்கே வரதப்பா?' என்ற தலைப்பில் அமைந்த அந்தக் கதை வருமாறு :

"காஞ்சிபுரத்தில் ஒரு பிச்சைக்காரன். வீடு வீடாகப் போய் பிச்சை எடுப்பதுதான் அவனது பிழைப்பு. ஒரு நாள் எந்த வீட்டிலும் பிச்சை போடவில்லை. அவன் ரொம்ப சோர்ந்து போனான். ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்தவாறே ஓய்வு எடுத்தான்.

அவன் படுத்திருந்த திண்ணையின் வீட்டுக்காரர் ஒரு வைணவர். அவர் வரதராஜப் பெருமாளை வணங்கிக் கொண்டு 'கஞ்சி வரதப்பா' என்று பிரார்த்தனை செய்தார்.

பசியோடு இருந்த பிச்சைக்காரனின் காதில் 'கஞ்சி வருதப்பா' என்று விழுந்தது. அதனால் மகிழ்ச்சியோடு எழுந்தான். 'எங்க வருதப்பா கஞ்சி?' என்று கேட்டான். ஆவலோடு பார்த்தான்.

இதைக் கண்ட பக்தர் மனம் மாறினார். பிச்சைக்காரனுக்கு வயிறாரச் சாப்பாடு போட்டார். அவனும் திருப்தியாகச் சாப்பிட்டான். வீட்டுக்காரரை மனமார வாழ்த்திப் போனான்.

ஆனால் 'கஞ்சி வரதப்பா' என்பது மறக்க முடியாமல் பரவியது".

முத்தாய்ப்பாக, தமிழன்பனின் ஹைகூ கவிதை ஒன்று இதோ:

"ஆகாயமும் அழகு
பூமியும் அழகு - ஆம்
என் கையில் ரொட்டித் துண்டு."

58
அதிசய மனிதரின் அறைகூவல்

வாழ்ந்த காலத்திலேயே 'அதிசய மனிதர்' எனச் சிறப்பித்துப் பேசப்பட்டவர் ஜி.டி.நாயுடு (1893-1974). அவர் இளைய தலைமுறையினருக்கு விடுத்த அறைகூவல் இது:

"என் கொள்கை எல்லாம்
முதல் 25 வருடம் கற்கக் கசடற,
பள்ளியில் மட்டுமன்றி,
அனுபவ வாழ்விலும்.
பின் 25 வருடம், செல்வம் பேணுக,
ஐம்பது வயதிற்குப் பிறகு, செலவிடுக
கற்ற அறிவையும் பெற்ற செல்வத்தையும்
மற்றையோர் நல்வாழ்விற்காக!"

ஒரு மனிதன் தன் வாழ்க்கைக் காலத்தை முதல், நடு, கடைசி என மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். முதல் பகுதியில் - அதாவது முதல் 25 ஆண்டுகளில் - அவன் தன் வாழ்நாளைக் கல்விக்காகச் செலவழிக்க வேண்டும். வள்ளுவர் 'கற்க, கசடறக் கற்க, கற்றபின் நிற்க அதற்குத் தக' என்பார். ஜி.டி.நாயுடுவோ 'கற்க கசடற, பள்ளியில் மட்டுமன்றி, அனுபவ வாழ்விலும்' என்கிறார். ஏனென்றால், பள்ளியில் ஒருவனுக்குக் கிடைப்பது எண்ணும் எழுத்தும் பற்றிய அறிமுகம்தான். வாழ்க்கையின் பண்பும் பயனும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் - மனிதர்களின் உள்ளும் புறமும் குறித்துப் புரிந்துகொள்ள வேண்டுமானால் - அவன் பயில வேண்டியது அனுபவக் கல்வியைத் தான். பள்ளிக்கல்வியுடன் இந்த அனுபவக் கல்வியையும் ஒருவன் கற்றுத்தேற வேண்டும் என்பது ஜி.டி.நாயுடுவின் அழுத்தமான கருத்து.

மனித வாழ்வின் இரண்டாம் பகுதி - நடுப்பகுதி - அடுத்த 25 ஆண்டுகள். இந்தக் காலகட்டத்தை மனிதன் தனக்கு வேண்டிய செல்வத்தை நேர்மையான வழியில் தேடுவதிலே கழிக்க வேண்டும்; பாடுபட்டுத் தேடிய செல்வத்தைப் பேணிக் காப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். 'பின் 25 வருடம், செல்வம் பேணுக' என்று

ஜி.டி.நாயுடு கூறியிருப்பது பொருள் பொதிந்த அறிவுரை; பொன் போன்ற அனுபவ மொழி. யாக்கை (உடம்பு) நிலையில்லாதது, இளமை நிலையில்லாதது, செல்வம் நிலையில்லாதது என்ற நிலையாமைத் தத்துவங்களைப் பற்றி மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பதிலே மனிதன் தன் வாழ்க்கைக் காலத்தைக் கழிக்கக் கூடாது. அவன் தன் வாழ்நாளில் ஒவ்வொரு மணித்துளியையும் நேர்மையான வழியில் பாடுபட்டுத் தேடிய செல்வத்தைத் தக்க வகையில் பேணிக் காப்பதில் செலவழிக்க வேண்டும். ஏனென்றால் உலக வங்கியில் இருந்து அதிகமாகக் கடன் வாங்கி இருப்பதும் நாம்தான்; அடிக்கடி கடன் வாங்குவதும் நாம்தான். ஏன், உலக அளவில் கணிசமான வெளிநாட்டுக் கடன் தொகைக்குச் சொந்தக்காரரும் நாம்தான். எனவே இதனை நன்றாக மனத்தில் இருத்தி, இந்திய நாட்டில் பிறந்த குடிமக்கள் ஒவ்வொருவரும் பொருள் ஈட்டும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபடுதல் வேண்டும்; ஈட்டிய பொருளைப் பேணிக் காப்பதில் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

ஐம்பது வயதிற்குப் பிறகு வருவது மனித வாழ்வில் மூன்றாவது கட்டம்; நிறைவுப்பகுதி. இதில் மனிதன் தன் முதல் 25 ஆண்டுகளில் கற்ற அறிவையும், அடுத்த 25 ஆண்டுகளில் பெற்ற செல்வத்தையும் மற்றவர் நல்வாழ்விற்காகப் பயன்படுத்தத் தானாக முன்வர வேண்டும்.

"அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்ப தல்லால்
இதுவரைக்கும் பொது நலத்துக்கு என்ன செய்தோம்?"

எனப் பாவேந்தர் பாரதிதாசன் 'குடும்ப விளக்'கில் பொட்டில் அடித்தாற் போல் கேட்டிருக்கும் வினாவை, ஐம்பது வயதிற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் மனிதன் தனக்குத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும். வீட்டுத் தொண்டு என்ற எல்லையை விரிவுபடுத்தி, பொதுத்தொண்டு - நாட்டுத் தொண்டு - ஆற்றிட இந்த நிலையில் அவன் ஆயத்தமாக வேண்டும்.

உண்மையில், திட்டமிட்ட வாழ்வு என்பது இதுதான். தெவிட்டாத இன்பம் கொண்ட வாழ்வு என்பது இப்படித்தான் இருக்கும். அதிசய மனிதர் ஜி.டி.நாயுடு காட்டிய வழியில் திட்டமிட்டு வாழ்ந்து தெவிட்டாத இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் உங்கள் உள்ளத்திலும் அரும்பி இருக்குமே?

59
ஒப்பீட்டு ஆராய்ச்சி வேண்டாம்!

திருமணத்திற்குப் பிறகு ஓர் இளைஞன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவனது எதிர்கால வாழ்க்கையே அமையும். அவன் 'அம்மா பிள்ளை'யாகவே இருந்தாலும் சிக்கல்தான். 'பொண்டாட்டி தாச'னாக மாறினாலும் பிரச்சினைதான். இந்தச் சிக்கலில் சிக்கிக்கொண்ட - பிரச்சினையில் மாட்டிக்கொண்ட - எத்தனையோ இளைஞர்கள் இன்று அல்லல்பட்டு ஆற்றாது அழுது பலவாறு புலம்புகிறார்கள்.

"திருமண வாழ்க்கை என்றால் வசந்த ராகம் போல் இருக்கும் என்று நினைத்தோம். இப்போதுதான் தெரிகிறது அது 'மௌன ராகம்' என்று! திருமண வாழ்க்கை என்றால் 'நினைத்தாலே இனிக்கும்' என்று கனவு கண்டு கொண்டிருந்தோம். இப்போதுதான் தெரிகிறது அது 'அக்கினி நட்சத்திரம்' என்று. திருமண வாழ்க்கை என்றால் 'சுந்தர காண்டம்' போல் இருக்கும் என்று நம்பி இருந்தோம். இப்போதுதான் தெரிகிறது அது 'யுத்த காண்டம்' என்று. பேசாமல் 'ஆரண்ய காண்டம்' போய்விடலாம் போல் தோன்றுகிறது. 'திருமதி ஒரு வெகுமதி' என்று எண்ணி இருந்தோம். இப்போது எங்கள் 'சுயமதி'க்கே கேடு வந்துவிடும் போல் தோன்றுகிறது."

- இப்படி எத்தனை எத்தனையோ இளைஞர்கள் 'மோகன ராகம்' பாட வேண்டிய வயதில் 'முகாரி ராகம்' பாடுவதை இன்றைய சமுதாயத்தில் ஆங்காங்கே காண முடிகின்றது. திருமணத்திற்குப் பிறகு ஓர் இளைஞன் தன்னுடைய தாய், தாரம் என்னும் இருவர்க்கும் அவரவர்க்கு உரிய இடத்தினையும் மதிப்பினையும் தந்து வந்தால் போதும், வாழ்க்கையில் சிக்கல் வரவே வராது. 'தாய்க்குப் பின் தாரம் சரி, அதற்காகத் தாரம் வந்த பின் தாய் பாரமா?' என்று கேட்கும் நிலை உருவாகாது; 'இவ்வளவு காலம் பாராட்டி, சீராட்டி வளர்த்த பெற்றவளை விட நேற்று வந்தவள் பெரியவள் ஆகிவிட்டாளா?" என்று வினவும் நிலையும் எழாது. அன்பிலும் அரவணைப்பிலும் தாயின் மடி ஒருவனுக்கு எவ்வளவு புனிதமானதோ, தாரத்தின் தோளும் அவனுக்கு அவ்வளவு புனிதமானதே ஆகும்; உயர்வானதே ஆகும். இதிலே எந்த விதமான உயர்வு தாழ்வும் இல்லை. எனவே தாய், தாரம் என்னும் இருவரது உணர்வுகளுக்கும் மதிப்புத் தந்து இருவருக்கும் ஏற்றாற்போல் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால்

போதும்; இல்லறம் நல்லறமாகவே விளங்கும். எடுத்ததற்கு எல்லாம் தாயுடன் ஒப்பிட்டுப் பார்த்து தாரத்தை நடத்தினால்தான் குடும்பத்தில் குழப்பமும் சிக்கலும் உருவாகும்; குடும்பம் குருக்ஷேத்திரம் ஆகும்.

திருமணத்திற்குப் பிறகு இளம்பெண்ணும் தன் நிலைப்பாட்டில் உறுதியாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். எதற்கெடுத்தாலும் பிறந்த வீட்டையே ஒப்பிட்டுப் பார்த்து, பேசி, 'பிரச்சினை புகுந்த வீடாகத் தன் வீட்டை ஆக்கிக்கொள்ளக் கூடாது. 'அன்னையையும் அத்தனையையும் அன்றே நீத்தாள், தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே!' என்ற அப்பர் வாக்கைப் பின்பற்றி வாழ முற்பட்டால் போதும், ஒரு பெண்ணின் குடும்ப வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் தலைதூக்காது, குழப்பமும் நெருங்காது.

'காலக் கோளாறு' என்ற தலைப்பில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய ஒரு சுவையான துணுக்கு இங்கே நினைவுகூரத்தக்கது:

"கணவன் சாப்பிட உட்கார்ந்தான்.

மனைவி பரிமாறினாள்

கணவன் : 'சீ! இது என்ன சாப்பாடா?' என் அம்மா சமைத்துச் சாப்பிட வேண்டும்.

கணவனுக்கு மனைவி பழங்கள் கொடுத்தாள்.

கணவன்: 'சீ! இது என்ன பழமா? என் அம்மா கையால் பழங்களை வாங்கிச் சாப்பிட வேண்டும்!"

மனைவி தன் மடியில் கணவனின் தலையை வைத்துத் தூங்க வைத்தாள்.

கணவன்: 'சீ! நீ காட்டுவது பாசமா? பாசம் என்பதை என் அம்மாவிடம் தான் பார்க்க வேண்டும்!'

மனைவி: 'என்னைக் கட்டிக்கொண்டு, அம்மாவைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பதை விட உங்கள் அம்மாவையே கட்டிக்கொண்டிருக்கலாமே?'

கணவன்: 'என்ன செய்வது? எனக்கு முன்னால் என் அப்பா அவளைக் கட்டிக்கொண்டுவிட்டாரே!''

வேடிக்கையாக இருந்தாலும், இளைய தலைமுறையினர் கருத்தில் கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான உண்மை இந்தத் துணுக்கில் உள்ளது. அது வருமாறு:

"ஒப்பீட்டு ஆராய்ச்சி என்பது இலக்கியங்களுக்கு இடையே இருக்கலாம்; இதயங்களுக்கு இடையே எப்போதும் வேண்டவே வேண்டாம்!"

60

இந்தியா வளர்ந்த நாடாக வேண்டும்!

மகாராஷ்டிர முன்னாள் ஆளுநர் சி.சுப்பிரமணியம் ஒருமுறை தேசியக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்த ஓர் அரிய யோசனை:

"நாடாளுமன்றம் போன்ற உயர்நிலை அமைப்புக்கள் தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஒத்திவைக்கப்படுகின்றன.

தலைவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து, அதிகமாக விடுமுறைகளை அறிவிப்பதற்குப் பதிலாக, அத்தகைய தினங்களில் கூடுதலாக உழைக்கலாம்.

காந்தியடிகள் பிறந்த தினத்தை விடுமுறையாகக் கழிப்பதற்குப் பதிலாக, அன்றைய தினம் கூடுதலாகச் சில மணி நேரம் பணியாற்றி, காந்தியடிகளுக்கு மரியாதை செலுத்தலாம். இந்த அம்சங்களை மத்திய - மாநில அரசுகள் பரிசீலிக்க வேண்டும்."

இக்கருத்தின் தொடர்ச்சியாகவும் விரிவாகவும் தொழிலகங்களின் அனைத்திந்தியத் தலைவர் விஜய் காளந்திரி மும்பையில் தெரிவித்துள்ள சில இன்றியமையாத தகவல்கள் இங்கே மனங்கொளத்தக்கவை. அவை வருமாறு:

"அரசு விடுமுறைகளால் இந்த ஆண்டு மட்டும் நாட்டுக்கு ரூ. 2,700 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசு இன்னும் பழைய பாணியிலேயே செயல்படுகிறது. தொழில், வர்த்தகப் பிரிவினருடன் ஆலோசனை கலக்காமல் விடுமுறை அறிவிப்பதால் நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்று அது நினைத்துப் பார்ப்பதே இல்லை.

மிகவும் குறைத்து மதிப்பிட்டால்கூட ஒரு விடுமுறை நாளில் அரசுக்கு வரும் வருவாய் ரூ. 100 கோடி குறைகிறது. இதுவல்லாமல், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் ஏற்படுகிற மற்ற இழப்புகளும் உள்ளன.

ஞாயிற்றுக் கிழமைகள், விடுமுறையாகும் சனிக்கிழமைகள் மட்டுமே ஆண்டுக்கு 99 வருகின்றன. இவையல்லாமல் 27 நாட்களை விடுமுறை நாட்களாக அரசு அறிவிக்கிறது.

மத்திய அரசு, மாநில அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு, ஈட்டிய விடுப்பு என்று தனி விடுப்புகள் வேறு...

வளர்ந்த நாடுகளில் இடைவிடாமல் தொழிற்சாலைகள் செயல்படு கின்றன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் ஆகியவற்றில் பகல், இரவு பாராமல் மக்கள் சேவை செய்கின்றனர். அங்கு 24 மணி நேரமும் பணியாற்ற அனைத்து வசதிகளையும் அரசும், அமைப்புகளும் செய்து வருகின்றன. இந்தியாவில் வேலை நாட்களும் வேலை நேரமும் குறைவு, உற்பத்தித் திறன் மிகவும் குறைவு...

அனைத்து அரசு ஊழியர்களுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் 12.5 விழுக்காடு ஊதியம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வேலை நேரமோ, வேலை நாட்களோ உயர்த்தப்படவில்லை. கடுமையாக உழைத்து அதிக நேரம் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் நாட்டு மக்கள் அனைவருக்கும் வருவதற்கு அரசின் நடவடிக்கைகள் துணைபுரிய வேண்டும்".

இந்தியா எதிர்காலத்தில் வல்லரசாக வேண்டும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அதைவிட முக்கியமானது ஒன்று உண்டு. 'வளரும் நாடு' என்ற நிலையில் இருந்து மாறி 'வளர்ந்த நாடு' என்ற பெயரை - தகுதியை - இந்தியா என்று பெறுகிறதோ அன்றுதான் ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் இனிய நாளாக விடியும்; பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க திருநாளாக அமையும்.

நிறைவாக, ஓர் அரிய வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு (Anecdote) இதோ:

மதீனாவில் உள்ள ஒரு பள்ளிவாசலில் இரவும் பகலும் ஒருவர் தொழுது கொண்டிருந்தார். "இவர் யார்? இவரது குடும்பம் எப்படி வாழ்கிறது?". என்று அவரைப் பற்றி நண்பர்களிடம் விசாரித்தார் நபிகள் நாயகம். "அவர் நல்ல பக்திமான். நாள் முழுவதும் தொழுது கொண்டே இருப்பார். அவருக்கு ஒரே சகோதரர் உள்ளார். அவர் விறகு வெட்டி அதை விற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்" என்று நண்பர்கள் சொன்னார்கள்.

அதைக் கேட்ட நபிகள் நாயகம், "நண்பர்களே! இவரிடம் சொல்லுங்கள், எப்போதும் தொழுது கொண்டிருக்கும் இவரை விட, விறகு வெட்டிப் பிழைக்கும் இவர் சகோதரரே ஆயிரம் மடங்கு சிறந்தவர். குடும்ப வாழ்வுக்காக நியாயமான வழியில் உழைத்துச் சம்பாதிப்பதும் இறைவணக்கம்தான்

என்பதையும் இவரிடம் கூறுங்கள்" என்றார்.

'(தேவாதி தேவன்) உள்ளத்தில் உள்ளானடி - அது நீ உணர வேண்டும் அடி!' என்ற கவிமணியின் வாக்கை, இனி நாம் இப்படி மாற்றிக் கூறுவோம்: (எல்லாம் வல்ல இறைவன்) உழைப்பில் உள்ளானடி - அது நீ உணர வேண்டும் அடி!'

திரு. இரா. மோகன் அவர்களுக்கு

வணக்கம்

உங்களுடைய புத்தகம், "இன்பமே எந்நாளும்" திரு. பொன்ராஜ் மூலமாக வந்து சேர்ந்தது "அவரவர் பண்பறிந்து செயல்படுங்கள்" என்ற கட்டுரை மிகவும் அருமையான கருத்தை சிறப்பாக எழுதி, உள்ளத்திற்கு உவகையை அளித்தது. தங்களுடைய "அதிசயமே அதிசயக்கும் அதிசயம்" என்ற கட்டுரையை மிகவும் ரசித்தேன். என்னுடைய நன்றி.

அப்துல் கலாம்

முனைவர் இரா.மோகன் எழுதிய நூல்கள்

ஆராய்ச்சி

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்
2. அறிஞர் மு.வ.
3. கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்
4. ஆய்வியல் வழிகாட்டி *(இணையாசிரியர்)*
5. புனைகதைத் திறன்
6. பண்டிதமணியின் நடை நயம்
7. உரை மரபுகள் *(இணையாசிரியர்)*
8. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம்
9. இலக்கிய நயம்
10. இலக்கிய வளம்
11. இலக்கியச் சுடர்
12. கு.ப.ராஜகோபாலன்
13. இலக்கியச் சோலை
14. காந்தீயக் கவிஞருடன் ஒரு கைகுலுக்கல்
15. இலக்கியச் சால்பு
16. இலக்கிய அலசல்
17. வ.சுப.மாணிக்கம்
18. இலக்கிய விருந்து
19. கலைஞர் தமிழ்
20. இலக்கிய வானம்
21. கல்கி *(அச்சில்)*

பதிப்பு

22. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்
23. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் *(இணைப்பதிப்பாசிரியர்)*
24. பரல்கள் : தொகுதி 2 *(இணைப்பதிப்பாசிரியர்)*
25. பொதிகை : மலர் 1 *(இணைப்பதிப்பாசிரியர்)*
26. புகழ்பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் *(இணைப்பதிப்பாசிரியர்)*
27. பாரதி இயல் *(இணைப்பதிப்பாசிரியர்)*
28. புதுக்கவிதை அணிவகுப்பு
29. நாவல் வளர்ச்சி
30. தமிழியல் தொகுதி 1 *(இணைப்பதிப்பாசிரியர்)*
31. அண்ணல் தமிழ் *(இணைப்பதிப்பாசிரியர்)*
32. தமிழ் உலா : 2 தொகுதிகள் *(இணைப்பதிப்பாசிரியர்)*
33. பெண்ணியம் *(இணைப்பதிப்பாசிரியர்)*
34. சிற்பியின் கட்டுரைகள்
35. கல்கி நூறு
36. கல்கி கதைகள் : 2 தொகுதிகள்
37. கல்கி கட்டுரைகள் : 3 தொகுதிகள்

தொகுப்பு

38. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்
39. ஜெயகாந்தன் சிந்தனைகள்
40. சங்க இலக்கியத் தொகை
41. துணுக்கு இலக்கியம்
42. துணுக்குத் திரட்டு
43. படித்ததும் பிடித்ததும்
44. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும்
45. சிரித்ததும் சிலிர்த்ததும்

புதுக்கவிதை

46. சின்னச்சின்ன இழை *(இணையாசிரியர்)*

தன்முன்னேற்ற நூல்

47. இன்பமே எந்நாளும்